பாவேந்தரின் உலக நோக்கு

முனைவர் **இரா.இளவரசு**

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

பாவேந்தரின் உலகநோக்கு

ஆசிரியர்

முனைவர் இரா.இளவரசு

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ்ச்சாலை,எழும்பூர்,சென்னை–8

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	பாவேந்தரின் உலகநோக்கு
ஆசிரியர்	:	முனைவர் இரா.இளவரசு
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை - 600 008.
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2019-2020
விலை	:	ரூ.80
பக்கம்	:	144
படிகள்	:	1500
தாள்	:	70ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி.வளாகம், தரமணி சென்னை - 600 113.
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி.வளாகம், தரமணி சென்னை - 600 113.
பொருண்மை	:	வரலாறு

முனைவர் கோ. விசயராகவன் எம்,ஏ., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பி.எட்., பி.எச்.டி.,
இயக்குநர்
தமிழ்வளர்ச்சித் துறை
தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை - 08.

அணிந்துரை

சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவை மாணவர்களுக்கும் மக்களுக்கும் தமிழார்வலர்களுக்கு எளிதில் கிடைக்குமாறு மறுஅிசுச் செய்யும் தமிழ்ப்பணியைத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. இவ்வரிசையில்முனைவர் இரா.இளவரசு எழுதிய ‘‘பாவேந்தரின் உலகநோக்கு’’ என்னும் நூல் மறு அச்சுச் செய்யப்படுகிறது. உலகை ஒழுங்கு முறையில் இனிது நடாத்தி வரும் அமைப்புக்கள் பலப்பல. அவைகளுள் உயிர்ப்பாய்த் திகழ்வது ஒன்று. அது நூல் என்பது.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள பாரதிதாசன் உயராய்வு மையத்தின் பேராசிரியரான முனைவர் இரா.இளவரசு எழுதிய ‘‘பாவேந்தரின் உலகநோக்கு’’ என்னும் நூலினைப் படித்து மிக்க மகிழ்வுற்றேன். தமிழ் வளர்த்திடல் மற்றும் சாதி ஒழித்திடல் போன்ற நாட்டுப்பற்று கொண்ட பல கட்டுரைகளையும் பாடல்களையும் இயற்றிய பாவேந்தர் பாரதிதாசன், உலகநோக்குடன் எழுதியுள்ள கட்டுரைகளையும் பாடல்களையும் ஆய்வுசெய்து முனைவர் இரா.இளவரசு இந்நூலை எழுதியுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய ஆய்வினை வளர்த்தெடுப்பது, அவர் கருத்துக்களைப் பரப்புவது, ஆய்வுச் சொற்பொழிவுகள் (ம) கருத்தரங்குகள் நடத்துவது. இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் அவர் படைப்புகளை மொழிபெயர்ப்பது ஆகியன பாரதிதாசன் உயராய்வு மையத்தின் செயல்பாடுகளாகும். பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய பல அரிய செய்திகளை வெளிக்கொண்டு வந்த பெருமை பாரதிதாசன் உயராய்வு மையத்தையே சேரும்.

பிரெஞ்சுக் குடிமகனாகிய பாவேந்தர் பாரதிதாசன் புதுச்சேரிப் பகுதியில் தொழிலாளர் உரிமைக்காக, மக்கள் நலத்திற்காக நடந்த போராட்டங்களில் எவ்வாறு தன்னை

ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை நூலின் இறுதிப்பகுதி ஆதாரங்களோடு விளக்குகிறது.

இவ்வாறு பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய பல அரிய செய்திகளைத் திரட்டி வெளியிட்டுள்ள ஆசிரியரின் அயராத முயற்சியையும், கடுமையான உழைப்பையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்நூல் மறு அச்சாகி எல்லா மக்களுக்கும் எளிதில் கிடைத்திடவேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழ்வளர்ச்சித் துறைக்கு நன்றி.

தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு என்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நன்றிக் கடப்பாடுடையது. அவர்தம் நெறியில் அருந்தமிழ், வளர்த்து அன்னைத் தமிழ்நாட்டை காத்துவரும் இந்நாள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியியல் துறை அமைச்சர் **க.பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் **திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அந்நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

பொருள்நிரல்

வாயிலில்...

குறுக்க விளக்கம்

இயல் ஒன்று

1.1	நோக்கம்	... 21
1.2	இந்த நிலையில்...	... 22
1.3	பாரதியை உலகப்படைப்பாளிகளொடு...	... 23
1.4	உலகக் கவிஞர்களொடு பாரதிதாசன்	... 24
1.5	அனைத்துவகை ஆதிக்க எதிர்ப்பு	... 28
1.5.1	மொழி ஆதிக்கம்	... 29
1.5.2	நாட்டாதிக்கம்	... 30
1.5.3	சாதிமத ஆதிக்கம்	... 31
1.5.4	பொருளியல் ஆதிக்கம்	... 31
1.5.5	ஆணாதிக்கம்	... 32
1.6	மானிட ஆற்றலின் மாட்சி	... 32
1.7	முடியரசை மாற்றும் குடியரசுக் கவிஞர்	... 33
1.8	மொழிஇன நாட்டுப்பற்றும் உலகப்பற்றும்	... 34
1.9	உலகநாட்டம்	... 34
1.10	புதிய சொல்லாட்சி	... 35
1.11.	உலகுக்குக் கொடுத்துக் கொள்ளுதல்	... 36
1.12	படைப்புகளில் உலக முதன்மை - புதிய உலகம்	... 36
1.13	இந்திய அளவில் சில நடப்புகளும் பாரதிதாசனும்	... 39

1.13.1	பீகார் நிலநடுக்கம்	...	39
1.13.2	குவெட்டா நிலநடுக்கம்	...	40
1.13.3	சீன எதிர்ப்பு	...	43

இயல் இரண்டு

2.1	இலங்கைத் தமிழர் நிலை	...	47
2.2	திபேத்து விடுதலை	...	51
2.3	செருமனித் தொடர்பு நிகழ்ச்சிகள்	...	53
2.3.1	எம்டன் கப்பல் வருகை	...	53
2.3.2	இண்டன்பெர்க்கும் இட்லரும்	...	56
2.3.3	இட்லர் எதிர்ப்பும் ஆங்கில அரசுக்கு ஆதரவும்	...	58
2.4	அமெரிக்காவின் அடாத செயல்கள்	...	61
2.4.1	சப்பானில் விழுந்த குண்டு	...	61
2.4.2	வியட்நாம் போர்	...	64
2.5	அமெரிக்காவுக்குப் பாராட்டு	...	68
2.5.1	சப்பான் வழி தப்பானது	...	68
2.5.2	நல்ல அமெரிக்கனும் பொல்லா அமெரிக்கனும்	...	70
2.6	உருசியா உலகின் உயிர்	...	70
2.6.1	இரண்டாம் உலகப்போரும் இட்லரின் வீழ்ச்சியும்	...	70
2.6.2	இலெனினை ஈன்றே தீரும்	...	74
2.6.3	தமிழ்நாட்டில் உருசியா	...	74
2.6.4	அங்கும் இங்கும்	...	75
2.7	உருசியாவின் தவறான நடவடிக்கைகள்	...	76
2.7.1	விண்ணிற் பயணமும் மண்ணில் வறுமையும்	...	76
2.7.2	வரிசை கெட்ட உருசிய நாடு	...	78
2.7.3	பெண்கள் காமம் கழிக்கும் கலயமா?	...	79
2.8	சீனா - குமாய்த்தீவு மேற்குண்டு	...	82

இயல் மூன்று

3.1	சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்	...	85
3.2	முதல் வகுப்புப் பாடப்புத்தகம்	...	92

3.3	வறியவர்க்கும் கல்வி	... 93
3.4	இருவேறு பட்டியல்கள்	... 95
3.5	பேதம் கொண்டோர்க்குப் பிரான்சில் இடமில்லை	... 97
3.6	விக்டர் யூகோ	... 98
3.7	உரிமை உணர்வு	... 99
3.8	தொழிற்சங்க உரிமைப்போர்	... 100
3.9	தொழிலாளர் சட்டத்தமிழாக்கம்	... 102
3.10	பாரிசு விடுதலை	... 104
3.11	பிரெஞ்சியரின் மொழிப்பற்று	... 106
3.12	புதுவை இணைப்பு இயக்கம்	... 107
3.13	பிரெஞ்சுக்காரர்களின் கொடுஞ்செயல்	... 114
3.14	தொகுப்பும் முடிப்பும்	... 114

இணைப்புகள்

1.	பாரதிதாசன் படைப்புகளின் பட்டியல்	... 118
2.	பாரதிதாசன் உயராய்வு மையம்	... 127
3.	மனிதனை நாடி...	... 134

எழுத உதவிய ஏடுகள் ... *139*

வாயிலில்...

அதற்கு முன் அரும்பியும், துளிர்த்தும், தலைகாட்டியும் இருந்த தமிழ் மறுமலர்ச்சிக்கூறுகள் அனைத்தும் வீறுபெற்று மலர்ந்து, தழைத்து, மேலோங்குதற்குப் பெரிய அடிப்படையாக அமைந்தது இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கம் (1937). இந்த இயக்கம் ஈன்ற விடியல் முழக்கமே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பது. இம்முழக்கத்தை முன் வைத்துத் தமிழ்த் தேசிய இனத்தின் தனித் தன்மைகளை உயர்த்திப் பிடித்து உரிமைக்குரல் கொடுப்பதாய் முகிழ்த்ததே திராவிட இயக்கம். திராவிட இயக்க வரலாற்றில் தமிழியச் சாரங்களை உள்ளோட்டமாக மக்களிடையே கொண்டு சென்றதில் திராவிட முன்னேற்றக்கழகத்திற்குப் பெரும் பங்குண்டு. இப்பணிக்குப் பாரதிதாசனின் படைப்புகள் - பாடல்கள் பெரிதும் பயன்பட்டன. தமிழ்த் தேசியத் தலைமைப் பாவலராக ஒளிர்ந்த அவர் இயக்க வினைப்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் பாடல்கள் மேடைகள் தோறும் முழங்கின. ஏடுகள் பலவற்றிலும் இடம்பெற்று எழுச்சிக்கு உரமிட்டன.

பாரதிதாசன் பாடல்களை இவ்வாறு பயன்படுத்தியவர்களில் தலைமை சான்ற இடம் நாவலர் நெடுஞ்செழியனுக்குண்டு. ஓங்கி ஒலிக்கும் அவர் எழுச்சி முழக்கத்தைக் கேட்டு 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்னும் உணர்வினை இளமையிலேயே பெற்றவன் யான். உணர்வு வளரவளரப் பாரதிதாசன்மீது கொண்ட ஈடுபாடு மிகுவதாயிற்று. பாரதிதாசனைப் பன்முறை பயிலத்தொடங்கினேன். பயிலப்பயில அவரின் பன்முக ஆற்றல் என்னை வியப்புக்குள்ளாக்கிற்று. பலர்க்கும் தெரிய வேண்டிய - தெரிவிக்க வேண்டிய செய்திகள் பல இலைமறைகாயாக, நீறு பூத்த நெருப்பாக, மண்ணடிப்பொன்னாக மறையுண்டிருப்பது தெரிந்தது. அவற்றை உலகின்முன் வைக்கும்வேட்கையின் விளைவே 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' என்னும் என் முன்னூல். தொடரும் அப்பணியின் ஒரு பகுதியாக உருவாகி இருப்பதே 'பாவேந்தரின் உலகநோக்கு' என்னும் உங்கள் கைகளில் உள்ள இந்நூல்.

பாவேந்தரின் பார்வை விரிவை வெளிப்படுத்தும் வகையில் 'பாரதிதாசனின் குறுகிய கண்ணோட்டம்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். அக்கட்டுரை சென்னைத் துறைமுகப்பகுதி இந்திய உணவுக் கழகத்தின் சிந்தனையாளர் கழக ஆண்டுமலரில் (1979-80) வெளியாயிற்று.

அக்கட்டுரையின் சில பகுதிகள் 'பாரதிதாசனின் சர்வதேசியம்' என்று தலைப்பிடப்பட்டுத் 'தினச்செய்தி' என்னும் நாளிதழில் (29.4.1979 ப.2) மறுவெளியீடு செய்யப்பட்டன.

கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நடத்திய பாவேந்தர் நூற்றாண்டு விழா (16.9.90) உரையரங்கிற்குத் தலைமையேற்று 'உலகம் - தமிழகம் - பாவேந்தர்' பற்றி உரையாற்றினேன். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் 1989-90ஆம் ஆண்டுக்கான 'பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு' நிகழ்த்தும்வாய்ப்பு வாய்த்தது. 1991 மார்ச்சு 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் 'பாவேந்தரின் உலகளாவிய நோக்கு' என்னும் தலைப்பில் அச்சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. உலகளாவிய அவரின் பார்வை விரிவு நோக்கிய செய்திகளைப் பேரளவு முழுமையாகத் தொகுத்து நோக்கும்வாய்ப்பை அச்சொற்பொழிவு வழங்கியது. பின்னர் திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள 'டாக்டர் மா.இராசமாணிக்கனார் வர்லாற்றாய்வு மையம்', 'இந்திய மருத்துவ மன்றம்' ஆகியவற்றிலும் வேறு சில அரங்குகளிலும் உலகநோக்குப் பொருளில் உரையாற்றினேன். இப்படித் தொடர்ச்சியாக ஒரு பொருள் பற்றி நீள நினைத்ததன் விளைவாகப் பழையன சில கழிதலும் புதியன சில புகுதலும் நேர்ந்தன.

முதலில் எழுதிய கட்டுரையில் மாமனிதர் இலெனின் பற்றிய இரண்டு பாடல்களின் கருத்துகளை இணைத்திருந்தேன். அவ்விரண்டு பாடல்களும் 'புகழ்மலர்கள்' (ஏப்ரல் 1978) என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளவை. அவை முறையே 'லெனின்' (ப. 67) 'காலஞ்சென்ற நிக்கோலாய் லெனின், (ப. 68-70) என்னும் தலைப்புகளில் அமைந்தவை. அப்பாடல்களைப் பாரதிதாசன் பாடல்கள் எனக் கொண்டு என்னைப் போலவே பலரும் கையாண்டுள்ளனர். ஆனால் அவை பாரதிதாசன் பாடியவையல்ல.

இலெனினைப் போற்றுவதாய் அமைந்துள்ள 'யுகமாகி நின்ற இலெனின்' எனத் தொடங்கும் பாடல் 1918இல் 'ஜனவநோதினி' என்னும் இதழில் வெளிவந்ததாக நூலில் குறிக்கப்பெற்றுள்ளது. இப்பெயரில் அக்காலத்தில் இதழ் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. 'ஜனவிநோதினி' என்னும் இதழ்ப்பெயர் அச்சுப்பிழையால் 'ஜனவநோதினி' ஆகி இருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு. ஆனால் 'ஜனவிநோதினி' என்னும் பெயரில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திங்களிதழ் ஒன்றும் (1870) வாரஇதழ் ஒன்றும் (1896) தோன்றி மறைந்ததாக அறிய முடிகிறது. மேலும் இப்பாடல் வெளியிடப்பெற்ற ஆண்டாகக் குறிக்கப்பெறும் காலமும் பாரதிதாசனின் பாட்டிலக்கியப் படைப்பு வரலாற்றுக்குப் பொருந்துவதாய் அமையவில்லை. 1918இல் இலெனினை அறிந்து பாடல் புனையும் சிந்தனைப் போக்கு அவரிடம் இருந்ததாகக் கொள்ள எந்த அடிப்படையும் இல்லை. பாடல் வெளியான இதழ்ப் பெயரும் காலமும் நம்பகத்துக்

குரியவையல்ல என்பதோடு பாடலின் மொழி நடையும் பாரதிதாசனிலிருந்து மிகவும் விலகி நிற்கின்றது.

இலெனின் 1924 சனவரி 21இல் காலமானார். அவர் மறைவை யொட்டி எழுதப்பெற்ற 'காலஞ் சென்ற நிக்கோலாய் லெனின்' என்னும் பாடல் 1924 பிப்ரவரி 12இல் வெளிவந்ததாக நூலில் குறிக்கப்பெற்றுள்ளது. எந்த இதழில் வெளிவந்தது என்பது பற்றிய எக்குறிப்பும் இல்லை. பாடல் பாரதிதாசனால் எழுதப்படவில்லை என்பதற்கு வலிவான சான்று கிடைத்துள்ளது. அறிஞர் தொ.மு.சி. இரகுநாதன் தனது 'அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும்' என்னும் நூலில் (ப. 32-33) இப்பாடலை எடுத்து அளித்து, இதை எழுதியவர் பற்றிய குறிப்பையும் கொடுத்துள்ளார். அக்குறிப்பாவது:

> ''21.2.1924 லோகோபகாரி வார இதழில் பாஸ்கர ஆதிமூர்த்தி எனும் இளங்கவிஞர் எழுதிய பாடல் இது. இக்கவிஞர் காசி நகரவாசியாக, திருநெல்வேலி ஜவுளி வியாபாரிகளான கே.எஸ்.முத்தையா அண்டு கம்பெனி, காசி நகரில் வைத்திருந்த கிளைக்கடையோடு சம்பந்தப் பட்டவராக இருந்தவர்''

இக்குறிப்பு சரியானதென்பது 'புகழ்மலர்கள்' நூலின் அச்சீட்டுக்குப் பயன்பட்ட தட்டச்சுப்படியின் வழி உறுதிசெய்யப்பட்டது. அதில் 'லோகோபகாரி' என்னும் இதழ்ப்பெயரும் 1924, பிப்ரவரி 21 என்னும் காலமும் பேனாவால் சரியாகக் குறிக்கப்பட்டிருந்ததோடு 'ஆதிமூர்த்தி' என்னும் பெயரின்மேல் பாரதிதாசன் என்று திருத்தப்பட்டிருந்தது. பாடலின் தலைப்பின்கீழ் 'சரமகவி' எனத் தட்டச்சுச் செய்த பகுதியும் அடிக்கப்பட்டி ருந்தது. பூம்புகார்ப் பிரசுரத்தாரிடமிருந்து பெறப்பட்ட அந்தத் தட்டச்சுப் படி என்னிடமுள்ளது. நூலில் '21' ஆகிய நாள் '12' ஆக மாறியுள்ளது. தொகுப்பாளர் திட்டமிட்டுச் செய்த இடைச்செருகல் இது எனலாம்.

பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் இதழில் (வெ.6, ப.20-21) 'யதுகுல நாசமும் ஜாதிப்போரும்' என்னும் தலைப்பில் சாதியொழிப்புக் கருத்தை வலியுறுத்திப் பதினொரு அறுசீர் விருத்தங்களாலாகிய பாடலை 'B.ஆதிமூர்த்தி' என்பவர் எழுதியுள்ளார். அவரும் மேற்குறித்த 'பாஸ்கர ஆதிமூர்த்தி'யும் ஒருவராக லாம். இவண் நினைக்கத்தக்க செய்தி இது.

இவ்வாறு காலவோட்டத்தில் சில பாடல் கருத்துகள் விலக்கப்பட்டன. பல புதிய செய்திகள் சான்றுகளின் அடிப்படையில் இணைக்கப்பெற்றன.

பாரதிதாசனை உலகக்கவிஞர்களுள் ஒருவராகக் கொண்டும் அவர் பாடல்களில் காணும் உலக நோக்கை விளக்கியும் சில கட்டுரைகள்

வெளிவந்துள்ளன. அவற்றில் இடம்பெறாத பல செய்திகள் இந்நூலை அணி செய்கின்றன.

பாரதிதாசன் இவ்வுலக நடப்புகளில் தனது பார்வையைச் செலுத்திய தோடு சிவபெருமானின் பரமண்டலமாகிய 'மேலுலகம்', செவ்வாய்க் கோளாகிய 'செவ்வாய் உலகம்' ஆகியன பற்றியும் கற்பனை செய்துள்ளார்.

இளமையில் சைவ சமயத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த பாரதிதாசன் 'கிறுக்கன்' என்னும் புனைபெயரில் 'பரமண்டலத்திலிருக்கும் பரமசிவனுக்கோர் பகிரங்கக்கடிதம்' என்னும் தலைப்பில் சிவனை நோக்கிப் பலகேள்விகள் கேட்பதாக நெடிய கடிதம் ஒன்றை (புதுவை முரசு விசேஷ அனுபந்தம் மார்ச்சு 1932) எழுதியுள்ளார். அஞ்சல் தலை ஒட்டவேண்டிய இடத்தில் 'பரமசிவன் கடவுளாதலால் ஸ்டாம்பு ஒட்டப்படவில்லை' என்னும் குறிப்பு இடம்பெற்றுள்ளது. முகவரியை எழுதும்போது பெயருக்கு முன் சுழி (சைபர்) எழுதப்பட்டு ''0 பரமசிவம் அவர்கள் கைலாசம் (ஜில்லா), வானுலகம் ஆகாயம் (வயா)'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இது பற்றிக் கடிதத்தினுள் எழுதும்போது ''தங்களுடைய தந்தையின்·பெயர் எனக்குத் தெரியாது. ஆதலால் ''பரமசிவன் அவர்கள்'' என்பதற்கு முன் 0 (சைபர்) போட்டிருக்கிறேன்'' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. கிண்டற்சுவை மலிய எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில் சிவரெுமான் தொடர்பாகப் புராணங்களில் கூறப்படும் பெரும்பாலான செய்திகள் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து வைக்கப்பட்டுக் கேள்விக்குள்ளாக்கப் படுகின்றன.

பாரதிதாசனுக்குப் பெரியபுராணம், சிவபுராணம் முதலிய சைவ சமயப்புராணங்களில், சாத்திரங்களில் உள்ள பயிற்சியை, ஈடுபாட்டை அறிந்து கொள்ளும் வகையில் மேலுலகக் கற்பனையோடு இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அறக்கட்டளைச் சொற்பொழிவில் இக்கடிதச் செய்தியை முன்வைத்துப் பேசினேன். சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த பேராசிரியர் ஒருவர் 'இக்கடிதம் குத்தூசி குருசாமியால் எழுதப்பட்டது; அவர் பெயரில் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது' என்றார். நான் 'கிறுக்கன் என்னும் புனைபெயர் பாரதிதாசனுக்கு உரியது; 'மானுடம் போற்று' என்னும் நூலில் பாரதிதாசன் படைப்பாக இக்கடிதம் சேர்க்கப்பட்டுள்ளது' என்றேன். கிறுக்கன் என்னும் புனைபெயரில் புதுவை முரசு விசேஷ அனுபந்தத்தில் (மார்ச்சு 1932) ''ங ங ங ஃ'' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையைக் குத்தூசி குருசமி அவர்கள் பிற்காலத்தில் தான் நடத்திய அறிவுப்பாதை இதழில் (14.8.1964) மறுவெளியீடு செய்து, எழுதியவர் பெயரைப் 'பாரதிதாசன்' என்று குறித்துள்ளார். இதிலிருந்து கிறுக்கன் என்னும் புனைபெயரில் வெளியிடப் பட்டவை பாரதிதாசன் எழுதியவை எனக் கொள்வதற்குக் குருசாமியே

துணைநிற்பதை அறியலாம். முனைவர் ச.சு.இளங்கோ அறிவுப்பாதைக் குறிப்பை அளித்துள்ளார் (மானுடம் போற்று - கருத்துரை). இதன் மெய்ம்மையைக் கண்டறிய அறிவுப்பாதை இதழ்களைத் துருவினேன். எனக்குக் கிடைத்த இதழ்த்தொகுப்புகள் இரண்டிலும் 'ங ங ங ஃ' என்னும் கட்டுரை இடம்பெற்றிருந்த பக்கம் (ப.6) கிழிக்கப்பட்டிருந்தது. என் தேடல் தொடர்ந்தது. அருமுயற்சிக்குப்பின் பெரும்புலவர் வி.பொ. பழனிவேலனார் தொகுப்பிலிருந்து அவர் மகள் முனைவர் தமிழ்ப்பாவை வழி அறிவுப்பாதை முழுஇதழைப் பெற்றேன். முனைவர் ச.சு.இளங்கோவின் குறிப்பு சரியென்பது உறுதி செய்யப்பட்டது. பாரதிதாசன் படைப்பைக் குருசாமிக்கு உரியதாக்கி நூலாக்கியுள்ள அவலமும் புலப்பட்டது.

செவ்வாய்க்கோள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அறிவியலாளர்கள், அங்கே உயிர்கள் வாழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்கின்றனர். அண்மைக்கால ஆய்வின் பயன் இது. பாரதிதாசன் செவ்வாய்க் கோளினைக் கதைக்களமாகக் கொண்டு ''கண்ணுக்குத் தெரியாத சுமை - செவ்வாயுலக யாத்திரை'' என்னும் தலைப்பில் புதுவை முரசு இதழில் (5.1.1931) சிறுகதை எழுதியுள்ளார்.

புதுவையிலிருந்து சாதிமதங்களால் வேறுபட்ட ஆறுபேர் செவ்வாய்க் கோளுக்கு வானூர்திவழிச் செல்கின்றனர். நிலவுலகைப்போல அங்கும் மனிதர்கள் வாழ்வதாகப் பாரதிதாசன் கற்பனை செய்கிறார். அவர்கள் சிவப்பு நிறமுடையவர்களாகவும் நம்மைவிடச் சிறிது உயரமுடையவர்களாகவும் உள்ளனர். குழந்தைகள் உள்ளிட்ட மனிதர்கள் அனைவரும் தலையின் மேல் கல்லைச் சுமந்தபடி இயங்குகின்றனர். அது 'கடவுள் ஏற்பாடு' என்று காரணம் சொல்கின்றனர். சிலவிதப் பழங்களும் பலவிதக் கிழங்குகளும் அவர்களின் உணவுப் பொருள்களாக அமைந்துள்ளன. அங்குக் குணத்தில் பூனையையும் உருவத்தில் குரங்கையும் பருமனில் ஒரு பலாப்பழத்தையும் ஒத்த வீட்டு விலங்கு உள்ளது. அவர்களிடையே சாதி சமய வேறுபாடில்லை.

சாதிசமய வேறுபாடுகளோடு இங்கிருந்து செவ்வாயுலகம் சென்றவர்கள் அவ்வேறுபாடு காரணமாக அங்கும் பூசலிட்டுக் கொள்கின்றனர். அங்குள்ளவர்கள் இதைக்கண்டு நகைத்து இவ்வேறுபாடுகளை விட்டொழித்தபிறகே உங்கள் உலகை நீங்கள் அடையமுடியும் என்று கூறுகின்றனர்.

பாரதிதாசன் படைத்துக்காட்டும் செவ்வாயுலகம் நாம் வாழும் நிலவுலகத்தில் இருந்து சில நிலைகளில் வேறுபட்டதாகவும், உயர்ந்ததாகவும் அமைந்துள்ளது.

இல்லாத பரமண்டலமாகிய மேலுலகம், இருக்கின்ற செவ்வாயுலகம் ஆகியவை பற்றி இந்நூலுக்குள் பேசப்படவில்லை. எனினும் பாரதிதாசன் பார்வை வேறு உலகுகளிலும் பதிந்துள்ளது, பரந்துள்ளது என்பதை உணர இச்செய்திகள் பயன்படும் என்பதால் ஈண்டு அளிக்கப்பட்டுள்ளன.

அணுக்குண்டு வீச்சால் கிரோசிமா, நாகசாகி அழிவு தொடர்பான குறிப்புகளைத் திரட்டியபோது சிறிது மலைப்பு ஏற்பட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றிய குறிப்புகள் வேறுபட்டிருந்தன. கிரோசிமா, நாகசாகியில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை முறையே 80,000, 40,000 எனவும் (அணுசக்தியின் கதை, ப. 66) 2,00,000, 1,40,000 எனவும் (Riding the Nuclear Tiger p. 27) 1,40,000, 70,000 எனவும் (சங்கொலி ப. 14) ஏறத்தாழ 1,50,000, 75,000 எனவும் (The Chambers Dictionary of World History pp. 417 & 642) இரு நகரங்களிலும் கொல்லப்பட்டவர்கள் ஒட்டுமொத்தமாக 4,47,000 பேர் எனவும், (இரண்டாவது உலக யுத்தம், ப. 459) பலவாறு குறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் சேம்பர் உலக வரலாற்று அகராதி தரும் குறிப்பு அதன் நம்பகத்தன்மை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. குண்டுவீச்சின் பின்விளைவுகளால் இன்று வரை ஏற்பட்டுள்ள இழப்பு இதில் சேர்க்கப்படவில்லை.

பிரெஞ்சுப்புரட்சி உலகுக்கு வழங்கிய 'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் முழக்கத்தின் மூலத்தைத் தேடுவதிலும் இடர்ப்பாடு ஏற்பட்டது. முத்தொடர்களில் ஒவ்வொன்றையும் தனித்தனியே சிலர் பேசியுள்ளனர்; எழுதியுள்ளனர். மூன்றையும் இணைத்துக் குறிக்கோள் தொடராக மாற்றியவர் யார் என்பதை அறியப் பலரிடம் உசாவினேன். பன்னூல் புரட்டினேன். பயனில்லை. இறுதியில் பாரதிதாசன் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் முனைவர் நா.இராசேந்திரன் தேடியளித்த குறிப்புகளின் அடிப்படையில் அத்தேவை ஒருவாறு நிறைவு செய்யப்பட்டது.

பாரதிதாசன் 'வெர்ஹேரன்' என்னும் கவிஞர் பெயரைக் குறிப்பிட்டு அவர் அயர்லாந்துக்காரர், அயிரிய மொழியில் அவர் எழுதிய சுருக்கப்பாட்டு (ஹொக்கு) களை ஆங்கில வடிவில் பாரதியார் பன்முறை படித்தும் பிறர்க்குப் படித்துக்காட்டியும் பாராட்டி மகிழ்வார் என்பதையும், அப்பாட்டுகளில் ஒன்றினைப் பாரதியாரே தமிழாக்கினார் என்று குறித்து அறுசீர் விருத்த அமைப்பிலான அப்பாடலையும் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் (பா.தா.கு. 10.10.1967 ப. 22-23). பாரதியாரை உலகக் கவிஞர்களோடு ஒப்பிட்டுப் பாடும் பாடலிலும் 'வெர்ஹேரனை அயர்லாந்தில் ஐரிஷ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்' என்று புகழ்ந்து பேசுகிறார்.

பாரதி நூல்களை வெளியிடுவது பற்றிச் சென்னை 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' வெளியிட்ட தமிழ் அச்சுக் கடிதத்தில் (1921) 'வெர்ஹேரன் பெல்ஜியம் தேசத்துக் கவிச்சக்கரவர்த்தி' என்பதும் அவரைப் பற்றி 'ஐர்லாந்து தேசத்து மகாகவி ஜேம்ஸ். எச்.கஸின்ஸ்' 1916 டிசம்பர் எட்டாம் தேதியன்று 'காமன்வீல்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் அவருடன் பாரதி உள்ளிட்ட இந்தியக் கவிஞர்கள் சிலரை ஒருங்குவைத்துப் பாராட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கன. (சித்திர பாரதி ப.156 - 157). இதிலிருந்து

வெர்கேரன் அயர்லாந்துக் கவிஞர் அல்லர், பெல்சியக் கவிஞர் என்பதும் புலனாகின்றன. மும்மொழிச் சூழல் அமைந்த பெல்சியத்தின் தலைசிறந்த பிரெஞ்சுக் கவிஞராகத் திகழ்ந்தவர் வெர்கேரன். அவரைப்பற்றி எழுதிய அயர்லாந்துக் கவிஞர் கசின்சு விரும்பிக் கேட்டுப் பாரதியின் பாடல்களை ஆங்கிலவாக்கம் செய்தார்; இதனைப் பாரதிதாசன் நன்கு அறிவார் (மகாகவி பாரதியார் - தேன் கவிகள் தேவை) வெர்கேரன் பற்றிய குறிப்பில் நாடும் மொழியும் திருத்தத்திற்குரியன. எனினும் பாரதிதாசனின் பாடல் வரிகள் அவ்வாறே இங்கு ஆளப்பட்டுள்ளன.

நூலின் மேற்கோள் பகுதிகள், ஆய்வு நெறிப்படி, மூலத்தில் உள்ளவாறே - அவற்றில் காணப்படும் எழுத்து, சொல், தொடர்ப் பிழைகள் திருத்தம் பெறாமலேயே அளிக்கப்பெற்றுள்ளன.

மொழிநடையைப் பற்றிய ஒரு குறிப்பு. உலகெங்கும், தனக்கென எழுத்தினைப் பெற்ற எம்மொழியிலும் அம்மொழியில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தியே அயல்மொழிகளுக்குரிய ஒலிகளை எழுதி வருகின்றனர். எழுத்துகளைக் கடன்பெற்று எழுதும் வழக்கம் இல்லை. இதற்கு மாறாகச் சமற்கிருத மொழிக் கிரந்த எழுத்துகளைத் தயங்காமல் தமிழில் பயன்படுத்து வதையும் ‘ஜெயராஜ்’ என்பதைச் ‘செயராசு’ என்று எழுதினால் பெயரின் ‘காம்பீர்யம்’ காணாமல் போய்விட்டது என்று கவலைப்படுவதையும் காண்கிறோம். ‘கலைமகள்’ என்பதை Kalaimakal என்றே ‘ல்’ ‘ள்’ ஒலிகளின் வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல், ஆங்கிலத்தில் உள்ள 'l' என்னும் ஒரெழுத்தையே பயன்படுத்தி எழுதுகிறோம். பிறமொழிகளில் நம் பெயர்களை எழுதும்போது அம்மொழி எழுத்துகளையே பயன்படுத்தும் மரபைப் போற்றும் நாம், தமிழ் மொழிக்கும் அத்தகைய மரபு உண்டு என்பதை மறந்துவிடுதல் நன்றன்று. இந்நூலில் பிறமொழி ஒலிகளுக்கான வேற்றெழுத்துகள் இயன்றளவு தவிர்க்கப்பட்டு அவ்விடங்களில் தமிழ் எழுத்துகளே ஆளப்பட்டுள்ளன.

இந்நூல் ஒருவகைப் பொருட்பாகுபாட்டு அடிப்படையில் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் இயல், நூல் நோக்கத்தைச் சுட்டிப் பாவேந்தரின் உலக நோக்கை உணர்வதற்கான சில அடிப்படைக் கூறுகளைக் குறிப்பிட்டுத் தமிழகத்திற்கு அப்பால் இந்திய அளவில் ஏற்பட்ட சில நிகழ்வுகளைப் பற்றி அவருடைய பார்வை விரிந்து சென்று பதிந்து இருப்பதை விளக்குகின்றது.

இரண்டாம் இயல், இலங்கை, திபேத்து, செருமனி,சப்பான், அமெரிக்கா, உருசியா, சீனம் ஆகிய நாடுகளின் நடப்புகள்; போக்குகள் பாரதிதாசன் கவனத்தை எவ்வாறு ஈர்த்துள்ளன என்பது பற்றியும் அவ்வந்நாட்டு நிகழ்வுகள் பற்றி அவரின் மதிப்பீடு குறித்தும் பேசுகின்றது.

பாரதிதாசன் குடிமகனாக இருந்த பிரெஞ்சு நாட்டின் கோட்பாடுகள், நடப்புகள், ஆட்சிமுறை முதலியவை குறித்தும்பாரதிதாசன் எங்கெங்கு என்னென்ன பதிவு செய்துள்ளார் என்பவற்றைத் தொகுத்தும் பகுத்தும் விளக்குவதோடு அவை தொடர்பான மதிப்பீட்டையும் முன் வைக்கிறது மூன்றாம் இயல்.

இறுதியில் பாரதிதாசன் படைப்புகளின் காலவரிசைப் பட்டியல்கள், உயராய்வு மையம் பற்றிய ஒரு வரைவு, மையப் பேராசிரியரின் ஒரு பாடல் ஆகியவை இணைப்புகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

பாரதிதாசன் படைப்புகளின் ஒட்டுமொத்தப் பட்டியல் பாடல்கள், நாடகங்கள், பிற உரைநடை ஆக்கங்கள் என மூவகைப்படுத்தப்பட்டு, இயன்ற வரையில் முதன்முறையாகத் துல்லியமான காலக்குறிப்புகளோடு ஆய்வுலகின் முன் வைக்கப்படுகின்றது. தொகுப்புகளாக வெளிவந்த படைப்புகளில் பலர்க்கும் தெரிய வேண்டியவை என்ற நோக்கில் நாடகங்கள், புதினங்கள் முதலிய சிலவற்றிற்கு மட்டும் தொகுப்பில் அடங்கிய படைப்புகளும் தனித்தனியே குறிக்கப்பட்டுள்ளன.

உயராய்வு மையம் பற்றித் தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்து கொள்ளும் வகையில் அதன் தோற்றம் தொடங்கிப் பணிகள் ஈறாகச் சில செய்திகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரின் உலகநோக்கைப் புலப்படுத்தும் இந்நூலில் அவரின் பாட்டு மரபு இடையறவுபடாமல் வளர்ந்து வருகிறது என்பதைப் புலப்படுத்தும் நோக்கில் ‘மனிதனை நாடி’ என்னும் மையப் பேராசிரியரின் அகவற்பா இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் உருவாக்கத்திற்கு உறுதுணையானவர்கள் பலர். முதலில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் அற்றைத் தலைவர் முனைவர் பொற்கோ அவர்களுக்கு என் அகங்கனிந்த நன்றி.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் என் வாழ்நாள் ஈடுபாட்டிற்கு வடிவம் அளிக்கும் வாய்ப்பாகப் பாரதிதாசன் உயராய்வு மையத்தின் பேராசிரியராக என்னை அழைத்தது. ஆய்வாளர்களுக்குத் துணைசெய்யும் ‘நோக்கு நூல்’களை உருவாக்கும் அடிப்படைப் பணிகளை மையம் மேற்கொண் டுள்ளது. அவை விரைவில் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும். மையத்தின் பேராசிரியப் பொறுப்பு இந்நூல் விரிவும் செழுமையும் பெற மிகவும் உதவிற்று. முன்னாள், இந்நாள் பல்கலைக்கழக ஆட்சியாளர் அனைவரையும் நன்றியோடு நினைவுகூர்கிறேன். குறிப்பாகத் துணைவேந்தர் முனைவர் மு.மாரியப்பன் அவர்கள் எமது மையம் இன்னும் சிறப்பாகச் செயல்படச் செய்தக்க செய்யவேண்டும் என்னும் பெருவிருப்புடையவர். மையத்தின் சார்பில் வெளிவரும் இந்நூலைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடையும்

மனிதநேயப் பண்பாளர். இந்நூல் மாளிகை வாயிலை அவர் அணிவித்த தோரணம் அணிசெய்கின்றது. விரைவில் நூலை வெளிக்கொணரும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்துதவிய துணைவேந்தர், பதிவாளர் முனைவர் மூ.செல்வராசு, ஏனைய அலுவலர்கள் அனைவர்க்கும் அகம் நிறைந்த நன்றி.

சென்னைத் துறைமுகப்பகுதி இந்திய உணவுக்கழகச் சிந்தனையாளர் கழகத்தினர் - குறிப்பாக மாணவ நண்பர் சின்னையன், சூலூர் பாவேந்தர் பேரவையினர் - குறிப்பாகப் புலவர் செந்தலை ந.கௌதமன், இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்தினர் - குறிப்பாக மருத்துவர் கலைக்கோவன் ஆகியோர் கருத்துவளர்ச்சிக்குக் களம் அமைத்துத் தந்தனர். வரலாற்றுப் பேராசிரியர்கள் முனைவர் நா.இராசேந்திரன், முனைவர் ந.கௌரிசங்கர், புதுவை முனைவர் நா.செங்கமலத்தாயார், முனைவர் அ.கனகராசு, பாவலர் இலக்கியன், முனைவர் கு.திருமாறன், முனைவர் மு.இளமுருகன், முனைவர் ய.மணிகண்டன், கோ.மணிவாசகம், புலவர் பி.தமிழகன், பேரா இரா.வேலம்மாள், திருவாட்டி இரா.தேன்மொழி, முன்னாள் மாணவர்கள் க.முருகன், த.சித்தார்த்தன், முனைவர் பழ.அதியமான், கி.தமிழரசி, பா.செல்வக்குமார் முதலிய பலரின் பங்களிப்பு ஏதோவொரு வகையில் இந்நூலாக்கத்தில் இணைந்துள்ளது.

பாரதிதாசன் உயராய்வு மையத்தில் கணிப்பொறி இயக்கராகப் பணியாற்றும் திருவாட்டி சி.இலட்சுமி, உதவியாளராகப் பணியாற்றிய திருவாட்டி மு.வேல்மணி ஆகிய இருவரும் சளைக்காமல் குறிப்பெடுத்தும் பன்முறை படியெடுத்தும் உதவினர். இட்ட பணியைத் தட்டாமல், என் வாய்ச்சொற்களை எழுத்தில் வடித்துத்தரும் செல்வி. செ.செந்தமிழ்ச் செல்வியின் பணி தனித்துக் குறிப்பிடத்தக்கது.

சென்னையிலுள்ள மறைமலையடிகள் நூல் நிலையம், பெரியார் பகுத்தறிவு ஆய்வு நூலகம், அண்ணா அறிவாலயப் பேராசிரியர் நூலகம், முகப்பேர் உரோசா முத்தையா நூலகம், பெரியவர் கண்ணனின் காரல்மார்க்சு நூலகம், புதுவை பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் - ஆய்வு மையம், குழித்தலை தமிழ்க்காசு நினைவு நூலகம், கி.ஆ.பெ.விசுவநாதம் புலவர்குழு நூலகம், பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகம் முதலிய பல நூலகங்கள் பயன்கொள்ளப்பெற்றன. அவற்றின் நூலகர்களும் உதவியாளர்களும் அணுகிய போதெல்லாம் அன்போடு உதவினர். இந்நூல் அழகான வடிவமும் அச்சமைப்பும் பெறுவதற்குப் பெரிதும் துணை நின்றவர்கள் இனிய நண்பர்கள் புலவர் வைகறைவாணன், க.சந்திரசேகரன், பாலமுருகன் ஆகியோர்.

இவ்வாறு பல நிலைகளில் துணைநின்ற அனைவர்தம் ஒத்துழைப்பின் ஒட்டுமொத்த வடிவமே ‘பாவேந்தரின் உலகநோக்கு’ என்னும் இந்நூல். அனைவர்க்கும் உளம் நிறைந்த நன்றி.

பத்துமாதம் படாதபாடுபட்டுக் கருவைச் சுமந்த தாய், பச்சிளங் குழந்தையின் எழில்வடிவைக் கண்டதும் எப்படிப் பூரித்துப் போகிறாள்! அப்படியொரு மனநெகிழ்ச்சி, பல்லாண்டுகளாக ஏந்தி இருந்தவை நூல்வடிவில் இறங்கியிருப்பதைக் கண்டு! உருப்படியான ஒவ்வொரு நூலும் படைப்பாளியின் பாசத்திற்குரிய குழந்தையே. அந்தக் குழந்தையின் உடம்பில் ஒட்டிக் கொண்டிருக்கும் தூசி துரும்புகூட அவனுக்கு அழகாகத் தோன்றலாம். மற்றவர்கள் தான் அவற்றை எடுத்துக்காட்ட வேண்டும். அதைப்போல் உங்கள் முன் இந்த நூல்! திருத்தவேண்டியவை இருப்பின் தெரிவியுங்கள். ‘அறிதோறு அறியாமை காணுதல் ஆய்விற்கு அழகு’.

நிறைந்த அன்புடன்

இரா.இளவரசு

குறுக்க விளக்கம்

'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் நான்கு தொகுப்புகள் வெளிவந்துள்ளன. முதல் தொகுப்பின் முதற்பதிப்பு (1938) 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற பெயரில் எண் இடப்படாமல் வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பும் (1940), மூன்றாம் பதிப்பும் (1944) 'முதற்பாகம்' என்றும், நான்காம் பதிப்பு (1944) 'முதற்பகுதி' என்றும் எண் குறிப்போடு வெளிவந்தன. கவிதைகளின் இரண்டாம் தொகுப்பு முதலில் 'இரண்டாம் பகுதி' (1949) என்றும்இரண்டாம் பதிப்பில் 'இரண்டாம் தொகுதி' (1952) என்றும் எண் குறிக்கப்பட்டுப் பின்பு 'தொகுதி'யே நிலைபெறுவதாயிற்று. மூன்றாம் கவிதைத் தொகுப்பும் (1955) நான்காம் கவிதைத் தொகுப்பும் (1977) 'தொகுதி' என்ற பெயரையே தாங்கியுள்ளன. இந்த அடிப்படையில் நான்கு தொகுப்புகளும் தொகுதி என்னும் ஒரு குறியீட்டினாலேயே இங்குக் குறிக்கப்பெற்றுள்ளன.

'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' என்னும் ஒரே பெயரில் பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டும் (1935) எஸ்.ஆர்.சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்டும் (1980...) இரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. பெயர்க்குறுக்கத்தில் அவற்றை வேறுபடுத்திக் காட்டும் வகையில் சிறுமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெரியவர் எஸ்.ஆர்.சுப்பிரமணியம் தன்பெயரின் தலைப்பெழுத்துக்களைத் தமிழாக்கிச் 'சு.ர.சுப்பிரமணியம்' எனக்குறித்துச் சில படைப்புகளை வெளியிட்டுள்ளார். அதனை நினைவூட்டும் குறுக்கவிளக்கமும் இடம்பெற்றுள்ளது.

பாரதிதாசன் படைப்புகளில் முதல் பதிப்பாக வெளிவந்த சிலவற்றிற்கு 'முதல் பதிப்பு' என்னும் குறிப்போ, வெளியிடப்பட்ட ஆண்டோ தெளிவாகக் குறிக்கப்படவில்லை. வேறுசில அகப்புறச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முதற்பதிப்புகளின் ஆண்டுகள் அறியப்பட்டுள்ளன. ஆதலால் குறுக்கவிளக்கத்தில் 'ஆண்டு இல்லை' என்பதைக் குறிக்க 'ஆ.இ.' என்றும் பின்னர் ஆண்டு அறியப்பட்டது என்பதைச் சுட்ட அடுத்துப் பிறைக் கோட்டுக்குள் ஆண்டும் அளிக்கப்பட்டுள்ளன.

ஆ.இ.	:	ஆண்டு இல்லை
ஆ.ப.	:	ஆய்வும் பதிப்பும்
ஆ.பெ.இ.	:	ஆசிரியர் பெயர் இல்லை

இ.எ.பா.	ஃ	இந்தி எதிர்ப்புப் பாட்டு
இசை	ஃ	இசையமுது
இ.தொ.	ஃ	இரண்டாம் தொகுதி
இ.ப.	ஃ	இரண்டாம் பதிப்பு
எ.இ.	ஃ	எது இசை
க.கு.நெ.கு.	ஃ	கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல்
கவி.ம.	ஃ	ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (பாரதிதாசன்)
கவி.மண்.	ஃ	' ' ' ' (எஸ்.ஆர். சுப்பிரமணியம்)
கு.தி.	ஃ	குயில் தினசரி
கு.வி.	ஃ	குடும்ப விளக்கு
ச.சா.	ஃ	சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
சு.ர.சு.	ஃ	சு.ர.சுப்பிரமணியம்
தா.ச.	ஃ	தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு
தி.இ.ப.	ஃ	திருந்திய இரண்டாம் பதிப்பு
தொ.ஆ.	ஃ	தொகுப்பாசிரியர் / தொகுப்பாளர்
தொ.ப.	ஃ	தொகுப்பும் பதிப்பும்
நா.தொ.	ஃ	நான்காம் தொகுதி
நா.ம.	ஃ	நாள்மலர்கள்
ப	ஃ	பக்கம் / பக்கங்கள்
ப.ஆ.	ஃ	பதிப்பாசிரியர் / பதிப்பாளர்
ப.இ.	ஃ	பதிப்பு இல்லை
பா.தா.கு.	ஃ	பாரதிதாசன் குயில்
பா.ப.	ஃ	பாண்டியன் பரிசு
பா.பா.	ஃ	பாரதியார் பாடல்கள்
மு.கா.	ஃ	முல்லைக்காடு
மு.தொ.	ஃ	முதல் தொகுதி
மு.ப.	ஃ	முதல் பதிப்பு
மேற்படி	ஃ	மேலே உள்ளபடி
வெ.	ஃ	வெளியீடு
p	:	page
pp	:	pages

1.0 இயல் ஒன்று

1.1. நோக்கம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் அழுத்தமான பதிவுகளை ஏற்படுத்தித் தனக்குப்பின்னே பாட்டுக் குயில்களின் பட்டாளத்தையே உருவாக்கிச் சென்ற பெருமை பாரதிதாசனின் தனி உரிமை. தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரற்ற பாவலராகிய புரட்சிக் கவிஞரைக் 'குறுகிய மனப்பான்மை உடையவர்; குண்டுச்சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டியவர்; அவர்க்கு ஊர்ப்பார்வைதான் உண்டே தவிர உலகப் பார்வை இல்லை' என்று குறைத்துப்பேசும் ஆராய்ச்சியாளர் உளர். குறிப்பாகப் பாரதியாரோடு பாரதிதாசனை ஒப்பிட்டுப் பேசும் ஆய்வாளர்கள் இத்தகைய கருத்துகளை முன்வைக்கத் தவறுவதில்லை.

> ''எங்கேயோ (புதிய ருஷ்யா) அடிமைச்சங்கிலி அறுந்ததற்காக இங்கே கவிஞன் குதூகலிக்கவில்லையா? பாரதிதாசனிடம் காணமுடியாத இந்த 'உலகப்பொதுமை' அல்லது 'அகிலத்துவம்' (Universality) பாரதியின் தேசியப் பாடல்களில் காணக்கூடிய தனிச்சிறப்பு''

என்று வ.சுப்பிரமணியம் தனது 'வாழ்வியல் கவிஞர்கள்' என்னும் நூலில் (ப. 41) குறிப்பிடுகிறார். உலகப்பொதுமை அல்லது அகிலத்துவம் என்பதைப் பாரதிதாசனிடம் காணமுடியாது என்பது இவர் கருத்து.

பொதுவுடைமை இயக்கத் தலைவர் ப.சீவானந்தம் அவர்கள்

> ''பொது மக்களின் பூர்ணக்குரல் பாரதிதாசனின் பாடல்களில் இன்று கேட்க வேண்டுமென்று வர்க்க உணர்ச்சியும் அரசியல் பேதமும் கொண்ட பொதுமக்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன். ஜார் வீழ்ச்சியைப் பற்றி பாரதி பாடினார். இட்லர் வீழ்ச்சியை (பாசிச வீழ்ச்சியை)ப் பற்றி பாரதிதாசன் பாடியிருக்கவேண்டும். பிஜித்தீவு கரும்புத் தோட்டக் கஷ்டத்தைப் பற்றி பாரதி பாடினார். வங்கப் பஞ்சத்தைப் பற்றி பாரதிதாசன் பாடியிருக்கவேண்டும்.''

என்று குறிப்பிடுவதும் (கவிஞர் மலர் ப.95) ஏறத்தாழ முன்னர் சுட்டிய கருத்தோடு ஒத்ததாகவே அமைந்துள்ளது.

ஆய்வாளர்களிடம் பரவலாகக் காணப்படும் இத்தகைய கருத்துகள் உண்மைக்கு மாறானவை. தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாய் உள்ளத்தோடு பாடியவர் பாரதிதாசன்; இரண்டாம் உலகப்போரில் இட்லரின் வீழ்ச்சியையும் அவர் பாடியுள்ளார் என்பது பாரதிதாசன் படைப்புகளை முழுமையாகப் பார்க்கும்போது தெளிவாகப் புலப்படும்.

இந்த மையக்கருத்தை விரிவாகத் தமிழுலகின் முன்வைப்ப தற்கு மிகுதியான செய்திகள் பாரதிதாசனிடம் உள்ளன. அந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுமுகத்தான் 'பாவேந்தரின் உலகநோக்கு' என்னும் இந்தத் தலைப்பு தெரிவு செய்யப்பெற்றது.

பாரதிதாசனின் உலகநோக்கைப் புரிந்துகொள்ளச் சில அடிப்படைச் செய்திகளை நாம் முதலில் மனங்கொள்ளவேண்டும்.

1.2 இந்த நிலையில்!

பாரதிதாசன் தனது பதினெட்டாவது அகவையில் (1909) ஆசிரியர் பணியேற்று, 37 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரிய ராகவே பணியாற்றி ஓய்வுபெற்றவர். அயல்நாடு எதற்கும் இறுதிக் காலம் வரை செல்லாதவர். பரந்த சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த பெங்களூர் நகரத்திற்குத் தேசிங்கு ராசன் வரலாறு பற்றிய இசைத் தட்டுகளை உருவாக்குவதற்காகச் (கவி.ம.வெ.7) சென்று வந்தார். இறுதிக் காலத்தில் (22.05.1962) அனைத்திந்திய அளவில் 'அஞ்சுமன் தாராகி' என்னும் அமைப்பு நடத்திய கவியரங்கில் கலந்துகொள்வதற்காகப் பம்பாய்க்குச் சென்று வந்தார். இந்தியாவின் பிற மாநிலங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பும் அவர்க்கு ஏற்படவில்லை. தமிழ் மொழியைத் தவிரப் பிறமொழிகளை எழுதவோ, படிக்கவோ தெரியாதவர் (சக்தி, சித்ரபானு - கார்த்திகை)

பணிக்காலம் முழுமையும் தொடக்கப் பள்ளி ஆசிரியராகவே பணியாற்றி, அயல்நாடு எதற்கும் சென்றுவர வாய்ப்பின்றிப் பிறமொழிகளில் அறிவு பெறாமல் வாழ்ந்திருந்த பாரதிதாசன் வடமொழிப் பில்கணியத்தைத் தழுவிப் 'புரட்சிக்கவி'யைத் தமிழுக்குத் தந்தார். சேக்சுப்பியரின் 'வெனிசு நாட்டு வணிகன்' எனும் ஆங்கில நாடகத்தைத் தழுவி 'நடுநாட்டின் வர்த்தகன் அல்லது நட்பின் இலக்கணம்' எனும் நாடகம் எழுதினார். (க.கு.நெ.கு ப.277). 'பெண்களைப் பற்றிப் பர்னாட்ஷா' என்னும் பாடலை இயற்றினார்

(1935). பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தார் (1936). தெலுங்கு மொழியிலுள்ள தியாகராாசர் கீர்த்தனங்களில் பதினொன்றைத் தமிழாக்கினார் (கவி.ம.1935). இவ்வாறு பிறமொழிகளின் மீது தேவையற்ற வெறுப்பு இல்லாமல் அவற்றிலிருந்து தமிழுக்கு வளம் சேர்க்கும் பணியையும் மேற்கொண்டார். பிறமொழிகளை அறியாத பாரதிதாசன் அம்மொழிகளை அறிந்த மற்றவர்களின் துணையோடும், மொழிபெயர்ப்புகளைப் பயன்படுத்தியும் செய்த குறிப்பிடத்தக்க பணியாகும் இது.

1.3. பாரதியை உலகப்படைப்பாளிகளொடு...

பாரதியாரை 'உலககவி' 'வையத்து மாகவிஞர்' என்று போற்றி 'ஒரூருக்கு ஒருநாட்டிற்கு உரியதான ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்' என்று பாராட்டும் பாரதிதாசன் (கவி.ம. வெ.7) அவரை உலகக்கவிஞர், எழுத்தாளர் பலரோடும் ஒப்பிட்டுப்பாடும் திறன் குறிப்பிடத்தக்கது.

அயர்லாந்தில் வெர்ஹேரன் எனுங்கவிஞன்
ஐரிஷ்மொழி வளரச் செய்தான்...!
அயர்லாந்தில் அதன் பிறகே உணர்வுபெற
லாயிற்றென் றறிஞர் சொல்வார்.
பெயர்பெற்ற கவிதைகளின் பெற்றியினைத்
தமிழர்களும் காணச்செய்து
துயர்நீக்கும் சுடர்க்கவிஞர் சுப்ரமண்ய
பாரதியார் நாமம் வாழ்க!

எல்லையற்ற ஆதரவும் பொருள்வலியும்
இசைந்திருந்த சேக்சுப்பியரும்
சொல்லும் விக்டர்உய்கோவும் டால்சுடாயும்
ரவீந்திரனும் சொந்த நாட்டில்
நல்லசெயல் செய்தார்கள்! நடைப்பிணங்கள்
மத்தியிலே வறுமை என்னும்
தொல்லையிலும் தொண்டுசெய்த சுப்ரமண்ய
பாரதியார் நாமம் வாழ்க.

என்னும் பாடற்பகுதி பாரதிதாசனுக்கிருந்த உலகப்படைப்பாளிகள் பற்றிய பார்வையைப் புலப்படுத்துவதாகும்.

வெர்கேரன், சேக்சுப்பியர், விக்டர்யூகோ, தால்சுடாய், இரவீந்திரநாத் தாகூர் ஆகியோர்களோடு பாரதியை ஒப்பிட்டு அவர்களுக்கிருந்த வாய்ப்பு வசதிகள் இல்லாத வறுமை நிலையிலும் அறியாமையில் உழலும் நடைப்பிணங்களிடையே தொண்டு

செய்தார் பாரதியார் என்று பாரதிமேன்மையைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டுகிறார்.

பாரதிதாசனுக்குத் தமிழ்மொழி மட்டுமே தெரிந்திருந்தாலும் உலகின் பிற பகுதிகளில் மக்கள் நலம் நாடிப் புதுக்கருத்துகளைச் சொன்ன புலமையாளர்களை நன்கு அறிந்திருந்தார் என்பதை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன.

1.4. உலகக்கவிஞர்களொடு பாரதிதாசன்

பாரதிதாசனை உலகக்கவிஞர்கள் பலரோடும் ஒப்பிட்டுப் பாராட்டும்போக்கினை 1940களிலிருந்தே அறியமுடிகிறது. குறிப்பாகக் கவிஞர்க்குச் சென்னையில் நடந்த நிதியளிப்பு விழாவினையொட்டி வெளியிடப்பட்ட கவிஞர் மலர் (28.7.1946) இத்தகு மதிப்பீடுகள் பலவற்றைத் தாங்கியுள்ளது.

> ''மதங்களிலும் பழைய ஆசாரங்களிலும் ஊறிக்கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட்விட்மன் தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன். இக்கவிஞரைப் பலதுறையிலும் பாராட்ட வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.''

'தமிழ்நாட்டு வால்ட்விட்மன்' என்னுந்தலைப்பில் கவிமணி தேசிகவிநாயகம் குறிப்பிட்ட கருத்து இது (கவிஞர் மலர் ப.12).

'மாயக்காவ்ஸ்கி' என்னும் தலைப்பிலான ஏ.பி.சனார்த்தனம் கட்டுரையில் (ப.83).

> ''மாயக்காவ்ஸ்கி இலக்கியக் கவிதைகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. குழந்தைப் பாட்டுக்கள், காதல்கீதங்கள் ஆகியவைகளை இயற்றினார். ஆனால் இயந்திரங்களின் ஓசை, பாட்டாளியின் உழைப்பு, புரட்சியின் வேகம், சமுதாய முன்னேற்றம், எழுச்சி இவைகளுக்குத்தான் அவர் கவிதைகளில் முதலிடம்.
>
> ''பாட்டாளியின் பாசறைக்குத் தன் திறமையைக் காணிக்கையாகத் தருகிறவனே கவிஞன்'' என்பது அவரது முடிந்த முடிபு. இந்நாள் திராவிடத்திலும் ஓர் மாயக்காவ்ஸ்கியைக் காண்கிறோம். அவர்தான் பாரதிதாசன்! புரட்சிக் கவிஞருக்கு இன எழுச்சி, அரசியல், அறிவியல், சமுதாய விடுதலை குறிக்கோள். கவிஞரின் பாக்கள் மக்கள் உரிமைப் போராட்டத்தில் நம்மை ஈடுபடுத்தும் தன்மையுடையன.''

என்று ஒப்பீடு செய்கிறார்.

'புரட்சியில் பூக்கும் புதுஉலகு' என்னும் கட்டுரையில் (ப.37) இரா.நெடுஞ்செழியன்

''பாரதிதாசனைப் புரட்சிக்கவிஞராக ஆக்கியது அவரது சூழ்நிலையேயாகும். ரஷ்யா ஒரு புஷ்கினையும், ஆங்கில நாடு ஒரு ஷெல்லியையும், பிரான்சு ஒரு ஹூகோவையும் அமெரிக்கா ஒரு வால்ட்விட்மனையும் கண்டவாறு திராவிடமும் ஒரு பாரதிதாசனைக் கண்டது.''

என்றும்; 'கொலைவாளினை எடடா' என்னும் கட்டுரையில் (ப.48) க.அன்பழகன்,

''ஆங்கில நாட்டுக் கவிஞர் ஷெல்லியைப்போல, அமெரிக்க நாட்டுக்கவிஞர் வால்ட்விட்மனைப் போல இஸ்லாமிய இனத்திற் கிடைத்த கவிஞர் இக்பாலைப் போல, திராவிட நாட்டிற்குத் தமிழ் இனத்திற்குக் கிடைத்த ஒப்பிலா அறிஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்'' என்றும் போற்றுவார்.

'சமூகப்புரட்சி' என்னும் கட்டுரையில் டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி,

''ஆங்கிலக் கவிகளில் அநேகர் அவர்களது 'தளுக்கான' நடைக்காகப் பெயர் பெற்றிருந் தார்கள். டென்னிஸன் அதற்கோர் உதாரணம். கவிஞர் ஷெல்லியும் வோர்ட்ஸ்வொர்த்தும் ஆளும் வர்க்கத்திற்குக் கசப்பான முறையில் கவிபுனைந்தனர். எனவே அவர்கள் ஒரு கூட்டத்தினரிடம் புகழடையாததில் ஆச்சரியமில்லை. இவர்களைப் போன்றவரே நம் கவிஞரும். தனக்கென்று கவிஞர் தனிமுறை ஏற்படுத்திக் கொண்ட தால்தான் நியாயமாக அவருக்குக் கிடைக்கவேண்டிய புகழ் கிட்டவில்லை. அவருடைய 'வெடிகுண்டுப்பாக்கள் எவ்வளவு எதிர்ப்பிருந்த போதிலும் அவற்றை வெட்டி வீழ்த்தி, எதிர் காலத்திலே சுயேச்சையின் வாயிலில் நம்மைக் கொண்டு நிறுத்தும்.

ஆந்திரதேசத்திலே சமூக ஊழல்களையும் அநீதிகளையும் ஒழிக்க முன்னாள் கவி வேமன்னா தோன்றினார். தமிழ் உலகில் இந்நாள் பாரதிதாசன் தோன்றிச் சமூகப்புரட்சிக்குக் கடைக்கால் போட்டிருக்கிறார். பாரதிதாசன் கற்பனாசக்தியுள்ள கவிமாத்திரமல்ல, காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர். அவர் எழுப்பியிருக்கும் தீ வெகு விரைவில் சமூக அட்டூழியங்களைக் கொளுத்திச் சாம்பலாக்கப் போகிறது.''

என்று சற்று விளக்கமாக அளித்திருக்கும் மதிப்பீடு (ப.80) தனித்து நோக்கத்தக்கது.

வால்ட்விட்மனைப் பற்றிய கட்டுரை ஒன்றிற்கு அறிஞர் அண்ணா 'அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன்' என்ற தலைப்புத்

தந்திருப்பது (திராவிட நாடு 1.4.45) தனித்துக் குறிப்பிடத்தக்கது. மேலும் பாரதிதாசன் மணிவிழாவையொட்டி 'ஒரே நிலவு' என்னுந் தலைப்பில் அண்ணா செய்துள்ள ஒப்பாய்வு ஒளிக்கீற்றுகள் அனைவரும் அறிய வேண்டியவை. அவற்றிலிருந்து ஒரு பகுதி :

''இக்பால் இஸ்லாமிய கலாச்சாரத்தின் பாதுகாவலர் என்றால் பாரதிதாசன் திராவிட கலாச்சாரத்தின் பாதுகாவலர் என்று சொல்லலாம்; கவி தாகூரின் இயற்கை வருணனைகளை மிஞ்சியவை கவிஞரின் 'அழகின் சிரிப்பு' என்று அவனி ஓர்நாள் ஒத்துக் கொள்ளத்தான் போகிறது. ஷெல்லி ஆதிக்கப்புரியினர் மீது தனது கவிதா சக்தியை ஏவினார். இதிலே அவரையும் மிஞ்சி விட்டவர் பாரதிதாசன் என்றுதான் அவரது கவிதைகள் கூறு கின்றன. வால்ட்விட்மன் பழைமை பாசி படர்ந்த கொள்கைகளை அகற்றிப் புது சமுதாயம் உருவாக மெருகிட்டார். நமது கவிஞரின் பாடல்கள் பழமைக்கு படுகுழி வெட்டி, புதுவாழ்வுக்கு வரவேற் பளிக்கும் துந்துபியாய் முழங்குகின்றன. ஏழை எளியவர்கள் உழைக்கிறார்கள். அவர்களின் உழைப்பை உறிஞ்சி உல்லாசபுரி யினர் உண்டு கொழுக்கின்றனர் என்பதைக் கூற வந்த ஷெல்லி பின்வருமாறு கூறினார். 'மக்களே, உங்களைத் தாழ்மைப்படுத்தும் தனவந்தருக்கு நீங்கள் உழுது பயிரிடுவதேன்? உங்களை உதாசீனப் படுத்துபவனுக்கு உயர்ந்த உடைகளைக் கொடுப்பதேன்? உங்கள் வியர்வை வடித்து, உங்கள் குருதியைக் குடித்து உங்களைத் துன்புறுத்தும் அந்த நன்றியற்ற தேனீக்களுக்குப் பிறப்பு முதல் இறப்பு வரை உணவும் உடையும் தந்து காப்பதேன்'? உங்களுக்கு நல்லுணவு, உடை, ஓய்வு, ஒதுங்க இடம், சுகம், சமாதானம் உண்டா? நீங்கள் விதைக்கிறீர்கள் - அயலான் அறுக்கிறான், நீங்கள் நெய்கிறீர்கள், அயலான் அணிகிறான். நீங்கள் ஆயுதம் செய்கிறீர் கள் - அயலான் உங்கள் மீதே உபயோகிக்கிறான். இதே கருத்தைக் கூறவந்த கவிஞர் இக்பால் ''தொழிலாளியின் இரத்தத்தால் முதலாளி போகமனுபவிக்கிறான். உழவரின் வாழ்நாளைப் பாழாக்கி மிராசுதாரன் இன்பமாக இருக்கின்றான். உழைப்பவனை நுகத்தடியில் மாட்டி அரசன் ஆனந்தமடைகிறான். அட்டூழியத்தில் சிக்கிய மக்களோ உணர்கின்றனர். பலவீனர்கள் தேகத்திலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும். நீர்த்துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு'' என்று கூறினார். இதைக் கூறவந்த பாரதிதாசன்,

காடு களைந்தோம் - நல்ல
கழனி திருத்தியும் உழவு புரிந்தும்

நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்.
ஆடைகள் நெய்தோம் - பெரும்
ஆற்றை வளைத்து நெல்நாற்றுகள் நட்டோம்
வாழ்வுக் கொவ்வாத - இந்த
வையத்தை இந்நிலை எய்தப் புரிந்தோம்
கந்தை யணிந்தோம் - இரு
கையை விரித்தெங்கள்
மெய்யினைப் போர்த்தோம்
மொந்தையிற் கூழைப் - பலர்
மொய்த்துக் குடிக்கப் பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய் - யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம் - எங்கள்
சேவைக் கெலாம் இது செய்நன்றி தானோ''

என்று கேட்கிறார். மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பகுதிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பாரதிதாசனின் பாடல்களின் கருத்துச் செறிவுக்கும் பொருள் நுட்பத்திற்கும் அத்தாட்சியாய் அமையும் (திராவிட நாடு 29.4.51) இவ்வொப்பீடு பாரதிதாசனுக்குரிய உயர்ந்த இடத்தை உறுதி செய்கிறது.

பேராசிரியர் மருதநாயகம் கடவுள் மறுப்புக் கொள்கை அடிப்படையில் பாரதிதாசனையும் கனடா நாட்டுக்கவிஞர் இர்வின் லேட்டனையும் இணைத்துப் பேசும் கட்டுரையில் (பாரதிதாசன் அவரும் அவர்தம் படைப்பாற்றலும் ப. 83)

''பாரதிதாசனை மேலை நாட்டுக்கவிஞர்கள் சிலரோடு ஒப்பிட்டுப் பல கட்டுரைகளும் ஆய்வேடுகளும் எழுதப்பட்டுள்ளன. அவரது தாயகப் பற்றிற்காக ஸ்காட்லாந்துக் கவிஞர் பர்ன்ஸோடும் (Robert Burns) உரிமை வேட்கைக்காக ஷெல்லியோடும், இயற்கை ஈடுபாட்டிற்காகக் கீட்ஸோடும், புரட்சி மனப்பான்மைக்காக பைரனோடும் (Byron) மனித வாழ்வு பற்றிய சிந்தனைக்காக ஏட்ஸோடும் (W.B.Yeats) பொதுவுடைமை எண்ணங்களுக்காக மாயகாவ்ஸ்கியோடும் ஒப்பிடுவதால் அவரது கவிதைகளில் புதிய உள்ளொளிகளையும் பரிமாணங்களையும் பார்க்க இயலும்.''

என்று ஆய்வாளர்களின் ஒப்பாய்வுப் பரப்பைப் புலப்படுத்துகிறார்.

பாரதிதாசனை ஆங்கிலக்கவிஞர்கள் பலரோடு ஒப்பிட்டுப் பாரதிதாசனின் பார்வை விரிவைக்காட்டும் வகையில் பேராசிரியர்

கா.செல்லப்பன் எழுதியுள்ள கட்டுரைகள் தனித்துச் சுட்டத்தக்கன. தமிழிலும் ஆங்கிலத்திலும் பாரதிதாசனையும் வால்ட்விட்மனையும் ஒப்பிட்டுப் பேராசிரியர் பா.பரமேசுவரன் எழுதியுள்ள நூல்களும் இராபர்ட் பர்ன் சோடு ஒப்பிட்டு முனைவர் மு.இளமாறன் செய்துள்ள ஆய்வும் குறிப்பிடத்தக்கன.

அமெரிக்கக் கார்லம் மறுமலர்ச்சிக் கருப்புக் கவிஞர் கிளாட் மெக்கே, பைரன், வால்ட்விட்மன், அயர்லாந்துக் கவிஞர் வில்லியம் பட்லர் யேட்சு, இராபர்ட் ஃப்ராஸ்ட், உக்ரேனியக் கவிஞர் தராசு செவ்சென்கோ, கீட்ஸ், வோட்சுவொர்த், இந்திக் கவிஞர்கள், மலையாளக் கவிஞர்கள் ஆகிய பலரோடும் பாரதிதாசனை ஒப்பிட்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகப் 'பாரதிதாசன்' என்னும் நூல் (உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 1991) வெளிவந்துள்ளது.

பாவேந்தரின் உலகநோக்குப் பற்றிப் பேசும்போது அவரை உலகக்கவிஞர்களோடு ஒப்பிட்டுக் காட்டும் பகுதிகளைக் குறிப்பிடுவது பொருத்தம் என்றே கருதுகிறேன்.

1.5. அனைத்துவகை ஆதிக்க எதிர்ப்பு

''ஒரு தீமை கண்டால் ஒதுங்கி நிற்றல் தீமை'' என்பார் பாரதிதாசன்.

''வலியாரால் வாடும் எளியாரின் சார்பில்
புலியாகிப் போர்தொடுக்கும் போதில் வலியோர்கள்
எய்யும்கோற் புண்ணும் இனிதாகும்...''

என்பது அவர் முடிபு (கு.வி.) பாரதிதாசன் எவ்வகையான ஆதிக்கத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர், துணிந்து எதிர்த்தவர். காஞ்சி மணிமொழியார்

> ''பாரதிதாசன் ஒரு பிறவிப் போர்வீரர். எங்கெங்கே அறியாமை இருக்கிறதோ, எங்கெங்கே ஆணவம் நடமாடுகிறதோ, எங்கெங்கே 'உயர்வு தாழ்வு' மனப்பான்மை அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கிறதோ, எந்தெந்த இனம் எங்கெங்கே பிறர் உழைப்பை உறிஞ்ச எண்ணுகிறதோ, அங்கெல்லாம் பாரதிதாசனின் போர்முழக்கம் உண்டு. எங்கெங்கே சூழ்ச்சிக்கும் வீரத்திற்கும் போர் நிகழ்கிறதோ அங்கெல்லாம் வீரத்தின் பக்கம் நின்று போராடும் அவர் போர்வாள் உண்டு.''

என்று மதிப்பிடுவது (கவிஞர் மலர் ப. 106) நூற்றுக்கு நூறு சரியான மதிப்பீடாகும். 'சூழ்ச்சி தன்னை வஞ்சகத்தை, பொறாமை தன்னைத்

தொகை தொகையாய் எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகுதல் வேண்டும்' என்னும் பாரதிதாசன் குமுகாயத்தில் எதிர்ப்படும் சூழ்ச்சிகளை வஞ்சகச் செயல்களை இறுதி வரை எதிர்த்துப் போர் முழக்கம் செய்தார்.

1.5.1. மொழி ஆதிக்கம்

ஒரு மொழி பிறிதொரு மொழியின் மீது ஆதிக்கம் செலுத்துவது அவருக்கு உடன்பாடன்று. இந்தி மொழியைத் தமிழ் நாட்டுப்பள்ளிகளில் கட்டாயப் பாடமாக 1937இல் திணிக்கும் ஆணை பிறப்பிக்கப் பட்டபோது அதை எதிர்த்து நடந்த போராட்டத்திற்குப் புதிய வீறு சேர்க்கும் வகையில் அணுக்குண்டுப் பாடல்களை வழங்கியவர் பாரதிதாசன்.

இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும் இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ?

எனத் தொடங்கும் பாரதிதாசன் பாடல் (இ.எ.பா. ப.9) இந்தி எதிர்ப்பு மறவர்கள் எல்லோர் நாவிலும் ஒலித்தது. தமிழ்நாட்டுக் கோவில்களில் வடமொழி ஓதப்படுவதை எதிர்த்து இளைஞர்கள் கிளர்ச்சி செய்யவேண்டும் என்ற வேண்டுகோளோடு 'தமிழியக்கம்' தந்தார் பாரதிதாசன். 'வேற்றவரின் வடமொழியை வேரறுப்பீர் கோவிலிலே மேவிடாமே' என்பது அவர் ஆணை.

தமிழ்நாட்டு இசை மேடைகளில் தெலுங்கு மொழிப் பாடல்கள் ஆட்சி செலுத்துவதைத் 'தெலுங்கு தமிழ் நாட்டினில் ஏன்?' என்று கேள்வி எழுப்பி,

''தெலுங்கிசைத்தால் மறுப்பீர்கள்! தமிழே பாடச்
செய்யுங்கள்! அதற்காகத் திரண்டெழுங்கள்!
இலங்குதமிழ் மொழியினிலே பாடல் இல்லை
என உரைத்தால் அறையுங்கள்!''

என்று அறிவுறுத்தியவர். (எ.இ.ப.6) கல்வியிலும், ஆட்சியிலும் ஆங்கிலம் இடம் பெற்றிருப்பதை அகற்றி அன்னைத் தமிழே ஆட்சிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தியவர்.

''கட்டாயம் தமிழ்க் கல்விக்கழகம் யாண்டும்
கவினுறவே தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும்,
தட்டாமே அரசியலின் அலுவல் யாவும்
தமிழ்ப் பேச்சால் தமிழ் எழுத்தால் நடத்தவேண்டும்''

என்று தம் விருப்பத்தை வெளிப்படுத்தி, அவ்வாறு நடத்தாவிட்டால் 'நாட்டில் புரட்சி தோன்றும்' என்று எச்சரிக்கை விடுத்தார் (தமிழ்முரசு ஆகசுடு 1946). மாணவர்களை நோக்கி 'ஆங்கிலத்தைக் கற்கையிலும், அயல் மொழியைக் கற்கையிலும் எந்தநாளும் தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின் பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்'' (தமிழியக்கம்) என்று அறிவுறுத்தினார்.

1.5.2. நாட்டாதிக்கம்

ஒரு நாட்டார் பிறிதொரு நாட்டினர் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்னும் அடிப்படையில் ஆங்கிலேயர் ஆதிக்கம், வடவர் ஆதிக்கம் முதலியவற்றை வன்மையாக எதிர்த்தார். ஆங்கிலேயர் மாட்டிய விலங்கின் பூட்டை உடைத்துக் காட்டச் 'சேர்வீர் தொண்டர் படைக்கு எல்லோரும்' என்று 'தொண்டர் படைப் பாட்டு'ப் பாடியவர் பாரதிதாசன். 'கொடியது கொடியது வடநாடு, குறுகிய செயலது வடநாடு, குவிபொருள் கவர்ந்தது வடநாடு' ஆதலால்,

' விடுதலை பெறுவது முதல் வேலை
அடிமையில் உழல்வது முடியாது
விழிதுயில் வதுமிகு தவறாகும் எழுவீரே'

என்று வடநாட்டு ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறார் (குயில் 12.8.58). சீனநாடு இந்தியாவின் மீது படையெடுத்தபோது அந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துப் பாடல்கள் பல இயற்றியவர், நாடகம் புனைந்தவர் பாரதிதாசன். ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்துவதை அணுவளவும் ஏற்காதவர் அவர்.

''நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சுமனப் பான்மை.
தொல்புவி மேல்விழும்பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்...''

என்று 'பேரிகை' முழக்கினார் (கவி.ம.வெ. 4 - 5).

1.5.3. சாதிமத ஆதிக்கம்

மக்களைப் பிறப்பால் வேறுபடுத்தும் சாதிகள், அச்சாதிகளைக் கட்டிக்காக்கும் மதம் ஆகியவற்றைக் கடுமையாகச் சாடி 'நால்வகைப் பிறவிபொய்', 'பேயிலை மதமலால்' என ஆத்திசூடியில் பேசும் பாரதிதாசன்,

இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே
வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?

என வினாக்கனலை (பா.ப.) வீசுவதோடு,

இம்மக்கள் தமக்குள் மேலோர்
இழிந்தவர் என்னும் தீமை
எம்மட்டில் போமோ நன்மை
அம்மட்டில் இங்குண்டாம்

என்று விடைப்புனலைப் பாய்ச்சுகிறார் (கு.வி.).

1.5.4. பொருளியல் ஆதிக்கம்

இதற்குமுன் தமிழிலக்கியம் காணாத வகையில் பொருளியல் ஏற்றத்தாழ்வு, செல்வர்கள் உழைப்பவர்களை உறிஞ்சும் கொடுமை பாரதிதாசனின் பாடற்பொருளாகின்றது.

கூழுக்குப்பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை அடிப்பது நீதியோ - புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ

என்று கேள்வி (மு.தொ.) யெழுப்பி

'பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்'

எனத் தெளிவு (பா.ப.) படுத்தி

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பாநீ

எனத் தீர்வு காட்டுகிறார் (மு.தொ.). பேராசிரியர் ப.மருதநாயகம் ''வர்க்கப் போராட்டத்தின் தேவையை நேரடியாக வலியுறுத்தும் கவிதைகளைப் பொறுத்தமட்டில் தரத்திலும் அளவிலும் பாரதி தாசனை விஞ்சக் கூடிய கவிஞர்களை மேலைநாடுகளிலும் காணல் அரிது'' (மேலை நோக்கில் தமிழ்க்கவிதை ப. 97) என்று மதிப்பிடுவது இவண் நோக்கத்தக்கது.

1.5.5. ஆணாதிக்கம்

பாரதிதாசன் படைத்த தலைவி ஒருத்தி ''பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ? மண்ணுக்குக் கேடாய்

மதித்தீரோ பெண்ணினத்தை?'' என்று கேள்வி கேட்டுப் ''பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டின் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'' என்று தெளிவுரை (ச.சா.) பகர்கிறாள்.

''பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண்கேட் கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?

என்று (மு.தொ.) ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்பதை அடியோடு அகற்றி 'ஆணுயர்வென்பதும் பெண்ணுயர்வென்பதும் நீணிலத்தெங்கணும் இல்லை', 'பெண்ணொடு ஆண்நிகர்' என்ற சமன்மைக் குரல் கொடுக்கிறார் பாரதிதாசன்.

அறையிலிருந்து கொண்டு மட்டும் எழுதுவோராக இல்லாமல் களத்தில் நின்று கொண்டு முழங்கிய பாரதிதாசனின் ஆதிக்க எதிர்ப்புணர்வு - மொழி ஆதிக்கம், நாட்டாதிக்கம், சாதிமத ஆதிக்கம், பொருளியல் ஆதிக்கம், ஆண் ஆதிக்கம் என்னும் அனைத்து வகை ஆதிக்க எதிர்ப்புணர்வு 'அனைவரும் உறவினர்' என்னும் உலகப் பொதுநோக்குக்கு அழைத்துச் செல்வதாகும்.

1.6. மானிட ஆற்றலின் மாட்சி

எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும் பொல்லாங்கைப் போக்கி, மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டியவர் பாரதிதாசன். இயற்கையைப் பாடும் அழகின் சிரிப்பில்,

''இயற்கையின் உயிர்கட் குள்ளே
மனிதன்தான் எவற்றினுக்கும்
உயர்ச்சியும் தானறிந்த
உண்மையை உலகுக்காக்கும்
முயற்சியும் இடைவிடாமல்
முன்னேற்றச் செயலைச் செய்யும்
பயிற்சியும் உடையான்''

என்று மனிதனின் உயர்வைப் பாடுகிறார்.

மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் - அதைக் கூறாய்!
மானிடமென்பது புல்லோ? - அன்றி
மரக்கட்டையைக் குறித்திடவந்த சொல்லோ?

என்று (மு.தொ.) மானிட ஆற்றலைக்காட்டிலும் மேலான ஆற்றல் எதுவும் இல்லை என்று தெளிவுபடுத்தி 'மானிடம் போற்று'

என்று ஆத்திசூடியில் ஆணையிடுகிறார். பேராசிரியர் நா.வானமாமலை

> ''மானிடனது ஆற்றலையும் அவனது மேன்மையையும் பாரதிதாசன் குருவையும் மிஞ்சிய சீடனாகவும் உயர்த்திக் கூறுகிறார்''

என்று மதிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. (பாரதிதாசன் மலர், தாமரை, ஏப்ரல் 1967).

1.7. முடியரசை மாற்றும் குடியரசுக் கவிஞர்

'மாறுவது இயற்கை' என்பது பாரதிதாசன் ஆத்திசூடி. இருக்கும் நிலையை மாற்றப் புரட்சி மனப்பான்மையை ஏற்படுத்துதல் பிறர்க்கு உழைக்கும் எழுத்தாளர்களின் கடமை என்பது பாரதிதாசனின் கருத்து. ஆங்கிலக் கவிஞன் செல்லி மன்னர்களையும் மதக்குருக்களையும் எதிர்த்துத் தனது பல கவிதைகளிலும் பாடியவன். செல்லியை 'முடியரசை நிராகரித்த குடியரசுக்கவிஞன்' என்று போற்றுவர். செல்லியோடு பல நிலைகளில் ஒப்பிடத்தக்க பாரதிதாசன் 'கடல்மேற் குமிழிகள்', 'காதலா? கடமையா?', 'குறிஞ்சித் திட்டு', 'சௌமியன்', 'புரட்சிக்கவி', 'வீரத்தாய்' முதலிய பல படைப்புகளில் முடியரசு குடியரசாக மாற்றம் பெறுவதாகப் பாடியுள்ளார். இந்தக் குடியரசும் மக்கள் நலன் நாடும் அரசாக, 'எல்லார்க்கும் எல்லாம்' என்னும் பொதுவுடைமை அரசாக மாறும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

''எல்லார்க்கும்தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக!
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!
வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக;
வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணி முரசம் ஆர்ப்பீரே!''

என்பது 'வீரத்தாய்' என்னும் கவிதை நாடகத்தின் இறுதிப்பகுதி. முடியாட்சி குடிமக்கள் ஆட்சியாக மாறுவதோடு அவ்வாட்சி எல்லார்க்கும் எல்லாம் என்னும் பொதுவுடைமை ஆட்சியாக அமைவதை உணரமுடிகிறது.

1.8. மொழி, இன, நாட்டுப் பற்றும் உலகப்பற்றும்

பாரதியார் 'வாழிய செந்தமிழ்' என முதலில் மொழிப்பற்றையும் 'வாழ்க நற்றமிழர்' என இனப்பற்றையும் 'வாழிய பாரத

மணித்திருநாடு' என நாட்டுப்பற்றையும் படிநிலை வளர்ச்சிப் போக்கில் புலப்படுத்துவார். தன்மொழிமேல் உண்மையான பற்றுள்ளவன்தான் அயல்மொழிகளை மதிப்பான். தன் இனத்தின் மீதும் நாட்டின்மீதும் அன்பில்லாதவன் மற்ற மக்களிடமும் நாடுகளிடமும் அன்பு செலுத்துதல் வெளிவேடமே. உண்மையான அன்பு, ஊர், நாடு, உலகம் எனப் பரந்து விரிந்து செல்வதாகும். இப்பற்றுகள் தம்முள் முரணானவையல்ல. மண்ணில் வேரூன்றிய மரம் விண்ணை நோக்கிக் கிளைக்கைகளை விரிப்பதைப் போல மொழி, இன, நாட்டுப்பற்றுகள் உலகப்பற்றிற்கு உறுதுணையாவன. உலகப்பற்றை ஓங்கச் செய்வன. இதனையே பாரதிதாசன் தனது 'பாரதிதாசன் ஆத்திசூடி'யின் பாயிரப்பகுதியில்,

'நவில்இனப் பற்றும் நாட்டுப் பற்றும்
வையப் பற்றை வளர்க்கும் நோக்கத்தன'

என்று பாடுவார்.

1.9. உலக நாட்டம்

பாரதிதாசன் தான் பார்க்கும் பல பொருள்களையும் உலகை முன்நிறுத்திப் பார்ப்பவராகத் திகழ்கிறார்.

வள்ளுவனை உலகுக்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு என்று பாரதியார் பாடுவார். பாரதிதாசனோ ''வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே'' (இ.தொ.) என வையகம் புகழ் கொண்டது என்பார்.

தமிழைப் பாடும்போது ''வையகமே உய்யுமாறு வாய்த்த தமிழ் என் அரும்பேறு'' (இசை) என்பார்.

அறிவாளி என்பவன் யார்? என்று பாரதிதாசனைக் கேட்டால்,

''வையக மக்களெல்லோரும் - நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி''

என்று விடை தருவார் (மு.கா.).

புத்தக சாலையைப் பற்றிப் பாடும்போது உலக மக்கள் அனைவரும் சமம் என்னும் உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது.

''மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்

இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை''

என்பது அவர் பாடல் (மு.தொ.)

பத்திரிகையைப் பெண்ணாக உருவகித்துப் பாடும் பாரதிதாசன் பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த அவள், 'ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்ப்பவள்' (கவி.ம.வெ.3) எனப் பாடுகிறார்.

இவ்வாறு பாடுபவற்றையெல்லாம் உலக நோக்கில் பார்க்கும் பாரதிதாசன் பார்வை விரிவானது.

1.10. புதிய சொல்லாட்சி

உலகத்தாய், உலகப்பன், உலகப் பொன்னிலக்கியம், வைய நூல் ஆகிய புதிய சொல்லாக்கங்களைப் பாரதிதாசன் வழங்குகிறார்.

1931-இல் அவர் எழுதி நடத்திய சிந்தாமணி நாடகத்தில்,

''உலகமே உயர்வடைவாய்
உள்ளவர்க்கெல்லாம் நீயேதாய்''

என உலகத்தை எல்லோருக்கும் தாயாக ஆக்கியவர்,

''உவகை உவகை உலகத்தாயின் கூத்து - வந்து
குவியுதடா நெஞ்சில் உவகை உவகை'' (இசை)

எனக் கூத்தாடும் உலகத்தாயைக் காட்டுகிறார். 'புரட்சிக்கு வித்திடும் பாட்டு' என ஆய்வாளர்களால் குறிப்பிடப்படும் 'உலகப்பன் பாட்டு' ஓடப்பர், உயரப்பர், உதையப்பரோடு உலகப்பனையும் படைத்துக் காட்டுகிறது. 'உலக இலக்கியம்' என்று ஆய்வாளர்கள் குறிப்பிடும் இக்காலச் சிந்தனைக்குத் துணைசெய்யும் வகையில் ''புலவர்கள் உலகப் பொன்னிலக்கியம் ஆக்கினார்'' 'வையநூல்' (இ.தொ.) என்று பாடுவதைக் காணலாம்.

1.11. உலகுக்குக் கொடுத்துக் கொள்ளுதல்

வாழ்க்கை என்பதும் ஆய்வு என்பதும் கொடுத்துக் கொள்ளும் வினைப்பாடுகளே. தம்மிடம் உள்ளவற்றை மற்றவருக்கும், மற்றவரிடம் உள்ளவற்றைத் தமக்கும் கொடுத்துக் கொள்ளும் போதுதான் உறவும் உரிமையும் சிறக்கின்றன. பாரதிதாசன் 'தமிழ்மொழிக் கவிதைகளை ஆயிரம் மொழிகளில் ஆக்கிக்கொள்ள உலகம் அவாவிற்று என்னும் இனிய செய்தியை என்று கேட்பேன்' (மு.தொ.) என ஏங்குகிறார். 'வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாகத் தோன்றியுள்ள எல்லாவற்றிற்கும் தமிழாக்கம் கண்டு

தெளிவுதரும் படங்களோடு நூல்கள் உருவாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்திட வேண்டும்' (மு.தொ.) என்பது அவரது வேட்கை.

'உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள் ஒருத்தர் தயையில்லாமல் ஊரறியும் தமிழில் சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்' என்று அறிவுறுத்துகிறார்.

''பார்த்தொழில் அனைத்தும் கொண்ட
பயன்தரும் ஆலைக்கூட்டம்
ஆர்த்திடக் கேட்ப தென்றோ?''

என்பது அவரது ஏக்கம் (மு.தொ.) கொடுத்துக்கொள்ளும் உலக உறவில் அவர்க்கிருந்த நாட்டம் குறிப்பிடத்தக்கது.

1.12. படைப்புகளில் உலகமுதன்மை – புதிய உலகம்

இன்றுவரை கிடைத்துள்ள பாரதிதாசன் நூல்களில் காலத்தால் முற்பட்டது எனக் கருதத்தக்கது 1920-இல் வெளியிடப்பட்ட 'மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு'. அப்பாட்டு,

''உலகுக்கு நற்பாட்டு உரைக்க எனக்காசை''

என்று தொடங்குகிறது.

'வள்ளுவர் உள்ளம்' என்னும் தலைப்பில் பாரதிதாசன் எழுதிய திருக்குறள் உரையில் 'கடவுள் வாழ்த்து' என்னும் முதல் அதிகாரத் தலைப்பு ''**உலகின் தோற்றம்**'' என மாற்றம் பெற்றுள்ளது. (குயில் 1.12.59)

ஔவை, பாரதி வழியையொட்டிப் பாரதிதாசன் எழுதிய ஆத்திசூடி எதற்கு எழுதப்பட்டது என்பதை,

''உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று
நிலவுதல் கருதி நிகழ்த்திய இந்நூல்''

என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

'உலகம் உன்னுயிர், உன்னுயிர் உலகம்' என்பது (குயில் 1.10.48) பாரதிதாசன் எழுதிய குறிப்பிடத்தக்க பாடல் ஒன்றின் தலைப்பாகும். பத்து அறுசீர் விருத்தங்களால் ஆன அப்பாடல்,

''ஒவ்வொரு நினைவும் உன்றன்
உலகிற்கே! செயல்ஒவ் வொன்றும்
இவ்வைய நன்மைக் கேஎன்
றெண்ணுதல் பெற்றா யாகில்

செவ்வையாம் நினைவுண்டாகும்
செயலெலாம் நல்லவாகும்
அவ் ''வானின்'' நோக்கம் காண்பாய்!
அதன்பெருஞ் செயலைக் காண்பாய்!

என்று தொடங்குகிறது.

'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியில் (1938) 'புதிய உலகம்' என்னும் பகுப்பில் அமைந்துள்ள பத்தொன்பது பாடல்களும் அதற்கு முன் தமிழ்க்கவிதை உலகம் கேட்டிராத புதிய எழுச்சிக் குரல்களைப் பதிவு செய்துள்ளன. 'மனிதரில் நீயும் ஓர் மனிதன்; மண்ணன்று... விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய்' என்று ஊக்கப்படுத்தி, ஒன்றே சமூகம்; அதில் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதை உறுதிப்படுத்தி, உழைக்கும் மக்களுக்கே இவ்வுலகம் உரிமையுடையது என்று உரக்கக்கூவிப் 'புதியதோர் உலகம்' செய்ய அழைப்பு விடுக்கும் பாடல்கள் அவை.

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''

என்று புத்துலகு சமைக்க விரும்பும் பாரதிதாசன்,

சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!

என்று சண்டை உலக இயல்புகளையும் சுட்டிக் காட்டுகிறார். பாரதிதாசன் காண விரும்பிய புதிய உலகை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவும் பாடல்கள் இப்பகுப்பில் அமைந்தவை.

கிரேக்க அறிஞன் பிளேட்டோ தன் 'குடியரசு' (Republic) நூலின் வாயிலாகப் படைக்க விரும்பிய 'புதிய உலகம்', சர் தாமஸ்மூர் கனவுகண்ட 'கற்பனையுலகம்' (Utopia), அல்டசு அக்சிலியின் 'துணிவுமிகு புதுஉலகம்' (Brave new world) முதலிய படைப்புகள் பாரதிதாசன் காண விழையும் புதிய உலகத்தோடு இணைத்து எண்ணத் தக்கன.

பாரதிதாசன் 'குயில்' மாத வெளியீட்டில் எழுதத்தொடங்கி (15.6.48...) முற்றுப் பெறாத ஒரு நெடுங்கதையின் பெயர் 'அனைவரும் உறவினர்' என்பது. நான்கு இதழ்களில் ஏறத்தாழ 68 பக்க அளவில் 36 இயல் பகுப்பில் வெளிவந்த அக்கதையில் அறிஞர்கள் கூடிப் 'போர் தடுப்போர் கூட்டம்' என்ற அமைப்பை ஏற்படுத்து

வதாகவும், 'அனைவரும் உறவினர்' என்னும் மையக் கருத்தை வலியுறுத்துவதாகவும் நிகழ்ச்சிகள் புனையப்பட்டுள்ளன.

''உலகுக்கோர் ஐந்தொழுக்கம்'' என்னும் கட்டுரை (குயில் 14.11.1959) 'ஒன்றுபட்ட நாடுகளின் அவை' என்னும் ஐ.நா. அமைப்பின் தவறான போக்கைக் கடிவதோடு உலகம் முன்னேற ஐந்து ஒழுக்க நெறிகளை முன்வைக்கின்றது. அவையாவன :

1. ஓர் இனம் மற்றோர் இனத்தை மாய்க்கலாகாது.
2. ஒரு மொழி மற்றொரு மொழியை மாய்க்கலாகாது.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பற்றிச் சுரண்டும் பான்மை கட்டோடு ஒழிதல் வேண்டும்.
4. உள்நாட்டின் அமைதியைக் காக்கும் அளவுக்கு மேல், பெரும்படை, விலையேறப் பெற்ற அழிப்புக் கருவிகளை எந்த நாடும் வைத்திருத்தல் கூடாது; உண்டாக்கக் கூடாது.
5. அங்குள்ள சான்றோரைக் கொண்ட ஓர் உலகப் பெரு மன்றம்மேற்சொன்ன நான்கு திட்டங்களைச் சிதறாமல் மேற்பார்வை பார்த்துவரவேண்டும்.

பாரதிதாசன் தேவையற்ற பிறமொழிக் காழ்ப்பு இல்லாதவர்; அனைத்துவகை ஆதிக்கங்களையும் எதிர்த்தவர்; மானிட ஆற்றலைப் போற்றியவர்; முடியரசை மாற்றும் குடியரசுக் கவிஞர்; உலகநல நாட்டத்தின் அடிப்படையிலேயே பலபொருள்களையும் பார்த்தவர்; உலகநோக்கை முன்வைத்த படைப்புகளை வழங்கியவர் என்னும் வலுவான பின்னணியில் அவரின் உலக நோக்கு ஆராயத்தக்கது.

பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 1964இல் அவர் மறையும்வரை பல இதழ்களில் எழுதியவர். அவரே பல இதழ்களை ஆசிரியராகவும், உரிமையாளராகவும் இருந்து நடத்தியவர். கவிதை, நாடகம், கதை, கட்டுரை, துணுக்குகள் முதலிய பலவற்றை எழுதியவர். இதழாசிரியர் என்னும்நிலையில் உலக நடப்புகளை அறியவும் அவற்றைப்பற்றி எழுதவுமான தேவை அவர்க்கிருந்தது. மேலும், இளமை முதலே பொதுநலப் பணிகளில் எவ்வித இடர்ப்பாட்டையும் பொருட்படுத்தாது தன்னை ஈடுபடுத்திக் கொள்பவராகவும் இருந்திருக்கிறார். தமிழக அளவில், இந்திய அளவில், உலகில் பிறநாடுகள் அளவில் என நடந்த நிகழ்ச்சிகள் பல அவரைப் பாதித்து இருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கவிதையிலும் உரைநடையிலும் நிறைய எழுதியுள்ளார். அவரின் உலக நோக்கை உணர அந்தப் படைப்புகள் மிகவும் பயன்படுவன.

1.13. இந்திய அளவில் சில நடப்புகளும் பாரதிதாசனும்

1.13.1 பீகார் நிலநடுக்கம்

1934-இல் சனவரி மாதம் *15*ஆம் நாள் பீகாரில் மிகக் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. வடக்குப் பீகார் மிக மோசமான பாதிப்புக் குள்ளாகியது. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். மாபெரும் இழப்புக்குள்ளாகிய பீகார் மக்களைப் பாதுகாக்க நாடு முழுவதும் நிதி திரட்டப்பட்டது. 'பீகார் பூகம்ப கஷ்ட நிவாரண பாபு ராஜேந்திர பிரசாத் நிதி' என்னும் பெயரில் திரட்டப்பட்ட நிதிக்குத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நன்கொடை பெறப்பட்டது. திருச்சிராப்பள்ளி கள்ளர் தெரு **'தமிழர் அபிவிருத்தி சங்கம்' *1.2.34***இல் கூடி நிதி திரட்ட முடிவுசெய்து, திரட்டிய தொகையை ***5.3.34***இல் இராசேந்திர பிரசாத் நிதிக்கு அனுப்பி வைத்ததை அறிய முடிகின்றது. *(11.3.34 நகரதூதன் இதழ், ப.7)*

பீகாரில் ஏற்பட்ட பேரழிவு பாரதிதாசன் உள்ளத்தைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. அல்லற்படும் பீகார் மக்களுக்கு ஆதரவு திரட்ட அவர் நெஞ்சம் விழைகின்றது. 'இயற்கைத் தேவியின் கோபம்' என்னும் தலைப்பில் ஒரு பாடலை எழுதுகிறார். அப்பாடல் 18.2.1934 மணிக்கொடி இதழில் (ப.5) வெளியானது. இயற்கையை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி அந்தப் பெண் தன்னிடம் சொல்வதாகப் பாடலைத் தொடங்குகிறார்.

'எரிபோல் விழியும் இடிபோல் மொழியும் நெஞ்சிலே நிறைந்த சினமும் உடையவளாய் இயற்கைத் தேவி தோன்றி என்னிடத்தில் இதனைச் சொன்னாள்; அவளின் சொல்லைக் கேட்பீர்களாக' என்று முன்மொழிந்து பாடலைத் தொடங்குகிறார் கவிஞர்.

இயற்கைத் தேவி ''உரிமை! உரிமை! யார்க்கும் எதிலும் எங்கும்;... மனித குலமும் வாழ்வுப் பொருளும் தந்தேன்... தாயின் பாலில் தனயர்க்கெல்லாம் பாகம், இனியும் பேதம் வேண்டாம் வேண்டாம்'' என்று அறிவுறுத்துகிறாள். அனைவருஞ்சமம் என்னும் கொள்கைக்கு மாறாக, உள்ளவர்கள் சொத்தைக் குவிக்கும்உலக நிலையைக் கண்டு உள்ளம் கொதிப்படைகிறாள். கனலாய் நிற்கும் அவளுடைய உடல் அதிர்கிறது. அதுவே இந்த நிலநடுக்கம் என்று கற்பனை செய்கிறார் பாரதிதாசன். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அழிவுகளை, புதையுண்ட ஊர்களை அடுக்கிச் சொல்லித் 'தவிக்கும் பீகார் மக்களைத் தாங்கிட வாரீர்' என்று அழைப்பதாகப் பாடல் அமைந்துள்ளது. அப்பாடலின் இறுதிப்பகுதி இது :

''குடமும் புனலும் நிலையிற் சாய்தல் போலே
குடிலும் ஏழைக் குலமும் சாயுங்காலே
படையால்மாளும் பகைபோல் மாளக்கண்டேன்
பணமும் பிணமும் மண்ணில் புதையக் கண்டேன்
தடமும் வீடும்சமமே யாதல் கண்டேன்
சதையும் மண்ணும் இரத்தக் குமிழும் கண்டேன்
மாங்கீர் சீதா மார்முகி சபர்புரி ஊரும்
மதுபான் மோத்கிரி சுமகசுதகிரி என்றாரும்
ஆங்கே பற்பல ஆயிர மைல்களின் எல்லை
அழகும் பொழிலும் தெருவும் வீடும் இல்லை
ஏங்கிய மைந்தர் தாயொடு வெளியில் நின்றார்
எத்தனை ஆயிர மக்கள் மண்ணிற் சென்றார்!
தாங்கிட வாரீர் பீகார் மக்கள் தம்மைத்
தாரீர் பொருளை எதிர்பார்க்கின்றார் உம்மை!''

1.13.2. குவெட்டா நிலநடுக்கம்

1935ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் வைகறை 4 மணி அளவில் நெஞ்சத்தை நடுங்கச் செய்யும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இன்றைய பாகித்தானைச் சேர்ந்த, அன்றைய இந்தியாவின் ஒரு பகுதியாயிருந்த குவெட்டா நகரில் அந்தக் கொடுமை நடந்தது. குவெட்டா நகரை அறியாத தமிழ் மக்களுக்கு அதைப் பற்றிய விளக்கத்தை அளித்து, நிலநடுக்கச் செய்தியை 7.6.1935 'ஊழியன்' இதழ் (ப.5) வழங்கும் வகையைக் காண்போம்.

குவெட்டா விவரம்

''குவெட்டா இந்தியாவின் வடமேற்கு மூலையில் பலூசிஸ்தானத்தில் இருக்கும் ஓர் பட்டணம். சமுத்திர மட்டத்திலிருந்து 5500 அடி உயரத்திலிருக்கிறது. கந்தஹாருக்குப் போகும் வழியில் போலன் கணவாயிலிருக்கும் இப்பட்டணம் பிரிட்டிஷாரின் பெரிய ராணுவ நிலையம். ஏராளமான விமானங்கள் இருக்கின்றன. குவெட்டா பிரதேசம் 20 மைல் நீளமும் 5 மைல் அகலமுடையது. அங்குள்ள ஜனத்தொகையில் முஸ்லிம்களே அதிகம்.

அசோஷியேட் பிரஸ் நிருபர் வெளியிடும் செய்தியொன்றினால் குவெட்டா பூகம்பத்தில் இறந்தவர் தொகை 56 ஆயிரம் என்று தெரிகிறது''.

இதே இதழில் 'குவெட்டா பூகம்பம்' என்னும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள பிறிதொரு கட்டுரை படிப்பவர் மனத்தை உருக்கும்

தன்மையில் அமைந்துள்ளது. அதிலிருந்து சில பகுதிகள் :

> ''அந்தோ என்ன கொடுமை!'' பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்பதுபோல இந்த வாடும் பாரததேசத்திற்கு மேலும் மேலும் துன்பமே வந்து கொண்டிருக்க வேண்டும்! கீழ் திசையில் - பீஹார் மாகாணத்தில் இக்கொடுமை ஏற்பட்டு இன்னும் 16 மாதங்கள் கழிந்திலவே! அதனால் ஏற்பட்ட திகில் தணியுமுன்பு அம்மம்மா! அதைப்போல் ஏழுமடங்கு அதிகமான இந்தியரின் உயிரைக்குடிக்கும் அளக்கொணா விபத்து ஏற்பட்டு விட்டதே?...
>
> குவெட்டா பிரதேசம் பிணக்காடாக கழுகும் காகமும் மொய்க்கும் நிலைமையிலிருக்கின்றது! வானைத் துளைத்து எழில் பெற்றிருந்த அந்நகரம் நோயும், வெறுமையும் வாட்ட, தூள்தூளாகத் தரைமட்ட மாய்க் காணப்படுகிறது. உயர்ந்த அரசாங்க நிலையங்கள், பரந்த விமான நிலையங்கள், விரிந்த ரோடுகள், விரைந்த ரயில் தொடர்கள் எல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுச் சுடுகாடாய் இருக்கின்றன. எங்கும் துர்நாற்றம் - பிணக்குவை - ஈனத்தொனி!...
>
> நாம் பிறருக்கு - நம் சகோதரர்கட்கு - ஜாதி பேதமின்றி - மதபேதமின்றி - உதவி புரிய - தொண்டாற்ற - எவ்வளவு தயாராக இருக்கிறோமென்பதைக் காண்பிக்கும் தருணமே நம் கண்முன் இன்று வந்திருக்கின்றது. ஏற்கனவே இதுபோன்ற பரீட்சையில் வெற்றி பெற்றிருக்கும் நமக்கு இம்முறை காகிதமெடுத்து எழுதுவது சற்றும் வருத்தமல்ல. பீஹாருக்கு உதவியதுபோல் ஏழுதரம் அதிகமாகச் செய்வோம் என்பதை இன்று நாம் காண்பிப்போமாக. தேசத்தொண்டும் தியாகமுமன்றோ நம் செம்மதம்?...

இத்தகைய வேண்டுகோள்கள் நாடு முழுவதும் எழுந்தன. 'குவெட்டாதினம்' கடைப்பிடிக்கப்பட்டு நன்கொடை திரட்டும் பணி நாடெங்கும் நடந்தது. தமிழ்நாட்டில் தேவகோட்டையில் 30.6.35-இல் குவெட்டா தினம் நடத்தி 'மேற்படி கஷ்ட நிவாரணத்திற்கு இவ்வூர் வாசிகளிடையே இயன்றவரை நிதி வசூல் செய்து, காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் நிவாரண நிதிக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கிறது' என்று தீர்மான மும் நிறைவேற்றியதோடு கூட்ட முடிவில் கலந்து கொண்டவரிடம் நன்கொடையும் பெறப்பட்டது. (ஊழியன் 5.7.1935, ப.37)

குவெட்டா நகரில் மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு வேளையில் 56 ஆயிரம் பேரின் உயிரைக் காவுகொண்ட அந்த நிலநடுக்கம் பாரதிதாசனை உலுக்கித்துயரத்தில் ஆழ்த்துகிறது. பிழியும் மனத்துயர் பாடலாய் வழிகிறது. 16 கண்ணிகளைக் கொண்ட

அந்தச் சிந்துப்பாடல், பாரதிதாசன் அப்போது ஆசிரியராக இருந்து வெளிவந்த 'ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' இதழில் (வெளியீடு 3, யுவ, வைகாசி) உடனுக்குடன் வெளியிடப்படுகின்றது. குவெட்டாவில் நடந்தது சாவு எனப் பாரதிதாசனால் கருத முடிய வில்லை. அது 'பெரும் படுகொலை' எனக்கருதிக் 'குவட்டாவில் கூட்டக்கொலை' என்னும் தலைப்பில் பாடல் புனையப்பட்டுள்ளது.

''நல்ல குவட்டாவில் - உன்
நல்ல உறவினர்கள்
இல்லம் தெருக்களுடன் - அவர்
இல்லைஎனக் கேட்டோம்
சொல்லத் துடிக்குதடா - உடல்!
தூயவட நாட்டார்
அல்லற் பெருஞ்சாவின் - வயிற்றில்
அகப்பட்டறைப் பட்டார்!

'அடே! இறந்தவர் தமிழர் அல்லரே என்று எண்ணிவிடாதே. வடநாட்டார்தாம் எனினும் தூயவர், நல்லவர், எல்லாவற்றிற்கும் மேலாக உன்னுடைய உறவினர்' என்கிறார் பாரதிதாசன்.

''சோகம் புலம்புமடா - இந்தத்
தொல்லைச் செயல் கண்டால்'

ஒரே அடியில் துயரத்தின் உச்சத்தை உணர்த்துகின்றார். உலகையே நடுக்குந்துயர் என்பதை,

'எண்ணச் சகிக்கவில்லை - நகர்
எங்கும் சுடுகாடாம்
கண்டவர் செத்திருப்பார் - இந்தக்
கஷ்ட நி ஷ்டூரமெலாம்!
அண்டை அயலிருப்பார் - அவர்
அன்பினில் செத்திருப்பார்
எண்டிசை கேட்டிருக்கும் - இதை!
ஏக்கம் அடைந்திருக்கும்'

என வரைந்து கொண்டே செல்கிறார். இப்படியே பாடல் முழுவதும் அழுகைப் புலம்பலாகவே அமைந்துவிடவில்லை.

'மக்களுக் கிங்குழைப்பாய் - இங்கு
வாழ்ந்திடும் நாட்களெல்லாம்
தக்கன செய்வதற்கே - மனம்
சலித்தல் விட்டொழிப்பாய்!

அக்கினி மத்தியிலும் - நீ
அஞ்சுதல் நீக்கிடுவாய்!
புக்க மனிதரெல்லாம் - ஒற்றைப்
போகமுற உழைப்பாய்!

என நம்பிக்கையை விளைத்து நல்லன செய்யத் தூண்டும் குரலோடு பாடலை முடிக்கிறார்.

1.13.3. சீன எதிர்ப்பு

இந்தியாவும் சீனாவும் அண்டை நட்புறவு நாடுகளாக விளங்கின. 1954-இல் இரண்டு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'பஞ்சசீலக் கொள்கைகள்' அடிப்படையில் இரண்டு நாடுகளுக் கிடையிலான உறவு வலுப்பெற்றதாய்க் கருதப்பட்டது. 1959-இல் சீனாவின் உள்நாட்டு நிலமைகளும், திபேத்தில் ஏற்பட்ட மாற்றங் களும் அவற்றின் விளைவாய்த் தலாய்லாமா ஆயிரக்கணக்கான தனது ஆதரவாளர்களோடு இந்தியாவிற்குள் நுழைந்ததும் அவர்களுக்கு இந்தியா அடைக்கலம் தந்ததும் இருநாட்டு உறவுகளில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தின.

பஞ்சசீலக் கொள்கைகளில் முதலாவதான 'ஒரு நாட்டு எல்லையினையும் இறையாண்மையையும் மற்ற நாடு சமமாக மதித்து நடந்து கொள்ளுதல்' என்பது கேள்விக்குறியானது. சீன இந்திய நட்புறவு சிதையும் வகையில் எல்லை மீறல்கள் ஏற்பட்டன. எல்லைச் சிக்கலுக்குத் தீர்வு ஏற்படாத நிலையில் இருநாடுகளுக்கிடையிலான பகையுணர்ச்சி வளர்ந்து சீனப்படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவும் போக்கு ஏற்பட்டது.

1962 அக்டோபர் 12-இல் இந்தியத் தலைமையமைச்சராக இருந்த நேரு 'சீன ஊடுருவல்காரர்களிடமிருந்து இந்திய எல்லையை இந்தியப்படை மீட்டெடுக்கும்' என அறிவித்தார். அறிவித்த ஒரு வாரத்தில் இந்திய - சீன எல்லைப்போர் மூண்டது. கட்சி வேறுபாடு, மத வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட குரலில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பாரதிதாசன் சீனாவின் நடவடிக்கைகளைக் கண்டித்து, எல்லைத் தகராறு ஏற்படத்தொடங்கிய 1959-இலேயே பாடல் இயற்றி யுள்ளார். 'சீனாவை எதிர்ப்பது தமிழர்கடன்' என்னும் தலைப்பில் குயில் கிழமை இதழில் (29.12.59) பாடல் எழுதியுள்ளார். சீனப் படைகள் இந்திய எல்லையில் ஊடுருவியதை எதிர்த்துத் தமிழர்கள் போரில் ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தும் இப்பாடல் பொதுவுடைமைக் காரர்களையும் வன்மையாகச் சாடுகிறது.

நன்றியிலான் பொதுவுடைமைக் காரன்; இந்நாள்
நாடுபிடிக் கும்கொள்கை அவனின் கொள்கை!
புன்தொழிலே அவன் தொழிலாம்; அவனுரைக்கும்
பொதுவுடைமைப் பண்பாடும் அவன்பால் இல்லை.
கொன்றுகுவிப் பான்மக்கள் தம்மை! ஆடு
கோழிகளும் மாந்தர்களும் அவனுக் கொன்றே.
வன்பனைப் போய் வெல்லுவது தமிழர் வேலை;
வடநாட்டு நரிக்கூட்டம் போர் செய்யாது.

என்று சீனப் பொதுவுடைமைக் காரர்களைக் கடுமையாகத் தாக்கி, வடநாட்டார் போர் செய்யாது இருந்தாலும் இருக்கலாம். தமிழர்கள் அவ்வாறு இருத்தல் கூடாது என்கிறார்.

சீனனால் வருந்தொல்லை தில்லிக் காரத்
தீயருக்கு மட்டுமன்று; நமக்குந் தானே?
ஆனதினால் தமிழர்எலாம் போருக்கான
ஆயத்தம் செய்திடுக! எழுக இன்றே...

தமிழர்கடன் எது? அதனைச் சாற்றக் கேளீர்
தலைகொழுத்த சீனரைப்போய்த் துரத்த வேண்டும்
இமைக்கு முன்னம் இங்குள்ள பொதுவுடைமை
என்பவரைச் சிறைக்குள்ளே தள்ள வேண்டும்.

என்று தமிழர்களைப் போரில் ஈடுபடுத்துவதோடு, அன்று சீனச் சார்புக்குரல் கொடுத்த - இந்தியாவின் பொதுவுடைமைக் கட்சிப் பிரிவினரைச் சிறைப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

இப்பாடலில் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தினரைக் கடுமையாகச் சாடுவதன் காரணத்தைப் பின்வரும் பாரதிதாசன் கட்டுரைப் பகுதி தெளிவாக விளக்குகிறது.

''தலைதெறிக்க ஓடிவந்த தலைலாமாவுக்குத் தஞ்சம்! தன்னாடு திரும்பிவந்த தமிழனுக்கு வஞ்சம்! இப்படி ஓரவஞ்சகமாக நடந்துகொண்ட நேருபிரானின்தலையை குழப்புகிறது சீனா, இந்திய எல்லைத் தகராறு தரும் விளைவால்.

இலங்கைத் தமிழர்கள் கைவிடப்பட்டார்கள் என்று எண்ணி நாம் வருத்தம் அடைவதைவிட, பாவம் பஞ்சசீலத் தலைவர்களின் கொள்கையிலே ஓட்டையிருப்பதைக் கண்டு வருத்தமடைகிறோம் - பரிதாபப்படுகிறோம்.

பக்கத்தில் தீ இருக்கிறது என்று எண்ணி குளிர் காயும் கட்சிதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

இந்தியாவின் அதிகாரத்திற்குட்பட்ட சுமார் 8400 சதுரக்கல் பிரதேசத்தை ராணுவ சூன்யமாக்க வேண்டும் என்று கூறும் சூ-வின் கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் ஏற்பதாக - அதன் தலைவர் டாங்கே கூறுகின்றார்.

அதே நேரத்தில் காசுமீர் பிரதமர் பக்சிகுலாம் கூறுகின்றார், சீனருக்கு உரிமையில்லாத நமது எல்லையிலிருந்து வெளியேறும்படி அவர்களிடம் கூறுவதுதான் முறை. இனி நமது வேலை நமது எல்லைகளின் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதுதான்.

இந்த அளவுகூட துணிந்து கூற முடியாதவர்களின் ஆட்சியிலே தான் இந்திய உபகண்டம் சிக்குண்டு கிடக்கிறது.

நம்மைப்பார்த்து காட்டுமிராண்டிகள் என்று கூறிய நா இன்று செஞ்சீனத்தின் செய்கை கண்டு எழ முடியாமல் உள்ளடங்கிக் கிடக்கிறது...! ஏன்?'' (குயில் 17.11.59 ப.13) சீனப்பூசல் தொடங்கிய போது இவ்வாறு அறிவுறுத்திய பாரதிதாசன் எல்லைப் போர் மூண்ட 1962இல் சீனப்போக்கைக் கண்டித்துப் பல பாடல்கள் எழுதினார். அழைப்பு, உலகின் அமைதியைக் கெடுக்காதே, என் நாட்டில் கால் வைத்தாய் சீனா, சீனாக்காரன் தொலைந்தான், சூயென்லாய் சீனரின் நோய், தேசத்தைக் காத்தல் செய், முனையிலே முகத்து நில், வருக போரே முதலிய சீன எதிர்ப்புப் பாடல்களைக் குயில் கிழமை இதழ், இனமுழக்கம் முதலிய பல இதழ்களில் எழுதினார்.

சென்றதடா அமைதி நோக்கி உலகம் - அட
சீனாக்காரா ஏண்டா இந்தக் கலகம்?

என்று ஒருபாடல் தொடங்குகிறது.

சீனாக்காரன் தானேவந்தான் போருக்கு - நம்
சிறுத்தைக் கூட்டம் வேறே இங்கே யாருக்கு!
போனால் கிடைக்கும் போரில் - அந்தச்
சீனாக்காரன் ஈரல்...

சீனனுக்கே இங்கே என்ன வேலை? நம்
சிங்கப்படை கிழிக்கட்டும் அவன் தோலை

தானே வந்தான் கொழுத்து - தன்
தலை இழந்தது கழுத்து!

என்று பாட்டு வரிகளிலே சீனரை வேட்டையாடுகிறார் பாரதிதாசன். சீனப்போரில் தான் எதிர்பார்க்கும் வெற்றியை

''இமையத்துக்கே வெற்றி - தென்
குமரிக்கு நல் வெற்றி!
கமழும் காவேரிக்கும் - நற்
கங்கைக்குமே வெற்றி!

என்று ஒட்டுமொத்த இந்தியாவின் வெற்றியாகக் கனவு காண்கிறார்.

இவற்றோடு சீன எதிர்ப்பு நாடகம் ஒன்றையும் பாரதிதாசன் நடத்தியதை அறியமுடிகிறது. 'நாட்டன்பையும் பாரதவீரரின் எழுச்சியையும் சீன எதிர்ப்பின் இன்றியமையாமையையும் விளக்கும் மிகச்சுவையுடைய ஒரு நகைச்சுவை நாடகம்' பாரதிதாசனால் 'பாரதப் பாசறை' என்னும் பெயரில் இயற்றப்பட்டு 29.04.1963இல் அவரின் 74ஆவது பிறந்தநாள் விழா அன்று சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் நடத்தப்பெற்றது. 'கற்கண்டு' என்ற பெயரில் தனி நூலாக முன்னரே வெளியிடப்பட்ட பாரதிதாசனின் நாடகப் பகுதியோடு சீன எதிர்ப்பையும் இணைத்து எழுதப்பட்டதே இந்தப் 'பாரதப் பாசறை' என்று அறியமுடிகிறது. (பாரதப்பாசறை நாடக விளம்பர அறிக்கையின் ஒளிப்படி, பாரதிதாசன் இதழ்ப் பணிகள், ப.176க்கும் 177க்கும் இடையில்)

2.0 இயல் இரண்டு

2.1. இலங்கைத் தமிழர் நிலை

அயல்நாடுகளில் பிரெஞ்சுக்காரர்களாலும் ஆங்கிலேயர் களாலும் தேயிலைத் தோட்டங்களிலும் கரும்பு வயல்களிலும், இரப்பர்க் காடுகளிலும் உழைத்துப் பிழைக்க அழைத்துச் செல்லப் பட்டு அல்லல்களுக்கு உள்ளாகிய தமிழர்களின் நிலைகண்டு தன் ஆற்றாமை அவலத்தை வெளிப்படுத்தினார் பாரதியார்.

''ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்''

என்று உலகநாடுகள் பலவற்றிலும் கொடுமைக்கு ஆளாகித் தமிழச் சாதி படும் துன்பம் பாரதியைப் பெரிதும் பாதித்தது. (பா.பா. 810-811) பிஜித்தீவில் 'ஹிந்துஸ்திரீகள்' கரும்புத் தோட்டத்திலே மாடுகள் போல உழைத்துக் கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துவதையும் அவர்கள் சொரியும் கண்ணீரையும், நாட்டையும் வீட்டையும் நினைத்து அவர்கள் விம்மி விம்மி அழும் குரலையும் தஞ்சமின்றித் துன்பப்பட்டு மடிந்து சாதலையும் துயரங்கொப்புளிக்கப் பாடியுள்ளார் பாரதியார் (பா.பா. 747-749). அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட பாரதிதாசனும் அயலகத் தமிழர்கள்மீது ஈடுபாட் டுடன் இயற்றிய பாடல்கள் உள.

தென் திசையைப் பார்க்கும்போது 'அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன் இராவணன்' அவர் நினைவுக்கு வருகிறான் (மு.தொ.). 'சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள் தீராதி தீரர் என்று ஊது சங்கே' என்று முழங்குவார்.

தமிழகத்தின் எல்லையைக் குறிக்கும் பாடல் ஒன்றில் (குயில் 17.6.58) 'இலங்கை சிலம்பும் குமரி திருவடி தென்பால்' என்று இலங்கையைத் தெற்கெல்லையொடு தொடர்புபடுத்திக் குறிப்பிடு வதைக் காணலாம். அந்த இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்கள் பாரதிதாசனைப் பெரிதும் பாதித்தன. தனது துயரத்தையும் எதிர்ப்புக் குரலையும் எழுத்துகளில் பதிவு செய்துள்ளார்.

இலங்கை 1948 பிப்ரவரி 4இல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. பத்து மாதங்களில் அதாவது நவம்பர் 19இல் குடியுரிமைச் சட்டம் என்ற பெயரில் பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் ஒன்றை ஐக்கியத் தேசியக் கட்சியின் (UNP) இலங்கை அரசு நிறைவேற்றியது. இதன்மூலம் இலங்கையை வளமாக்கிய தமிழ்த் தொழிலாளர்களின் வாக்குரிமையும், வாழ்வுரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாயினர். பின்னர் இத்தமிழர்கள் தொடர்பில் இலங்கை அரசும், இந்திய அரசும் சில ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. அவற்றின் விளைவாக இலட்சக்கணக்கான தமிழர்கள் ஏதிலிகளாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். இலங்கையின் 1956 தேர்தலில் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) 'நாங்கள் பதவிக்கு வந்தால் 24 மணிநேரத்தில் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாகக் கொண்டுவருவோம்' என்று அறிவித்தது. மே மாதம் ஆட்சிக்கு வந்த அக்கட்சியினர் 'சிங்களம் மட்டும்' ஆட்சிமொழிச் சட்டத்தைச் சூன் மாதத்தில் கொண்டு வந்தனர். அரசு அலுவல் பெறச் சிங்களம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்னும் சட்டத்தால் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டனர். 1958 சனவரியில் 'வண்டிகளில் குறிக்கப்படும் எண்களின் முதல் எழுத்து 'ஸ்ரீ' என்று சிங்களத்திலே குறிக்கப்படவேண்டும் என்னும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட மனக்கசப்பு தமிழர்களிடையே பெரும் போராட்டமாக வடிவம் பெற்றது. நானூறு பேர்களுக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப் பட்டனர். ஏறத்தாழ 20,000 ஈழத்தமிழர்கள் ஏதிலிகளாகக் கொழும்பி லிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பலில் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த 1958 போராட்டத்தை 'முதல் இனக்கலவரம்' என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களான மலையகத் தமிழர்கள் இலங்கையின் பிறபகுதிகளில் இனக்கலவரம் வெடிக்கும் போதெல்லாம் சிங்களவர்களால் தாக்கப்பட்டுப் பெரும் பாதிப்புக் குள்ளாயினர். அவர்களில் கணிசமானோர் காலங்காலமாகத் தங்கள் உழைப்பின் பயனாகச் சேர்த்த உடைமைகளை இழந்து இந்தியாவிற்கு வரவேண்டியதாயிற்று. அகதிகளாக வந்த அவர்களுக்கு இந்திய அரசு முறைப்படிச் செய்யவேண்டிய உதவிகளைச் சரிவரச் செய்யாததோடு அவர்களுக்குச் சேரவேண்டிய உடைமைகளைச் சேர்க்க இலங்கை அரசுடன் உரிய நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இதைப்பற்றி இந்தியத் தலைமையமைச்சர் பண்டிதர் நேரு அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''இலங்கையில் நடக்கும் கலவரங்களுக்கும் இந்திய நாட்டிற்கும் சம்பந்தமில்லை; தமிழர், சிங்களவர் மோதலினால் தமிழர்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டதென்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது; இலங்கையிலிருந்து தமிழர்கள் போதுமான வசதியோடு வெளியேறு கிறார்கள். அவர்களுக்கு உதவி தேவையில்லை. இலங்கைவாழ் தமிழர் சொந்த நாடற்றோர்'' என்று கருத்துத் தெரிவித்தார். இதையறிந்து ''பாகித்தானில் வடஇந்தியர் விட்டு வந்த சொத்துக் களுக்கு நட்ட ஈடு கோரி நாடோறும் கடிதமெழுதியும் தூதுக்குழுவை அனுப்பியும் பேச்சுவார்த்தை நடத்தும் நேரு பண்டிதர் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைப்பற்றி நமக்குக் கவலை யில்லை என்கிறார். வடநாட்டுப் பணியாக்கள் நாடு பிரிவினையின் போது இந்தியாவுக்கு ஓடிவந்தபோது வரவேற்று மறுவாழ்வுக்கு 345 கோடி ரூபாய் செலவிட்ட நேருதான் இலங்கைத் தமிழர்கள் வசதியோடு வெளியேறுகிறார்கள் என்று கூறுகிறார்'' என்று நேருவின் போக்குப்பற்றி வருத்தமடைந்து அதனைக் கண்டிக்கும் கட்டுரை யொன்றைக் குயில் (26.8.58) இதழில் வெளியிடுகிறார் பாரதிதாசன். அடுத்த இதழிலேயே (9.9.58)

நிலைகெட்ட பாகித்தான் மக்கட்கு நேரு
மலையொத்த பொன்னை வழங்கி - நிலைகெட்
டிலங்கைவிட்டு வந்த தமிழர்களை எல்லாம்
கலங்கவிட்டார் கையை விரித்து.

என்று இந்திய அரசின் 'இரட்டைநிலைப் போக்கை' - மாற்றாந்தாய் மனப்பான்மையை எடுத்துக்காட்டும் வெண்பாவை எழுதுகிறார்.

பண்டிதநேரு தலாய்லாமாவுக்கு அடைக்கலம் கொடுத்ததன் தாக்கங்களைப் பற்றி எழுதிய 'தலைலாமாவுக்குத் தஞ்சம்' என்னும்

கட்டுரையில் (குயில் 17.11.59) இலங்கைத் தமிழர்கள் நேருவால் கைவிடப்பட்டதை,

''இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியான தமிழ்நாட்டின்கண் இருந்து பிழைப்பு நோக்கிச் சென்றும் - இலங்கையைத் தம் தாயக மெனக் கருதி வாழ்ந்த தமிழ்ப்பெருங்குடி மக்களை, இலங்கை அரசினர் துரத்தியடித்த போழ்து பஞ்சசீலம் பேசிய நேருதுரை அவர்கள் தஞ்சமளிக்கவில்லை - அதற்கு மாறாகக் கண்ணீர் சிந்தும் மறவர்குடி மக்களைக் கைவிட்டார்.

தலைதெறிக்க ஓடிவந்த தலைலாமாவுக்குத் தஞ்சம்! தன்னாடு திரும்பி வந்த தமிழனுக்கு வஞ்சம்! இப்படி ஓரவஞ்சகமாக நடந்து கொண்ட நேருபிரானின் தலையை குழப்புகிறது, சீனா, இந்திய எல்லைத் தகராறு தரும் விளைவால்'' என்று சாடுவதைக் காணலாம்.

இலங்கையில் தொன்றுதொட்டு வாழும் பூர்வீகக் குடிகளாகிய தமிழர்களின் உரிமை உடைமைகளைப் பறித்துக் கொடுமைப் படுத்தும் பேரினவாதச் சிங்கள அரசின் செயல்களைக் கண்டுகொள் ளாமல் நடந்துகொள்ளும் இந்திய அரசின் போக்கை எதிர்க்கிறார் பாரதிதாசன்.

உறவுகொள் இலங்கையில் ஆயிரம் தமிழரின்
உயிர்க்கொலை செய்தாரை ஆதரித்தே வரும்
நெறியற்ற தில்லியின் நீட்டாண்மைக் கஞ்சோம்
நேயத்தால் நம்தமிழ்நாட்டை மீட்பீர்

என்னும் பெரியார் ஈ.வெ.ராவின் கருத்தை ஏற்றுத் தனித்தமிழ்நாடே தீர்வு என்னும் முடிவுக்கு வருகிறார் (குயில் 19.8.1958).

தமிழர்களுக்குள்ள உரிமையைப் படிப்படியாகப் பறித்துவரும் சிங்கள அரசின் போக்கைக் கண்டித்து,

சிங்களர்க் குள்ள இலங்கையின் உரிமை
செந்தமி ழர்க்கும் உண்டு! திருமிகு
சட்ட மன்றிலும் வேறே எவ்வகைப்
பட்ட மன்றிலும் பைந்த மிழர்க்கு
நூற்றுக் கைம்பது விழுக்காடு நோக்கிப்
படிமை ஒதுக்கப்படுதல் வேண்டும்!

என்று குரல் கொடுக்கிறார். இப்பாடலிலேயே (தினகரன் 11.7.1959 இலங்கை) ஈழத்தமிழர்கள் பிளவுபட்டு நிற்காமல் ஒற்றுமையாக இருப்பதே அவர்களுக்கு வாழ்வுதரும் என்பதைப் பாரதிதாசன் வலியுறுத்தத் தவறவில்லை.

இலங்கைத் தமிழர் துலங்க எண்ணினால்
அவர்கள் ஒற்றுமை அடைய வேண்டும்
வேற்றுமை விளைவிக்கும் ஆற்றல் எவற்றையும்
கான்று மிழ்தல் வேண்டும்; கழிசடைச்
சாதி சமயம் என்னும் எவற்றையும்
மதித்தல் கூடாது மறப்பது நன்று
தமிழர் நலத்தைத் தாக்கும் கட்சிகள்
எவற்றிலும் எவரும்சேர்தல் சரியன்று
தமிழர்கள் அனைவரும் கூடத் தக்கதோர்
கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும்

என்று அறிவுறுத்துகின்றார்.

2.2. திபேத்து விடுதலை

திபேத்து நாட்டின் அண்டையில் உள்ள சீனாவில் 1944இல் பொதுவுடைமை அரசு ஏற்பட்டது. அவ்வரசு திபேத்தைத் தன் பிடிக்குள் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகளுக்கு 1950இல் வெற்றி கிடைத்தது. இரண்டு நாடுகளுக்கிடையே செய்துகொள்ளப் பட்ட உடன்படிக்கையின் விளைவாகத் 'தலாய்லாமாவின் உள்நாட்டு ஆட்சியில் சீனா தலையிடுவது இல்லை. ஆனால் திபேத்தின் வெளி நாட்டு விவரங்களைச் சீனா பார்த்துக் கொள்ளும்' என்று முடிவா யிற்று. மேலும் திபேத்தை மூன்றாகப் பிரிப்பது, மத நிறுவனங்களின் சொத்துக்களைக் கைப்பற்றுதல் முதலிய சில சீர்திருத்தங்களை மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. திபேத்தில் நுழைந்து சீனா செலுத்திய மேலாதிக்கத்தை 1950 முதல் திபேத்து மக்களில் ஒரு பகுதியினர் எதிர்த்துப் போராடி வந்தனர். நடு திபேத்தில் சீனரை எதிர்த்து உச்சக்கட்டக் கொரில்லாப்போர் நடைபெற்றது. மார்ச்சு 1959இல் அப்போர் தோல்வியைக் கண்டது. திபேத்து மக்களின் தலைவராக இருந்த தலாய்லாமா திபேத்தைவிட்டு வெளியேறினார். அவருடன் 75,000 திபேத்தியரும் வெளியேறினர். வெளியேறிய தலாய்லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவருக்குப் பண்டிதர் நேரு அடைக்கலம் தந்தார். தலாய்லாமாவுக்குத் தஞ்சம் அளித்ததால் இந்தியச் சீன உறவு விரிசல் கண்டதோடு எல்லைத் தகராறுகள் ஏற்படுவதாயின.

தலாய்லாமா தஞ்சம் அடைந்த உடனே அதனை மையக் கருத்தாக வைத்து எதிர்கால விளைவைக் கணிக்கும் நோக்குடன் பாரதிதாசன் பாடிய பாடலே 'திபேத்து விடுதலை' என்பதாகும். (குயில் 26.5.1959) தலாய்லாமா யார்? என்பதை விளக்கத் தொடங்கிய

பாரதிதாசன் 'திபேத்து மக்களுக்குக் கடவுள்!'' என்று கூறுவதோடு 'வஞ்சமாகத் திபேத்துமக்களைத் தன்பிடிக்குள் வைத்திருந்த வேடன்' என்றும் சாடுகிறார்.

''கொஞ்சும் புறாக்களை ஒன்று தவறாது
வஞ்ச வலைக்குள் கட்டி யாண்ட
திபேத்து வேடனார்''

என்று எள்ளற் சுவையுடன் பதிவுசெய்கிறார். அண்டை நாடாகிய சீனாவில் மக்கள் விடுதலை அமிழ்தம் உண்ணும் வேடிக்கை திபேத்திய மக்களைத் தெளிவுபெறச் செய்தது. அவர்கள் 'எமக்கும் விடுதலை வேண்டும்' என்று சீனரிடம்வேண்டுகின்றனர். 'சீனாக்காரச் சிங்கம்' பூனைபோல் திபேத்தில் மெல்லடி வைத்ததாம். அதனால் 'கடவுள்', 'நேருவின் அடியில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்தார்' என்கிறார் பாரதிதாசன். விழுந்தவர்க்கு நேரு விருந்தளிப்பதைப் பாரதிதாசனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''காட்டுமிராண்டி காட்டு மிராண்டிக்குக்
காட்டும் சலுகைக்குக் கணக்கா? வழக்கா?''

என்று கடுமையாகச் சாடுகிறார்.

தலாய்லாமாவுக்கு நேரு அடைக்கலம் கொடுத்ததைப் பற்றி மக்களின் கருத்து என்னவாக இருந்தது என்பதை,

'திபேத்து மக்களின் தீமை தீர்வதா?
''தலைலா மாவால் சாவை உண்பதா?''
என்பது நேருவின் இரண்டு கையில்
அடங்கி விட்டதாய் அனைவரும் எண்ணுவர்''

என்று கணிக்கிறார். அடைக்கலம் அளித்ததால் சீனாவுக்கும் இந்தியா வுக்குமிடையிலான நட்புறவு சிதைந்ததும் எல்லைப் போர் நடந்ததும் இன்று வரை எல்லைச் சிக்கல் தீர்க்கப்படாமல் கசப்புணர்வு தொடர்வதும் 'தலாய்லாமாவால் சாவை உண்பதா?' என்னும் கணிப்பின் முன்னுணர்திறனை வெளிப்படுத்துவதாகும். பாடலின் முடிவில் பாரதிதாசன் தமிழக அரசியலைச் சுட்டிக்காட்டித் திபேத்து மக்களுக்கு அறிவுரை சொல்லும் வகையில்,

'சீனாக்காரன் திபேத்தைக் காப்பது
தன்னிடம் உளதென்று தானினைக் கின்றான்
அந்தத் திபேத்தின் ஆச்சாரி களையும்
அந்தத்திபேத்தில் அண்ணாக் களையும்
அங்குள்ள பெரியார் தாமும் தொண்டரும்

முற்றும் அடக்கும் உணர்ச்சி
பெற்றுத் திபேத்தில் விடுதலை பெய்கவே'

என்று நிறைவு செய்கிறார். சீனரிடமே பொறுப்பு முழுவதையும் விட்டுவிடாது உட்பகை களைந்து விடுதலை பெறுதல்' தமிழகப் பெரியாரையும் அவர் தொண்டரையும் போன்ற திபேத்துத் தோழர்களின் பொறுப்பு என்பதை நினைவுறுத்துகிறார்.

2.3. செருமனி தொடர்பு நிகழ்ச்சிகள்

2.3.1. எம்டன் கப்பல் வருகை

முதல் உலகப்போர் 1914 சூலை 28இல் தொடங்கி 1918 நவம்பர் 11இல் முடிவுற்றது. போர்க்கான பல காரணங்களில் அடிப்படையாகக் கருதத்தக்கது செருமனியின் நாடு பிடிக்கும் மண்ணாசையாகும்.

போர் தொடங்கி மூன்று மாதக்கால அளவில் செருமனியின் போர்க்கப்பல் சென்னை நகரைத் தாக்கியது. 1914 செப்டம்பர் 22 இரவு 9.30 மணியளவில் சென்னை நகரின் பல இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன.

போர்க்கப்பல் ''எம்டனிலிருந்து கிளம்பிய குண்டுகள் சென்னைத் துறைமுகத்தின் வெளியே நின்றிருந்த 'ஸூப்ரா' என்ற பிரிட்டிஷ் கப்பலின் மேல் தளத்திலிருந்த 'லைட்சிக்னலர்' பிளெச்சர் என்பவரைத் தாக்கி அவரை ஸ்தலத்திலேயே மரணம் அடையச் செய்துவிட்டது. அங்கிருந்த ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான 'பர்மாஷெல் ஆயில் டாங்குகள்' மீதும் குண்டுகள் விழுந்தன. இரண்டு பெரிய எண்ணை டாங்குகளில் தீப்பிடித்து 'திகுதிகு'வென எரிந்தது. அதிலிருந்து வெளிப்பட்ட புகை வானத்தைப் புகை மண்டலமாக்கி யது. காவலுக்காக நின்று கொண்டிருந்த ஒரு காவலாளியும், துறைமுகப் பகுதியில் பணியிலிருந்த ஒரு போலீஸ்காரரும் மரணம் அடைந்தனர். அடுத்த குண்டுகள் சென்னை ஹைகோர்ட்டின் அருகே வெடித்து பலமான காம்பௌண்ட் சுவரை அடியோடு பெயர்த்துத் தள்ளின. மற்றொரு குண்டு 'ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை'யினருகே விழுந்தது. அது வெடிக்காமல் மணலில் புதைந்துவிட்டது.'' (ஜய்ஹிந்த் செண்பகராமன் ப. 174)

நாடகப் பாணியில் விளக்கப்படும் மேற்படிக் குண்டு வீச்சுகள் சென்னை நகர மக்களிடையே பேரச்சத்தை ஏற்படுத்தின. அஞ்சிய மக்கள் ஆயிரக்கணக்கில் சென்னையை விட்டுச் சென்றதாகச் செய்திகள் வெளியாயின. பர்மாசெல் எண்ணெய்க் கிடங்குக் குண்டுவீச்சுத் தாக்குதலில் மூவர் உயிரிழந்ததாகவும் பதின்மூன்றுபேர்

காயமுற்றதாகவும் 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டது. (A Hundred years of the Hindu, P. 227) உயர் நீதிமன்றத்தில் குண்டு விழுந்த இடத்தில் பின்னர் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டது.

சென்னையில் குண்டு வீசியதும் எம்டன் கப்பல் புதுச்சேரிக்குச் சென்றது. புதுச்சேரியில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் கப்பல் தங்கியிருந்ததாகவும் அக்கப்பல் வருகையை வ.வே.சு. அய்யர் முன்னரே அறிந்திருந்ததாகவும், சுத்தானந்த பாரதியும் மாடசாமியும் கப்பலுக்குச் சென்று அதன் உதவித் தளபதியாக வந்த செண்பகராமன் பிள்ளையைச் சந்தித்து வ.வே.சு.அய்யர் அளித்த கடிதத்தை அவரிடம் கொடுத்ததாகவும் உறுதிப்படுத்த வேண்டிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜய்ஹிந்த் சண்பகராமன் ப. 183 - 187).

புதுச்சேரிக்கு எம்டன்கப்பல் வருகையையும் அதனை அறிந்த மக்களிடம் ஏற்பட்ட விளைவுகளையும் மையப்பொருளாக வைத்துப் பாரதிதாசன் வரைந்த கதைக்கட்டுரையே ''ஜாதி ஆபத்து எம்டன் கப்பல் வரவு'' என்பதாகும். கப்பல் வந்து சென்று பதின்மூன்று ஆண்டுகளின்பின் எழுதப்பட்டது இது. (புதுவை முரசு 12.1.1931)

ஏழைகளும் பணக்காரருமாகிய புதுவை வாசிகளில் பலர் எம்டன் கப்பல் வருகையினால் அச்சமுற்றுப் புதுவைக்கு மேற்கில் பத்துப் பதினைந்து கல் தொலைவில் உள்ள சிற்றூர்களை நோக்கிச் சென்றுவிடுகின்றனர்.

அப்படிச் சென்ற ஊர்களில் ஒன்று கூனிச்சம்பட்டு. இவ்வூரில் பாரதிதாசன் இரண்டு முறை (1914, 1934) ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். எம்டன் கப்பல் புதுவைக்கு வந்த போது அவர் அங்குப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. புதுவை வாசிகள் இவ்வூரில் குடிபுகுந்ததால் அவர்களிடையே இருந்த சாதியுணர்வு முதலில் மறைந்ததும் பின்னர் எழுந்ததும் அதன் விளைவுகளும் பாரதிதாசனால் சுவைபடச் சொல்லப்பட்டுள்ளன.

கூனிச்சம்பட்டு மக்கள் தங்கள் ஊரைநோக்கி அஞ்சி வந்த மக்களை வரவேற்றுத் தங்கள் வீடுகளிலேயே தங்கிச்சமையல் செய்துகொள்ள இடமளித்தனர். வந்தவர்கள் இன்ன சாதியைச் சார்ந்தவர்கள் என்று எண்ணவில்லை. வந்தவர்களும் தங்களுக்கு இடமளித்தவர்கள் என்ன சாதிக்காரர்கள் என்று கருதவில்லை. இதுபற்றிப் பாரதிதாசன் ''கூனிச்சம்பட்டில் புதுவை வாசிகள் தங்கியிருந்த வரைக்கும் தமது ஜாதிப் பைத்தியத்தினின்று நீங்கிச் சமத்துவ வாழ்வு வாழ்ந்தனர். வாசகர்கட்கு நன்றாய் ஞாபகமிருக்கட்டும், புதுவை வாசிகள் இரண்டொருநாள் கூனிச்சம்பட்டியில் சமத்துவமாயிருக்க ஜெர்மனிக்

கப்பல் புதுவைத் துறைமுகத்துக்கு வரவேண்டியிருந்தது'' என்று நினைவுறுத்துகிறார்.

கப்பல் மறுநாள் போய்விட்டதைக் கேள்விப்பட்டுப் புதுவை திரும்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தநிலையில் கூனிச்சம் பட்டு இரெட்டிமார் வீதியில் நடந்த நிகழ்ச்சியைப் பாரதிதாசன் படம்பிடிக்கிறார். ''அவ்வீதியில் புதுவைக் குடும்பம் பத்துக்குமேல் தங்கியிருந்தன. அக்குடும்பங்களில் ஒரு குடும்பம் மிக்க தாழ்ந்த சாதி. பக்கத்து வீட்டில் இறங்கியிருந்த குடும்பம் உயர்ந்த ஜாதி. அதன் பக்கத்தில் நடுத்தரம், எதிர்த்த வீட்டில் தங்கியிருந்ததோ கொஞ்சம் சுமார். புதுச்சேரி வேளாளக்கிழவி ஒருத்தி ஜெர்மனியான் கப்பல் வந்தாலும் வந்தது! இந்த இடத்தில் கீழ்ச்சாதி, மேல்ஜாதி என்று இல்லாமல் எல்லாரோடும் சரிசமானமாய் இருக்க நேரிட்டது என்று சொன்னாள்.''

''பக்கத்து வீட்டில் நின்றிருந்த கீழ்ச்சாதி புதுவைப் பெண்ணின் காதில் இது விழுந்தது. அப்பெண் ஏன் முதலியார் வீட்டம்மா! அந்தக் கீழ்ச்சாதி நேற்று நினைப்பில்லாமல் போனதென்ன? இன்றைக்குத் தான் நினைப்பு வந்தது என்றால் உங்கள் மேல்ஜாதிப் பெருமையைச் சொல்லிக் கொள்ளாதிருந்தால் முழுகிப் போவது ஒன்றுமில்லையே'' என்றாள்.

இதைக்கேட்ட மேல்சாதிக் கிழவி தாழ்ந்த சாதியினரைப் பலவாறு இழிவுபடுத்திப் பேசுகிறாள். இதன் தொடர்ச்சியாக மேல்சாதிக்காரர்களுக்கும் தாழ்ந்த சாதிக்காரர்களுக்கும் கடும் மோதல் ஏற்படுகிறது. மோதலின் விளைவாக ''20 பேர்க்கு ஆபத்தான காயம் ஒருவன் இறந்தான். 15 பேர்க்குக் கைமுறிவு, கால்முறிவு'' கூனிச்சம் பட்டில் மருத்துவமனை இல்லாததால் வண்டிகளில் நோயாளிகளை யும் சொந்தக்காரர்களையும் ஏற்றிக்கொண்டு புதுவை மருத்துவமனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

பாரதிதாசன்,

> ''வழியில் என்ன விஷயமென்று கேட்பவர்களுக் கெல்லாம் பதில் சொல்ல வெட்கமாயிருந்தது. வெட்கக்கேடு ஜெர்மனியின் அக்ரமமான சண்டைக் கப்பலுக்குத் தப்பித்துக் கொள்ளுவது சாத்தியம். ஆனால் மனுவகுத்த ஜாதி என்னும்அக்ரமத்திற்குத் தப்பி உயிர் பிழைப்பது முடிய வில்லை''

என்று கட்டுரையை முடிக்கிறார். சாதியுணர்வு மக்களை ஆட்டிப் படைத்துச் சீரழிப்பதை, அதிலிருந்து தப்பித்துக்கொள்வது எளிதா

யில்லை என்பதை எம்டன் கப்பல் வரவு வழிப்பட்ட நடப்பு நிகழ்ச்சி நன்கு புலப்படுத்துகிறது.

2.3.2. இண்டன்பர்க்கும் இட்லரும்

செருமனி 1931, 32ஆம் ஆண்டுகளில் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியது. ஏறத்தாழ 60,000 பேர் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயினர். அப்போது தலைமைப் பொறுப்பேற்று ஆட்சி நடத்திய இண்டன்பர்க்கின் பதவிக்காலம் முடிவடைகிறது. பதவி நீட்டிப்புக் கூடாது என்னும் முடிவெடுக்கப்பட்டுத் தேர்தல் வருகிறது. 1932 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் இண்டன்பர்க்கை எதிர்த்து இட்லரும் பிற மூவரும் போட்டியிடுகின்றனர். அத்தேர்தலில் இண்டன்பர்க்கிற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஏப்பிரலில் இரண்டாம் தேர்தல் நடைபெறுகின்றது. இண்டன்பர்க் 1,93,59,642 வாக்குகளும் இட்லர் 1,34,17,460 வாக்குகளும் பெறுகின்றனர். இட்லருக்கு மீண்டும் தோல்வி ஏற்படுகிறது.

இந்தத் தேர்தல் வரலாற்றில் 1932 மார்ச்சுத் தேர்தல் நிகழ்ச்சியைப் பின்புலமாக வைத்து 21.3.1932 'புதுவை முரசு' இதழில் பாரதிதாசன் கற்பனை நயத்துடன் எழுதிய கதைக் கட்டுரையின் தலைப்பு 'சேசுநாதர் வருகை' என்பதாகும்.

இதனை எழுத அடிப்படையாக அமைந்தது ஒரு நாளிதழில் இடம்பெற்றிருந்த,

''ஜெர்மன் தலைவர் தேர்தல் :

''...ரைன்லாண்டில் உள்ள கத்தோலிக்கர் அனைவரும் கத்தோலிக்கரான ஹிட்லரை ஆதரிக்காமல் ப்ராட்டஸ்டண்டான ஹிண்டன்பர்க்கு வெற்றியடையப் பிரார்த்தனை செய்தார்கள்'' என்னும் செய்தியாகும்.

படுக்கையில் உறக்கம் வராமல் விழித்துக்கொண்டிருந்த பாரதிதாசன் இந்தச் செய்தியைப் பார்த்ததும் ''இந்த வரிகளின் அர்த்தத்தை என் உள்ளம் விழுங்கியவுடன் இருட்டும் வெளிச்சமும் இல்லாத வழியாக நான் ஆகாயத்தில் தூக்கப்பட்டேன்; சிந்தனையுலகில் இறக்கிவிடப்பட்டேன்'' என்று கற்பனையுலகில் பயணம் செய்கிறார். அவர் கண்ணெதிரில் அழகிய செருமனி தோன்றியது. அதில் ஒரு பரந்த மைதானம். மைதானத்தில் இரண்டு பட்டாளங்கள் எதிர் எதிரே அணிவகுத்து நிற்கின்றன. ஒன்று கத்தோலிக்கப் பட்டாளம்; மற்றொன்று புராட்டசுடண்டு பட்டாளம்;

புராட்டசுடண்டு பட்டாளத்தினர் ''எங்கள் இண்டன்பர்க்கு வெற்றி பெறுவார்; கத்தோலிக்கரான இட்லர் தோல்வியடைவார் என்பது தெரிந்து தானே புராட்டஸ்டண்டான எங்கள் இண்டன்பர்க் வெற்றியடையப் பிரார்த்தனை செய்தீர்கள்'' என்று கேட்கின்றனர்.

கத்தோலிக்கர்களும் 'எங்கள் இட்லர் வெற்றியடையக் கூடுமென்று முன்னரே தெரிந்தால் இண்டன்பர்க்கைப் புறக்கணித்து விட்டு இட்லரை ஆதரித்துத்தான் நீங்கள் பிரார்த்தனை செய்வீர்கள்'' என்று பேசுகிறார்கள். இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது இரு பட்டாளங்களின் நடுவிலிருந்து ''மூடர்களே! மூடர்களே!' என்று விளித்தவாறு ஓர் 'வாலிபத்திருமேனி' தோன்றி ''நான் தான் சேசுநாதர் என்று நம்புங்கள்'' என்கிறது. இருதரப்பினரும் ''ரக்ஷகரே ரக்ஷகரே'' என்று வணங்குகின்றனர். ''நான் தான் அறிவற்ற காலத்தில் மதம் போதித்தேன் என்று நம்புங்கள்... அப்போது மதம் என்ற ஓர் பலத்தின்கீழ் மனிதர் அடிமைப்பட்டதின்மூலம் முன்னேற்றம் அடைந்தனர்; அறிவு பெருகிய இக்காலத்தில் மனிதப்பலத்தின் கீழ் எம்மதமும் ஒழிவதன் மூலமேஅறிவு பெருகவேண்டும்; முன்னேற்ற மடையவேண்டும்... ஆகையால் மதங்களை மனத்திலிருந்து ஒழியுங்கள். மத ஸ்தாபனங்களை ஒழியுங்கள்; மதச் சின்னங்களை யெல்லாம் ஒழியுங்கள்; மதங்களுக்குரிய அடையாளங்களை யெல்லாம் ஒழியுங்கள்... மதஸ்தாபனங்களுக்குள்ள பணத்தை யெல்லாம் திரட்டி உலகமக்களுக்குப் பொதுவாக்குங்கள்'' என்று சேசுநாதர் கட்டளையிடுகிறார்.

கத்தோலிக்கரில் ஒருவன் 'கத்தோலிக்க நிறுவனப் பணத்தை யெல்லாம் கத்தோலிக்கர்க்குத்தானே பங்கிட வேண்டும்'' என்று கேட்கிறான். மீட்பராகிய சேசு ''வடிகட்டிய முட்டாளே, மதப் பிரச்சனை தீர்ந்தபின் மக்கள் சமந்தானே?'' என்று கண்டிக்கிறார்.

புராட்டசுடண்டில் ஒருவன் 'உங்கள் கிருபையால் அரசப்பதவி யடைந்த எங்கள் அரசர் புராட்டஸ்டண்டான படியால் அவராலான நன்மைகளை நாங்கள் தானே அடையவேண்டும்?'' என்று கேட்கிறான்.

இதைக் கேட்டுச் சினமுற்ற சேசுநாதர், ''அட! திப்பியைப் பற்றும் பன்னாடையே, புராட்டஸ்டாண்டு என்பதால் சமதர்ம விரோதமாக நான் யாருக்கும் கிருபை செய்வதில்லை, மதம் ஒழிந்த பின் ''உங்கள் சக்கரவர்த்தி'' என்பதற்கு அர்த்தமே இல்லை'' என்று கடிந்து சொல்கிறார்.

சிந்தனையுலகில் பயணம் செய்த பாரதிதாசன் 'முற்காலத்தில் இறந்து போனதாகச் சொல்லப்படும் சேசுநாதர்தான் இவர்' என்று பொய்சொல்ல வாயெடுக்கிறார். எரிந்துகொண்டிருந்த சிகரெட்டு உதட்டைச் சுட நடப்புலகில் தள்ளப்படுகிறார்.

''நான் மல்லாந்து படுத்திருப்பதையும், கையில் தினசரி வைத்திருப்பதையும், பெண்டு பிள்ளைகள் பக்கத்தில் மூட்டைப் பூச்சியால் நெளிவதையும் அறிந்தேன். கோழியும் கூவிற்று.''

இண்டன்பர்க்குத் தேர்தலைக் கருப்பொருளாக வைத்துப் பாரதிதாசன் செய்த இரவுக் கற்பனை வெளிச்சம் பரப்பும் வீரியம் கொண்டுள்ளது. கற்பனைச் சேசுநாதர், மதம்பற்றிய பாரதிதாசன் கருத்துகளை வழிமொழிவது மனங்கொள்ளத்தக்கது.

2.3.3. இட்லர் எதிர்ப்பும் ஆங்கில அரசுக்கு ஆதரவும்

பெரியார் ஈ.வெ.இராமசாமி இரண்டாம் உலகப்போர் தொடர்பான கருத்து அறிவிக்கும்போது ''இந்தப் போரில் இட்லர் வெற்றிபெற்றால் அந்நிய ஆட்சியின் கொடுமை பன்மடங்கு அதிகமாகிவிடும். இந்தியா உள்ளிட்ட உலக நன்மையைக் கருதினால் இட்லர் தோற்கவேண்டும். பிரிட்டன் வெல்ல வேண்டும்'' என்று குறிப்பிட்டார் (புரட்சியாளர் பெரியார் ப.108). 'விடுதலை' இதழ் போர் ஆதரவு ஏடாக மாற்றப்பட்டது. பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட திராவிடர் கழகத்தில் ஈடுபாட்டோடு பாடுபட்டு வந்த பாரதிதாசன் இட்லரை எதிர்த்து நாசிகளைக் கண்டித்து நேசநாடுகளின் ஆதரவுக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றி னார். அவரின் போர்முயற்சி ஆதரவு உரையும் பாடல்களும் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. (க.கு.நெ.கு.ப. 360)

அந்தக் காலத்தில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த திரைப்படப்பாடல் மெட்டுகளில் பாரதிதாசன் போர்முயற்சி ஆதரவுப்பாடல்கள் பலவற்றை எழுதினார். 'கருணாகரனே நடராஜா', 'சராசரங்கள்', 'உன் அழகைக் காணாத', 'உனைக்கண்டு மயங்காத', 'சத்வகுணபோதன்', 'எங்கும் நிறை', 'பூமியில் மானிட' முதலிய திரைப்படமெட்டுகளில் பாரதிதாசன் பல பாடல்கள் எழுதி இட்லரின் நாசிசக் கொள்கையினையும் சப்பானின் போர் வெறியையும் கடுமையாகக் கண்டித்துள்ளார். 'ஜனநாயகம்', 'எம்கொள்கை', 'தாக்குதல்', 'படைமுன்னேற்றம்', 'போர் எழுச்சி', 'இனிய செய்தி' ஆகிய தலைப்புகளில் அவர் இயற்றிய பாடல்கள் இன்றும் கையெழுத்து வடிவில் உள்ளன.

எடுத்துக்காட்டாக ஒரு பாடல்:

மக்களின் சம்மதம் பெற்று நடத்திடும் ஆட்சி - அது
மாசற்ற தென்றுரைக்கும் ஜனநாயக ஆட்சி
முக்கியமாய் ஜனநாயகம் ஹிட்லரின் வைரி - அவன்
மூர்க்கம் தொலைப்பதுதான் அறியத்தக்க செய்தி
திக்குத் தெரியாத போக்கல்லவா அவன் போக்குப் - பெரும்
செக்கும் சிவலிங்கமும்ஒன்றுதான் தெருநாய்க்கே
இக்கணமே தொலைப்போம் அந்த ஜெர்மானியரை - முன்
னேறுமுன் னேறுமுன் னேறுது பாரதசேனை

என்று இட்லரைக் கடுமையாகத் தாக்கிப் பாரதப்படையின் முன்னேற்றத்தைப் பாடியுள்ளார். (பாரதிதாசன் இதழ்ப்பணிகள் ப.214 - 215)

'ஆனந்தக்களிப்பு' மெட்டில், பல்லவி சரணம் என்னும் அமைப்பில்' 'ஆங்கிலர் அறப்போர் வெற்றி முரசு' என்னும் தலைப்பில் பாரதிதாசன் பாடிய பதினான்கு கண்ணிகளால் அமைந்த பிறிதொரு பாடல் தனித்துக்குறிப்பிடத்தக்கது.

வெற்றி முழக்கஞ்செய் முரசே நல்ல
வீரம் செறிந்த நம் ஆங்கில நாட்டின்
வெற்றி முழக்கஞ்செய் முரசே

என்பது பாடலின் பல்லவி. செருமானியர்கள் ஆங்கிலேயர்மேல் படையெடுத்ததை முதலில் சாடுகிறார். இங்கிலாந்தின் மேன்மையும் நாசிகளின் கொடுமையும் இங்கிலாந்திற்கு இந்தியர் துணை செய்யவேண்டும் என்பதும் இங்கிலாந்திற்கு இறுதிவெற்றி உறுதி என்பதும் பாடலில் பேசப்படுகின்றன.

மனிதத் தனத்தை மதித்தே மக்கள்
வாழ்வை உயர்த்திடும் சட்டம் விதித்தே
இனிமையில் ஆண்டிடும் தேசம் அந்த
இங்கிலாந்துக்குண்டு வையத்தின் நேசம்

என்றும் 'முன்னர் நெப்போலியனையும் செருமானியர்களையும் கண்டு வென்ற நாடு' என்றும் இங்கிலாந்தின் பெருமை பேசப் படுகிறது.

நாஜிசம் என்னும்அ நீதி - ஜன
நாயகத் துக்கது மிக்கவி ரோதி
தேசத்தை வாட்டும் வியாதி - அதைத்
தீர்த்திடும் ஆங்கிலர் தீரரென்றோதி...

தேசஜனங்கள் விருப்பம் - ஒரு
தீய மனிதனின் காலின் செருப்பாம்
நாஜியர் ஆட்சி விஷத்தைக் - கொல்
நானென்று மார்தட்டும் ஆங்கில நாட்டின்

எனவரும் பாடற் பகுதிகள் இட்லரின் நாசிசக் கொடுமையை வன்மையாகக் கண்டிக்கின்றன.

'இங்கிலாந்தின் அறப்போரில் இந்தியரின் துணை உள்ளதை உலகுக்கு விளங்கவைப்போம்; வீட்டுக்கு வீடு ஒரு வீதம் போர்க்கு நன்கொடை அளிப்போம். அது நன்மை பயக்கும்' என்று பேசும் பாரதிதாசன்,

இன்றல்ல நேற்றல்ல நேசம் - நல்ல
இங்கிலந்தோ பல நாள் சகவாசம்
நன்றி செலுத்த உத்தேசம் - இனி
நாம் மறுத்தால் நமை நம்மனம் ஏசும்

என்று இங்கிலாந்துக்கும் நமக்கும் உள்ள நெடுநாள் பிணைப்பைக் குறிப்பிட்டு, நன்றி செலுத்தும்வகையில் நாம் உதவுதல் வேண்டும் என்கிறார். இந்தப் போரை நாம் ஏன் ஒப்பினோம் என்பதை,

நானில மக்களுக் காக - பல
நாட்டின் சுதந்தரம் மீட்பதற்காக
மானம் நிலைப்பதற்காக - நின்று
மார்தட்டும் ஆங்கிலப் போர்ஒப்பி னோம்நாம்

என்று அறிவிக்கிறார். இறுதி வெற்றி இங்கிலாந்துக்கே என்பதை,

நாமுண்டு சிங்கங்கள் போலே - செல்வ
நாடுண்டு தோளுண்டு குன்றத்தைப் போலே
சீமையில் மன்னர்பிரானார் - ஆட்சி
ஜெயமுறும் என்பதொர் நிச்சயமுண்டு

என்று கட்டியம் கூறுகிறார்.

இந்தப்பாடல் இதுவரை எந்த நூலிலும் இடம்பெறாதது என்பதும் பாரதிதாசனின் கையெழுத்து வடிவில் புதுவை பாவேந்தர் அருங்காட்சியகம் ஆய்வுமையத்தில் உள்ளது என்பதும் இதைப்போல இன்னும் கிடைக்கவேண்டிய போர் ஆதரவுப்பாடல்கள் பல உள்ளன என்பதும்மனங்கொள்ள வேண்டியவை.

2.4. அமெரிக்காவின் அடாத செயல்கள்

2.4.1. சப்பானில் விழுந்த குண்டு

இரண்டாம் உலகப்போர் 1945 மே மாதம் செருமனியின் தோல்வியுடன் ஒரு முடிவுக்கு வந்தது. அடுத்த ஆகசுடு சப்பானின் தோல்வியுடன் போரின் இறுதிக்கட்டம் நிறைவடைந்தது. உலக வரலாற்றில் ஓர் இருண்ட நாளாகக் கருதத்தக்கது 1945 ஆகசுடு 6ஆம் நாளாகும். உலக மக்கள் யாவரையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கிய அன்றுதான் காலை 8.15 மணிக்குக் கிரோசிமா என்னும் சப்பானிய நகரில் அமெரிக்க வல்லரசு முதன்முதல் அணுக்குண்டினை வீசியது. அத்துடன் நிறுத்திக் கொள்ளாது மூன்று நாட்களின் பின் அடுத்தொரு அணுக்குண்டினை நாகசாகி என்னும் துறைமுக நகரத்தின் மீதும் வீசியது.

கிரோசிமாவில் விழுந்த அணுக்குண்டு சற்றொப்ப 11 சதுரக்கிலோ மீட்டர் பரப்பினை முற்றாக அழித்தது. நாகசாகியில் விழுந்த அணுக்குண்டு 4.7 சதுரக் கிலோமீட்டர் பரப்பினைப் பலிகொண்டது. முதலில் விழுந்த அணுக்குண்டால் ஏறத்தாழ 1,50,000 மக்கள் உயிர் இழந்தனர். இரண்டாவது அணுக்குண்டிற்குச் சற்றொப்ப 75,000 மக்கள் பலியாயினர்.

குண்டு வீச்சையடுத்து அணுக்குண்டின் கதிரியக்க விளைவை யறியாது, அழிவுகளின் இடையில் உறவினர்களின் உடலங்களைத் தேடி அலைந்து திரிந்த அப்பாவி மக்கள் பலர் நகரம் முழுவதும் பரவியிருந்த கதிரியக்கத்தால் தாக்குண்டு அழிந்தனர்.

குண்டு வீச்சுக்குத் தப்பித்துக் கொண்டவர்களும் பாதிக்கப்பட்ட நடைப்பிணங்கள் ஆயினர். மன அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, ஏக்கம் முதலியவற்றுக்கு ஆளாயினர். பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை எண்ணித் தவித்தனர். நியூட்ரான் கதிரியக்கத்தினால் பலர் தொழு நோயாளிகள், புற்றுநோயாளிகளாயினர். கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்ட கருப்பிணிப் பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளில் சற்றொப்ப 75 விழுக்காட்டினர் தலை சிறுத்துக் காணப்பட்டனர். அணுக்குண்டு வீச்சின் அழிவு இன்னும் தொடர்ந்து நிகழ்கின்றது.

அமெரிக்கா தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகவே அணுக்குண்டு வீச்சை நிகழ்த்தியது. 1945 ஆகசுடு ஒன்பதாம்நாள். சோவியத்து உருசியா சப்பானுக்கெதிராகப்

போர் அறிவிப்புச் செய்தது. இது இரண்டாம் உலகப் போர் முற்றாக ஓயும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. மேலும் சீனாவின் செம்படை வீரர்கள் சோவியத்து உதவியுடன் சப்பானியப் படைகளைச் சிதறடித்து வந்தனர். ஆனால் அமெரிக்க ஆதரவுச் சியாங்கே சேக்கின் சீனப்படைகள் சப்பானியரோடு போரிட முடியாமல் பின்வாங்கின.

தென்கிழக்காசியப் பகுதியில் முடங்கிக் கிடந்த அமெரிக்கப் படைகள் சோவியத்துப் படைகளின் உதவியின்றிச் சப்பானைக் கைப்பற்றுவது இயலாத செயலெனக் கருதப்பட்டது. 'சோவியத்துப் படைகள் குறைந்த அளவு சப்பானிய நாட்டின் பாதிப் பகுதியையேனும் மீட்டுவிடும், பெர்லினைக் கோட்டை விட்டதுபோல் டோக்கியோவையும் நாம் கைப்பற்றாமல் போய்விடுவோமோ' எனக் கருதிய அமெரிக்க அரசு, தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக அழிவைப் பற்றிக் கருதாமல் சப்பானில் அணுக்குண்டுகளை வீசியது.

உலகம் அதனால் அடையும் அழிவினைத் தெளிவாக உணர்ந்து பாரதிதாசன் பாடிய பாடல் ''ஜப்பானில் விழுந்த குண்டு தப்பாது உலகழிக்கும்'' என்பதாகும்.

இப்பாடலில் அமெரிக்கரை 'வையவிரோதிகள்', 'பாவி', 'அமெரிக்கக் கொலைப்படை', 'அமெரிக்கச் சுரண்டல்காரர்' என்று தெளிவாகச் சாடும் பாரதிதாசன், 'முற்காலத்தில் இமயந்தொட்டு குமரிவரை பரவியிருந்த திராவிட நாட்டின் வெளியிலிருந்து தீயெனப் பாய்ந்த பார்ப்பனர் தங்களொடு ஒரே இனம் என்று சொல்லிக் கொள்ளும் அமெரிக்கர்' என்று இருவரையும் இணைத்துத் தாக்குகிறார்.

அணுக்குண்டின் ஆற்றலை 'எரிமலைத் தீ சரேலெனக் கவிழ்ந்ததைப் போல்'' எனவும், ''உலக முழுவதுமுள்ள நச்சுப்பாம்புகள் அனைத்தையும் ஒன்றாகக் கூட்டி வானிலிருந்து வீசியதைப்போல்'' எனவும் உவமை வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

குண்டுவீச்சின் தீய விளைவை,

'இன்னும்ஓர் நூறாண்டுக்கும்
இரண்டூரின் சுற்றுப் பக்கம்
ஒன்றுமே முளையாதாமே
வாழ்தலும் ஒண்ணாதாமே!

என்றும்,

இப்பாரை இனிக்கலக்கி
இனிவருங் காலமின்றித்
தப்பாது செயினும் செய்யும்'

என்றும் எதிர்காலம், வாழ்வுக்கான எதுவுமில்லாமற் போகுமென் பதைத் தெளிவாக உணர்த்துகிறார்.

இப்பாடலில் எதிர்கால நலங்கருதிப் பொது உண்மைகளாகச் சிலவற்றையும் பாரதிதாசன் பதிவுசெய்யத் தவறவில்லை. முதலாளித் துவம் ஒழிக்கப்படவேண்டியதே என்பதை,

''ஒன்றுகேள் முதலாளித்துவம்
உலகினை அழிக்கும் முன்னம்
நன்றுநாம் செய்தல் எல்லாம்
நாமதை ஒழித்தல் வேண்டும்...

தறுதலை முதலாளித்துவம்
எப்போதும் நமைவிடாது
செய்வன இன்றே செய்க

என்று குறிப்பிடுகிறார்.

ஐ.நா. அமைப்பு என்ன செய்யவேண்டும்? என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில்,

''வையப் பாராளு மன்றம்
புலம்பலில் பயனே இல்லை
பொசுக்குக போர் மூலத்தை!''

என்று பாடுகிறார்.

உலகமெங்கும் உள்ள தொழிலாளர்களுக்கு, ஒரு சிலரின் நன்மைக்காக இருக்கும் படையில் நீங்கள் சேரக்கூடாதெனப் பாரதி தாசன் வைக்கும் விண்ணப்பம் சற்று வேறுபட்டது; புதுமை யானது.

'உலகநா டெங்கும் உள்ள
உழைப் பாளர்க்கென் விண்ணப்பம்
உலகத்தில் அமைதி வேண்டின்
அனைவரும் ஒரு சிலர்க்காய்ப்
பலன்தரும்படையில் சேரப்
படாதுநாம் விலக வேண்டும்
இலகுவில் வையப் போரின்
இழிவெண்ணம்மடிந்து போகும்!

'நாள்மலர்கள்' (1978) என்னும் நூலில் இடம்பெற்றுள்ள இப்பாடல் (ப.122-124) 'பகுத்தறிவு மலர்' என்னும் இதழில் 1942இல்

வெளிவந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அணுக்குண்டு வீச்சு ஆகசுடு 1945இல் நிகழ்ந்தது. பாடலின் மெய்ம்மையை இவ்வாண்டுக்குறிப்பு கேள்விக்குரியதாக்குகிறது. பாடல்களைத் தொகுத்தவரால் நேர்ந்த காலவழுவாகவும் கருத இடமுண்டு. பாடலின் சொல்லாட்சியும் விறுவிறுப்பான மொழிநடையும் பாரதிதாசன் பாடலாக இதனைக் கருத இடந்தருகின்றன.

2.4.2. வியட்நாம் போர்

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் கம்போடியா, இலாவோசு ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரஞ்சு இந்தோசீனாவின் ஒரு பகுதியாக வியட்நாம் இருந்தது. போரின் போது சப்பான் இந்தோ சீனாவைக் கைப்பற்றியது. ஆனால், போர் முடிவில் இந்தோசீனாவின் பெரும்பகுதி பிரஞ்சுக் கட்டுப்பாட்டின்கீழ் மீண்டும் வந்தது. வியட்நாமைத் தங்களின் உற்பத்திப் பொருளுக்கான சந்தையாகவும், வியட்நாம் மக்களை மலிவான கூலிகளாகவும் பிரெஞ்சியர் பயன் படுத்தினர். வியட்நாம் விடுதலைக்கழகத்தின் பொது வுடைமைத் தலைவர் கோசிமின் தலைமையில் வடக்கு வியட்நாமில் தனிப் புரட்சியரசு ஏற்பட்டது.

பிரான்சுக்கும் கோசிமின்னுக்கும் கருத்து வேறுபாடுகள் மேலெழுந்தன. 1946 திசம்பர் 19 அன்று போர் மூண்டது. அந்தப்போர் எட்டாண்டுகள் தொடர்ந்தது. 1954 மே மாதத்தில் தீன் பீன் பூ என்ற இடத்தில் பிரஞ்சியர்கள் தோல்விகண்டனர். அதன் விளைவாக அமைதி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த செனிவாவில் 1954 சூலையில் ஏற்பட்ட ஒப்பந்தம் ‘செனிவா ஒப்பந்தம்’ எனப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி

1. பிரஞ்சுப்படைகள் வெளியேற வேண்டும்.
2. எந்த அயல்நாட்டுப் படையும் வியட்நாமில் இருக்கக் கூடாது.
3. 17ஆவது இணைக்கோடு வியட்நாமை இருபகுதிகளாகத் தற்காலிகமாகப் பிரிக்கும். 17ஆவது இணைக்கோட்டிற்கு வடக்கே உள்ள பகுதி வடவியட்நாம் என்றும், தெற்கே உள்ள பகுதி தென்வியட்நாம் என்றும் அமையும். இரண்டு வியட்நாமையும் ஒன்றுபடுத்துவதற்கான பொதுத்தேர்தல் இரு ஆண்டுகள் கழித்து 1956இல் நடைபெறவேண்டும்.

பிரிட்டன், சோவியத்து ஒன்றியம் ஆகியவற்றின் தலைமையில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட மறுத்தது.

எனினும், அமெரிக்க உள்நாட்டுச் செயலர் திரு. டல்லசு செனிவா ஒப்பந்தத்தை அமெரிக்கா கடைப்பிடிக்கும் என்று கூறினார். ஒப்பந்த மிட்ட மை உலருமுன்பே அமெரிக்கா வியட்நாமில் நுழைந்து இரண்டு வியட்நாமையும் இணைக்கும் பொதுத்தேர்தல் குறித்துப் பேச்சு நடப்பதைத் தடுத்தது. வடவியட்நாமில், வியட்நாம் மக்கள் நாயகக் குடியரசைத் தலைமையேற்று நடத்திய கோசிமின்னுடைய செல்வாக்கு பொதுத்தேர்தலில் பொதுவுடைமையர்க்கு வெற்றியைத் தேடித்தரும் என்பதை அறிந்தே அம்முயற்சியை அமெரிக்காவும் தென் வியட்நாமியப் பொம்மையரசும் தடுத்தன. மக்களால் வெறுக்கப்பட்ட தீன்தியம் என்பவன் அமெரிக்காவால் தென்வியட் நாமின் பொம்மையரசுத் தலைவனாக்கப்பட்டான். தென்வியட்நாம் அமெரிக்காவின் படைத்தளமாக மாற்றப்பட்டது.

வியட்நாமிலிருந்து பிரஞ்சுப்படைகள் தோல்வியைத் தழுவுவதற்கு முன்பு 1950இன் தொடக்கத்தில் அமெரிக்கா அப்படை களுக்கான பொருள்களையும் அறிவுரைஞர்களையும் அனுப்பியது. 1954 செனிவா ஒப்பந்தத்தையடுத்து அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் தென்வியட்நாமிற்கான தங்கள் ஆதரவை விரிவு படுத்தினார். நேர்மையற்ற ஆட்சி நடத்தி மக்களால் வெறுக்கப் பட்டுச் செல்வாக்கிழந்த தீன்தியம் 1956இல் உள்ளாட்சித் தேர்தல் களுக்கு முற்றுப்புள்ளி வைத்துத் தனக்கு வேண்டியவர் களையே பொறுப்புகளில் அமர்த்தினார்.

தென்வியட்நாமில் சிறைச்சாலைகளும், கடுங்காவல் முகாம் களும் பெருகின. கொடிய சட்டங்கள் இயற்றப்பட்டன. உரிமைக் காகப் போராடும் மக்கள் இயக்கங்கள் ஒடுக்கப்பட்டன. அடக்கு முறைகளை எதிர்த்து 1957இன் தொடக்கத்தில் ‘வியட்காங்’ அமைப்பி னர் தென்வியட்நாமின் அரசுக்கெதிராகக் ‘கொரில்லாப் போர்’ நடத்தினர். வியட்காங் அமைப்பு 1960இல் 20,000 போராளிகளைக் கொண்டிருந்தது. அதைவிடப் பத்துமடங்கு அதிகமுள்ள தென்வியட் நாமின் படையைத் தாக்கும் வலிமை பெற்றதாக வியட்காங் இருந்தது. இவ்வமைப்பின் எதிர்பாராத தாக்குதல்களுக்குத் தென்வியட்நாமியப் படைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை.

‘வியட்காங்’கை ஆதரிப்பதற்காக 1960 திசம்பரில் கனாய் நகரில் தேசிய விடுதலை முன்னணி என்னும்அரசியல் குழு ஏற்படுத்தப் பட்டது. அம்முன்னணி ‘வியட்காங்’கின் கட்டுப்பாட்டிலுள்ள தென்வியட்நாமியப் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தியது. படைக்கருவிகளை உருவாக்கும் தொழிற்சாலைகளை

ஏற்படுத்தி 'வியட்காங்' வீரர்களுக்கு வேண்டிய போர்க்கருவிகள், மருந்துப்பொருள்கள், பணம் முதலியவற்றையும் வழங்கியது.

'வியட்காங்' அமைப்பின் வெற்றிகரமான வளர்ச்சி, 'தென் வியட்நாமிய அரசின் வீழ்ச்சியை அனுமதிப்பதா? மேலும் உதவிகளை அதிகரிப்பதா?' என்னும் இக்கட்டான நிலைக்கு அமெரிக்காவைத் தள்ளியது. இந்தக் காலத்தில் தென்வியட்நாமில் ஏறத்தாழ 750 அமெரிக்கப் படை அறிவுரைஞர்கள் இருந்தனர். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி தென்வியட்நாமிற்கான படை அறிவுரைஞர்கள், தொழில் நுட்பர்கள், வானவூர்தி, வலவர்கள் உள்ளிட்ட படையுதவியை அதிகப்படுத்துமாறு ஆணையிட்டார். 1962 பிப்பிரவரியில் படை அறிவுரைஞர்கள் 2700 ஆகவும், நவம்பர் 1963இல் படைவீரர்கள் 16,300 ஆகவும் தென்வியட்நாமில் அமெரிக்கர் எண்ணிக்கை அதிகமாகியது.

1963இல் தென்வியட்நாமில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் விளைவாக அமெரிக்காவால் ஊக்குவிக்கப்பட்ட தென்வியட் நாமியப் படைத் தலைவர்கள் நவம்பர் 1இல் ஆட்சியைக் கைப்பற்றினர். அடுத்தநாளே தீன்தியம் கொல்லப்பட்டார். குறுகிய கால ஆட்சிகள் பல வந்து போயின. 1965இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த இலிண்டன் பி.சான்சன் வடவியட்நாமியப் போர்த்தளங்களில் வானூர்தித் தாக்குதலுக்கு ஆணையிட்டார். தென்வியட்நாமிலிருந்த அமெரிக்கப் படைத்தளங்களைப் பாதுகாப்பதற்காகப் போர்க்கப்பல்களை அனுப்பினார்.

போர் தீவிரமடைந்தது. பொதுவுடைமைப் போராளிகள் 1968 சனவரியில் 30 தென்வியட்நாமிய நகரங்களைப் பெருந்தாக்குதலுக்கு உள்ளாக்கினர். 1968 மார்ச்சில் அமெரிக்கப் படையினர் நூற்றுக் கணக்கான தென்வியட்நாமிய மக்களைக் கொன்று குவித்தனர்.

வியட்நாமிய மக்கள், உழவர்கள், தொழிலாளிகள், எழுத்தாளர் கள், ஆண்கள், பெண்கள் என்ற அனைவரும் அமெரிக்கத் தாக்குதலை எதிர்த்து அவரவர் தங்களால் இயன்ற முயற்சிகளில் ஈடுபட்டனர். அமெரிக்க வல்லரசின் முயற்சி படுதோல்வி கண்டது. வியட்நாம் மீது போர் தொடுப்பதைக்கண்டித்துப் பல தரப்பைச் சார்ந்த அமெரிக்கக் குடிமக்களே எதிர்ப்புக்குரல் எழுப்பினர். இதனை அமெரிக்க அரசு பொருட்படுத்தவில்லை.

வியட்நாம் போரில் 57,000 அமெரிக்கப் படைவீரர்கள் இறந்தனர். 3,03,700 வீரர்கள் காயமுற்றனர். என்ன ஆயினர் என்று தெரியாதவர் 780 பேர். இவ்வளவு இழப்புக்குப் பிறகு அமெரிக்கா

பெற்றது உலகின் பழியையே. 1973 சனவரியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மார்ச்சின் இறுதியில் அமெரிக்காவின் இறுதிப் படைப்பிரிவு தென்வியட்நாமிலிருந்து வெளியேறியது. தென் வியட்நாமியப் படை வீரர்களுக்கும் பொதுவுடைமைப் போராளி களுக்கும் தொடர்ந்து நிகழ்ந்த போர் 1975 ஏப்பிரல் 30இல் முடிவுக்கு வந்தது. வெற்றிபெற்ற பொதுடைமையர் கோசிமின் தலைமையில் இரண்டு வியட்நாம்களையும் இணைத்து ஒரு நாடாக ஆக்கினர். 2.7.1976இல் வியட்நாம் நிகரமையக் குடியரசானது.

மேற்குறித்த வியட்நாமிய விடுதலை வரலாற்றின் தொடக்கக் காலத்தைத் தெளிவாக உள்வாங்கிக் கொண்டு பாரதிதாசன் இயற்றிய பாடலே ''வியட்நாமிலிருந்து விலகுக எச்சரிக்கை!'' என்பதாகும். 'புத்தறிவு' என்னும்இதழில் 1.8.1961 அன்று வெளிவந்ததாகக் குறிக்கப்படும் இப்பாடல் வியட்நாம் போரின் முடிவையும் முன்னுணர்ந்து வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அமெரிக்காவைக் ''கயமை மிகும் அமெரிக்கா'', ''இனமற்ற அமெரிக்க வெறிநாய்கள்'', ''கோணல் மன அமெரிக்கா'', ''சான்றோர் கள் முகத்தில் காறிதுப்பும் சாய்க்கடையாய் அமெரிக்க அரசியல்'', ''வல்லரசின் திமிர்'' என்று பாரதிதாசன் கடுமையாகச் சாடுகிறார்.

அமெரிக்காவில் நிலவிவரும் நிறவெறிப் போரை நீக்குதற்கான முயற்சி எடுக்காமல், உலக மக்கள் உறவென்னும் அன்பும் இல்லாமல் வியட்நாம் மக்கள் மீது படையெடுக்கும் அமெரிக்க முதலாளித்துவ மனப்போக்கை முறியடித்தல் உலகநாட்டு மன்றத்தின் (ஐ.நா.) முதற்கடமையாகும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

அமெரிக்க நாட்டு மக்களே தங்களரசு மேற்கொள்ளும் அடாதசெயலைக் கண்டு குமுறுகின்றனர் என்பதையும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

இரண்டாம் உலகப் போர் முடிந்ததென எல்லோரும் நினைத்த நேரத்தில் இப்போர் தொடுக்கப்பட்டது என்றும், வியட்நாமியர் பிரஞ்சு நாட்டிற்குப் பல்லாண்டு அடிமைப்பட்டுக் கிடந்து கடுமை யாகப்போராடி விடுதலை பெற்றுத் தங்கள் மேம்பாட்டுக்கு உழைக் கும் வேளையில் அமெரிக்கா உள் நுழைந்து உருக்குலைத்தது என்றும் வரலாற்று உணர்வோடு பாடலைத் தொடங்குகிறார் பாரதிதாசன்.

வியட்நாம் போர் முடிவதற்குச் சற்றொப்பப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இப்பாடல் அன்றைய அமெரிக்கத் தலையீட்டைச் சரியாய்க் கணித்தும் வியட்நாம் மக்களின் வீரத்தைப் போற்றியும் நான்கு எண் சீர் விருத்தங்களில் எழுதப்பட்டுள்ளது.

அமெரிக்கக் காலடியில் வியத்நாம் மக்கள்
ஆயிரம்ஆண் டானாலும் பணிவ தில்லை;
திமிருற்ற ஏகாதி பத்தி யத்தைத்
திசைதோறும் எதிர்க்கின்றார்; அவர் நாட்டாரே...

ஊன்றிஎழும் நிறவெறிப்போர் களைய வில்லை;
உலகமக்கள் உறவென்னும் அன்பும் இல்லை;
ஈன்றவரும் வெறுக்கும் வண்ணம், வியட்நாம் வீரம்
இடுப்பொடித்துப் போடும்உனை எச்சரிக்கை!

எத்தனை யாண்டானாலும் இறுதிவெற்றி வியட்நாமியர்க்கே என்று உறுதிப்படுத்தும் பாரதிதாசனின் முன்னுணர் திறன் பாராட்டத் தக்கது.

2.5. அமெரிக்காவுக்குப் பாராட்டு

2.5.1. சப்பான் வழி தப்பானது

பாரதிதாசன் 28.6.60 குயில் கிழமையிதழில் ‘சப்பான் வழி தப்பானது’ என்று ஆசிரியவுரை எழுதுகிறார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஓவர் சப்பான் நாட்டுக்கு வருவதாகத் திட்டம். ‘சப்பான் மீது அமெரிக்கா குண்டு போட்டது. ஆதலால் அவர் வரக்கூடாது’ என்று மாணவர்களும் பிறரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மறியல் செய்தனர். ஐசன் ஓவர் வருகை தடைப்பட்டது. அவர் வரவில்லை. சப்பானியர் செய்தது தவறு என்றும் எதிர்ப்பின் பின்னணியில் பொதுவுடைமையர்கள் இருக்கிறார்கள் என்றும் பாரதிதாசன் கருதுகிறார். ‘இன்றைய அமெரிக்கா விழுந்த நாடுகளை எழுந்து நடக்க உதவும் சிறந்த நாடு. உருசிய நாடு அப்படியில்லை’ என்று அமெரிக்காவைப் போற்றி உருசியாவைச் சாடுகிறார்.

> ‘‘சப்பானில் முன்பு குண்டு போடச் சொன்ன தலைவர் ஐசன் ஓவர் அல்லர். அவர் வேறு.
>
> இன்று ஐசன் ஓவர் தலைமையில் இருக்கிறது அமெரிக்கா. இன்றைய அமெரிக்கா உலக மக்களை நல்வழியில் அழைத்துச் செல்லும் நோக்கம் உடையது. வாழும்மக்களை வாழும் நிலையிற் சேர்க்கத் துடிப்பது. இது உலகறிந்த உண்மை.
>
> சப்பானுக்கு வரஇருந்த ஐசன் ஓவரை வரக்கூடாது என்ற மறியல் செய்த சப்பான் மாணவரும், பிறரும் கம்யூனிஸ்டுகள் கருத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். அவர்கள் பிழை செய்து விட்டார் கள்.

பழைய அமெரிக்காவை எதிர்த்ததால் பழைய அமெரிக்கா சப்பானில் குண்டுபோட்டது. இன்றைய உருசியாவைச் சப்பான் ஆதரிப்பதில் உருசியா சப்பானின் தலையில் போட இருக்கும் குண்டு அதைவிடப் பெரிதாகும்.

சப்பான் மாணவரும், பிறரும் உருசியா விளம்பரத்திற்கு மயங்கி, அதைப் பெரிதென்றும் வல்லமை பொருந்தியதென்றும் நினைக் கிறார்கள். அதுதான் இல்லை.

உருசியா என்னிடம் வலிவுள்ள போர்க்கருவிகள் உள்ளன என்று கூறுவது மெய்யாக இருக்கலாம். ஆயினும்அவை அமெரிக்காவை விட வலிமையுடையன அல்ல, பெருந்தொகையுடையனவும் அல்ல.

தற்காப்பு முறையில் சிறந்தது உருசியா. சென்றுதாக்கும் ஆற்றல் உருசியாவுக்கு இருந்ததில்லை. இப்போதும் இல்லை.

தன் முன்னேற்றத்தையும் உலகின் முன்னேற்றத்தையும் எண்ணும் ஒரு நாடு இந்நாள் உருசியைத் துணைகொள்ளக்கூடாது.

ஒழுக்கம் விழுப்பம் தருவது. அஃது வன்மைமிக்கது. ஒழுக்க மில்லாத நாடு இழுக்கம் அடைவது உறுதி.

அமெரிக்கா ஒழுக்கமுடையது. அந்த நாட்டின் ஆட்சித்தலைவன் ஒரு சர்வாதிகாரி அல்லன். மக்கள்பால் அன்புடையவன்.

உருசியத் தலைவன் அவ்வாறு அல்ல. நேற்றிருந்தான் ஒரு தலைவன். அவன் இன்று தலை நெரித்துக் கொல்லப்பட்டான் என்ற கதை மிக உண்டு உருசியாவில்! நாள்தோறும் உண்டு உருசியா வில்.

அமெரிக்காவின் இன்றைய நோக்கம் மிகச் சிறந்தது. விழுந்துள்ள பிறநாடுகளை எழுந்து நடக்க உதவுவது. உருசியா அப்படியல்ல. ஏமாந்த நாட்டை அறத்தின் எதிரியாக்குவது.

உருசியநாடு இவ்வுலகில் செய்துள்ள அரியசெயல் ஒன்றுதான். அதுதான் உருசியா எல்லாவற்றிலும் சிறந்துள்ளது என்று நம்பவைத்தது.

அந்தநாட்டில் ஏழ்மையென்பதே இல்லை. எல்லாரும் அங்கே பணக்காரர். சோறு என்று அழும்ஆள் ஒருவனும் அங்கு இல்லை.

இப்படி அமெரிக்கா சொல்லுமானால் நம்ப முடியும். உருசியா இப்படிச் சொல்லித் திரிவது ஏன் எனில், உலகில் ஏமாந்தவர் அதிகம் என்பது கருதி.

நாசிசம் பஞ்சத்தை உண்டாக்கிவிடும் என்று நாம் உருசியாவின் வாயால் எத்தனைமுறை கேட்டிருக்கிறோம். இன்று இத்தாலி மக்கள் நாடோறும் நுகர்ந்து வரும் நூறில் ஒரு பங்கைக்கூட உருசியாவில் காணமுடியாது. நாம் கூறும் இது புதுமை என்று தோன்றலாம். ஆயினும் உண்மையே.

உலகின் ஒழுக்கத்தை, உலகின் நலத்தை விரும்புவோர் ஒழுக்க மில்லாத காட்டுமிராண்டித் தனத்திற்குச் சென்று கொண்டிருக்கின்ற உருசியாவையும் சீனாவையும் ஒன்று சேர்த்து வாலறுக்க வேண்டும். இதற்கு அமெரிக்காவையும் இங்கிலாந்தை யும் பிரான்சையும் ஆதரிப்பதில் குற்றமொன்றும் நேர்ந்துவிடாது. உலக நலத்திற்கு நல்லது. உலக முன்னேற்றத்திற்கு நல்லது.''

இந்த ஆசிரியவுரை பல செய்திகளைச் சொல்லுகிறது. ஐசன் ஓவருக்கு வரவேற்பு கொடுக்காதது தவறு எனத் தொடங்கி, உருசியாவைத்தாக்கி, அமெரிக்காவையும் உருசியாவையும் அவற்றின் வல்லமை நல்லமை அடிப்படையில் ஒப்பிட்டு, அமெரிக்காவை உயர்த்தி, உலகின் இரண்டு அணிகளில் அமெரிக்கா சார்ந்த அணியை ஆதரிப்பது நல்லது என்றும் உலகளாவிய அரசியலை ஒரு சார்பில் நின்று அலசுகிறது.

2.5.2. நல்ல அமெரிக்கனும் பொல்லா அமெரிக்கனும்

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் (1930) மூலிகை ஒன்றைத் தின்ற குப்பனும் வஞ்சியும் உலகின் பல பகுதிகளிலுள்ள மக்கள் பேசுவதைக் கேட்கின்றனர். ஓர் அமெரிக்கன் பேசுகிறான். 'நல்ல அமெரிக்கன்' உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் நன்றாய் இருக்கவேண்டும் என்று நினைப்பவன். 'பொல்லா அமெரிக்கன்' பொன்னடைந்து தான்மட்டும் செல்வனாய் வாழத்தினமும் நினைப்பவன். அமெரிக்கன் வாயிலாகவே அமெரிக்கர்களை இருவகைப்படுத்திக் காட்டும் பாரதிதாசனின் தொடக்கக்கால மதிப்பீடு இது.

2.6. உருசியா உலகின் உயிர்

2.6.1. இரண்டாம் உலகப்போரும் இட்லரின் வீழ்ச்சியும்

1943 சனவரி மாதத் தொடக்கம் சென்னையிலிருந்து வை.கோவிந்தன் நடத்திய 'சக்தி' மாத இதழுக்குக் 'குடியானவன்' என்னும் பாரதிதாசன் பாடல் அனுப்பப்படுகிறது. இரண்டாம் உலகப்போரினையும் இட்லரின் வீழ்ச்சியையும் தெளிவாகப் பேசும் அப்பாடல் (இ.தொ.) 'உருசியாவையும் அங்குள்ள குடியானவர்

களின் நிலையையும் கேட்ட இங்குள்ள குடியானவன் நிலை எப்படியிருக்கும்' என்று கோடிட்டுக் காட்டுகிறது. பாடலின் இறுதி இரண்டு வரிகள்,

'அக்குடி யானவன் எழுந்தான்
நிற்கவில்லை நிறைந்தான் போரிலே'

என்பன. இந்தியக் குடியானவன் போரிலே இறங்கிவிட்டான் என்பது காந்தியடிகளின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் 'சக்தி' இதழார்க்கு உடன்பாடில்லை. மற வழியாகிய போரில் இறங்குவதினும் அற வழியை நாடுவதாக அமைந்திருந்தால் நல்லது என எண்ணுகின்றனர். அதனால், பாடலை அப்படியே வெளியிடாமல் இறுதி இரண்டு வரிகளையும் மாற்றித்தருமாறு பாரதிதாசனுக்குப் பாடலைத் திருப்பி விடுகின்றனர். அவர் அதற்கு உடன்படவில்லை.

''ரஷ்யாவையும் அங்குள்ள குடியானவர்களின் நிலையையும் கேட்ட இங்குள்ள குடியானவன் நிலை இப்படித்தான் இருக்கும் என்று கருதுகிறேன்.

ஒரு நன்மையைப் பெறவேண்டி, யுத்தத்தை மறுக்கிறார்கள். இது தற்காலிக ஏற்பாடு. அறம் என்பது தற்காலிக தார்க்கிகத்துக்கு உட்பட்டதன்று. ஒரு நன்மையை எதிர்பார்த்ததும் அன்று. எதிர்பாராத நிலையில் ஒரு ரிக்ஷாக்காரன் எதிரியால் தாக்கப்படுவானானால், மற்றொரு ரிக்ஷாக்காரன் அவனுக்கு உதவுவதை அவனது தன்னலம் எதுவும் மறுக்காது; தடுக்காது, உதவுவோன் அறஞ் செய்வோன்.

நிறைந்தான் என்பதையோ மற்றதையோ மாற்றுவது தேவையில்லை என்று தோன்றுகிறது...'' எனச் சக்தி கோவிந்தனுக்கு 16.1.43இல் மடல் (க.கு.நெ.கு.ப. 361) எழுதுகிறார் பாரதிதாசன். முடிவில் பாரதிதாசனின் வேறொரு பாடல் இதழில் வெளியாகிறது.

இந்தக் குடியானவன் பாடலைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு இரண்டாம் உலகப்போர் பற்றிய குறிப்புகள் மிகவும் பயன்படுவன.

செருமனியை வல்லரசாக்க விரும்பிய இட்லர், பன்னாட்டுச் சங்கம் (The league of Nations) அதற்குத் தடையாக இருந்ததால் அதிலிருந்து விலகினார். பன்னாட்டு விதிமுறைகளுக்கு எதிராகத் தம் படையைப் பெருக்கினார். 1938இல் ஆசுத்திரியாவைச் செருமனியினுடன் இணைத்துக் கொண்டார். பின்னர் செக்கோசுலோவாக்கியாவின் ஒரு பகுதியான சுடேட்டன்லாந்தைக் கைப்பற்றியபோது இங்கிலாந்துத் தலைமையமைச்சர் நெவில் சாம்பர்லேன் தலையிட்டு

'மியூனிச்சு ஒப்பந்தம்' ஏற்பட்டது. ஒப்பந்தத்தின்படி சுடேட்டன் லாந்தை ஆட்சி செய்யும் பொறுப்பைச் செருமனி இங்கிலாந்திற்கு விட்டுக்கொடுத்தது. ஓராண்டிற்குள் இட்லர் இவ்வுடன்படிக்கையை மீறிச் செக்கோசுலோவாக்கியா முழுவதையும் 1939இல் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் போலந்தின் ஆளுகையிலிருந்த 'தான்சிகுத்' துறைமுகத்தைச் செருமனிக்கு அளிக்க வேண்டுமெனக் கேட்கப் பட்டது. இதற்கு உடன்படாத போலந்தை இட்லர் தாக்கினார். இதனை எதிர்த்துப் போலந்தின் நட்பு நாடுகளாயிருந்த இங்கிலாந்தும் பிரான்சும் தாக்குதல் தொடுத்தன. விளைவாக 1939 செப்டம்பர் 3இல் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

இட்லர் வார்சாவையும் கடுங்குண்டு வீச்சுக்கு ஆளாக்கி 1939 அக்டோபர் 4ஆம் நாள் போலந்தைப் பணியச் செய்தார். 1940 ஏப்ரலில் தென்மார்க்கையும் நார்வே நாட்டினையும் கைப்பற்றினார். இப்போர்களில் நடுநிலை வகிப்பதாக அறிவித்திருந்த ஆலந்து, பெல்சியம் ஆகிய நாடுகளை 1940 ஏப்ரல் 10ஆம் நாள் தன்வசப் படுத்திக்கொண்டார்.

1940 மே திங்களில் பெல்சியத்திலிருந்து பிரான்சைத் தாக்கினார். பிரான்சு செருமனிக்குப் பணிந்தது. பிரான்சின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இட்லர் பிரிட்டனை வானூர்தி வாயிலாகவும் நீர்மூழ்கிக் கப்பல் மூலமும் தாக்கினார். எனினும் பிரிட்டிசு தலைமையமைச்சர் சர்ச்சிலின் பெருமுயற்சியால் இங்கிலாந்து காப்பாற்றப்பட்டது. 1939இல் உருசியா, செருமனி ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறி 1941 சூன் திங்களில் உருசியா மீது இட்லர் போர் தொடுத்தார். உருசியா இதனால் நேசநாடுகளுடன் இணைந்தது. 1941 திசம்பர் 7இல் அமெரிக்க 'பெர்க்' துறைமுகத்தைச் சப்பான் தாக்கியதன் விளைவாக அமெரிக்காவும் இரண்டாம் உலகப்போரில் இறங்கியது. அமெரிக்கா இட்லருக்கு எதிராகப் புத்துலகப் போர்க் கருவிகளையும் தேவையான போர்த்தளவாடங்கள் அனைத்தையும் உருசியாவிற்கும் இங்கிலாந்திற்கும் அளித்துதவியது. 1942 நவம்பர் தொடக்கத்தில் ஏல்-அலாய்மென் பகுதியிலும், 1943 சனவரியில் இசுடாலின்கிராது அருகிலும், இலெனின்கிராது முற்றுகை உடைப் பிலும் செருமனிக்கு ஏற்பட்ட படுதோல்வி இரண்டாம் உலகப் போரின் திருப்புமுனையாக அமைந்தது. இட்லரின் வீழ்ச்சி இதிலிருந்து தொடங்கியது.

இந்தப்போர் நடவடிக்கைகளையெல்லாம் கூர்ந்து கவனித் துள்ளார் பாரதிதாசன் என்பதைக் 'குடியானவன்' பாடல் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இந்தியக் குடியானவனின் காதில் இட்லரின் வீழ்ச்சிச் செய்தியும் சோவியத் மக்களின் எழுச்சிப் பண்ணும் கேட்கின்றன.

ஆற்றலனைத்தையும் திரட்டிப் பெரும்படையோடு புறப்பட்ட இட்லர்,

‘பெல்ஜியம் போலந்து முதல்நல்ல நாடுகள்
பலவும் அழித்துப் பல்பொருள் பெற்றான்.
முடியரசு நாடு, குடியரசு கொள்ள
முடியும் என்பதை முடித்த பிரான்சை
வஞ்சம், சூழ்ச்சியால் மடக்கி ஏறி
அஞ்சாது செல்வம் அடியொடு பறித்தான்,
இத்தாலி சேர்த்தே இன்னல் சூழ்ந்தவன்,
கொத்தாய் ஆசியாக் கொள்கையை நாடும்
ஜப்பான் போக்கையும் தட்டிக் கொடுத்தான்.

பின்னர்,

‘ஆங்கில நாட்டையும் அமெரிக்கா வையும்
எரிக்க நினைத்த இட்லர் என்னும்
‘குருவி’ நெருப்புக் குழியில் வீழ்ந்தது’

எதனால் வீழ்ந்தது இட்லர் குருவி?. எழுதுகிறார் பாரதிதாசன்.

தான் வென்ற நாடுகளில் நின்ற படைகளையும் திரட்டிக் கொண்டு,

‘‘உருசிய நாட்டை அழிக்கச் செலுத்தினான்!
உலகின் உயிரை ஒழிக்கச் செலுத்தினான்!
பெரிதினும்மிகவும் பெருநிலை கண்ட
உருசிய நாட்டை ஒழிக்கச் செலுத்தினான்!
மக்கள் வாழ்வின் மதிப்பு - இன்னதென,
ஒக்க வாழும் உறுதி இதுவென,
முதிய பெரிய முழுநிலத் திற்கும்
புதிய தாகப் புகட்டிய நாட்டில்
செலுத்தினான் இட்லர்; தீர்ந்தான்; முற்றிற்று!
உருசிய நாட்டின் உடைமையைக் கடமையை
மக்கள் தொகையால் வகுத்தே, வகுத்ததை
உடலில் வைத்தே உயிரினால் காக்கும்
உருசியத்தை இட்லர் உணர்கிலான்!’’

வீழ்ச்சியின் காரணம் வெளிப்படுகின்றது.

'உருசியா! அஃது உலகின் உயிர்'. மக்கள் வாழ்வின் மதிப்பை, ஒக்க வாழ்வதன் உறுதியை உலகுக்கு உணர்த்தியது. அதுவே என்கிறார் பாரதிதாசன். 1942இன் இறுதியில் உருசிய நாட்டில் தோல்வியைச் சந்திக்கிறார் இட்லர். அத்தோல்வி இரண்டாம் உலகப்போரின் திருப்புமுனையாக அமைவதோடு இட்லரின் வாழ்க்கைப் போக்கிலும், பண்பிலும் மாற்றமேற்படவும் காரணமா யமைந்து விட்டது. இறுதிக் காலத்தில் பெர்லின் நகரைவிட்டு வெளியே செல்லாமல் கமுக்கமாக இவா பிரெளனைத் திருமணம் செய்துகொண்டு அடுத்த நாளே (ஏப்பிரல் 30, 1945) தன் அறையில் தற்கொலை செய்துகொள்கிறார். ''இட்லர் என்னும் 'குருவி' நெருப்புக் குழியில் வீழ்ந்தது'' எனப் பாரதிதாசன் பாடியது வரலாற்று நிகழ்வை முன்னுணர்த்துவதாகத் திகழ்கிறது. ''வையப்போரில் ரஷ்யாவை ஜெர்மனி தாக்கத் துவங்கியபோது எழுதியது'' என்னும் அடிக்குறிப்பைக் கொண்டுள்ள இப்பாடல், இட்லரின் வீழ்ச்சியைத் தெளிவாகப் புலப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

2.6.2. இலெனினை ஈன்றே தீரும்

திருச்சிராப்பள்ளி வானொலியில் 'பாரதி' பற்றிய பாட்டரங்கம்; பாரதிதாசன் தலைமையேற்றுப் பாடுகிறார். அதில் ஒரு பகுதி:

''மக்கள் தொகுதி எக்குறை யாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தோனைச்
சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்.
ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்
ஏருற லெனினை ஈன்றே தீரும்.''

மாமனிதர் இலெனின் 1924 சனவரி 21இல் காலமானார். 1946இல் பாரதிதாசன் பாடிய இப்பாடலில் 'உருசியம் இலெனினை ஈன்றெடுத்தது' என்று குறிப்பிடாமல் 'ஈன்றே தீரும்' என்கிறார். இதன் கருத்து 'உருசியப் புரட்சி உலகில் முடிவுறவில்லை. ஜார் போன்றோரின் கொடுமைகள் கோலோச்சுகிற இடங்களிலெல்லாம் இலெனின் போன்றோர் கருவுயிர்க்கப்படுவது வரலாற்றுக் கட்டாயம்' என்பதாகும்.

2.6.3. தமிழ்நாட்டில் உருசியா

பாரதிதாசன் பல திரைப்படங்களுக்கு உரையாடல், பாடல்கள் எழுதியவர். இறுதிக்காலத்தில் படமெடுக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டவர். தமிழ்த்திரைப்படங்களின் தரமும் போக்கும்அவர்க்கு

நிறைவளிப்பதாயில்லை. அதைப் புலப்படுத்தும் வகையில் பாடல்கள் புனைந்துள்ளார். அப்பாடல்களில் ஒன்று பழங்கதை களையே படமாக எடுப்பதையும், பாமர மக்களை மகிழ்விப்பதே படங்களின் நோக்கமெனக் கொள்வதையும் கடிந்து பேசுகிறது. படமெடுக்கும் செல்வர்கள் தமிழ்ப் புலவர்களைக் கலந்து அவர்களின் கருத்தறிந்து படங்கள் எடுத்தால் அடிமை ஒழிந்து புதிய நாட்டை உருவாக்கிட லாம் என்று பாடுகிறார்.

நேர்மை இலாவகை இத்தனை நாளும்
நிகழ்ந்த படங்க ளெல்லாம்
சீர்மிகு செந்தமிழ்ச் செல்வர்கள் பார்வைத்
திறத்திற் பிறந்திருந்தால்
ஓர் தமிழ்நாட்டில் உருசிய நாட்டையும்
உண்டாக்கித் தீர்த்திடலாம்
ஆர் செயும் பூச்சாண்டி இங்குப் பலித்திடும்?
அடிமையும் தீர்த்திடலாம்!

உருசிய நாட்டைப் பற்றிய அவரின் கணிப்பு உயர்வாக இருப்பதையும் நல்ல திரைப்படங்களின் வாயிலாகத் தமிழகத்திலேயே உருசிய நாட்டை உருவாக்கிக் காட்ட முடியும் என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது. (இ.தொ.).

2.6.4. அங்கும் இங்கும்

பொதுவாக உருசியாவையும் இந்தியாவையும், குறிப்பாக அங்குள்ள பொதுவுடைமையாளரையும் இங்குள்ள பொதுவுடைமை யாளர்களையும் ஒப்பீடு செய்து குயில் கிழமை இதழில் (15.12.59) பாரதிதாசன் எழுதிய பாடல் 'உருசியாவிலும் இந்தியாவிலும்' என்பது. இசைப்பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ள அப்பாடலில் பல்லவிபோல் அமையும் பகுதி.

'தாளரிய அரிவாளாம் அந்த உருசி யாவில்
தலையரியும் அரிவாளாம் இந்த இந்தியாவில்!'

என்பதாகும். அரிவாள், சுத்தி முதலிய பொதுவுடைமை இயக்கத் தொடர்புடைய சின்னங்களை வைத்தே ஒப்பிடும் வகையில் பாடல் தொடங்குகிறது.

'ஆளும் தொழி லாளி சுத்தி
அங்கே இரும் படிக்கும்
நீளச் சுத்தி இங் கெல்லாம்
பிறர் பெட்டியை உடைக்கும்!''

அடுத்து 'அங்கு அத்தனையும் பொதுவுடைமை, இங்கு ஏழைத் தொழிலாளிகளுக்கு இரண்டில் ஒன்று பங்கு; அங்கு ஒருவன் மனைவி மற்றவனை விரும்புவது தவறு, இங்குப் பெரிய தலைவனின் மனைவியை இருவர் விரும்புதல் கற்பு; அங்குப் பொதுத் தொண் டென்பது மற்றவரின் நலத்துக்கானது, இங்குப் பிறர் பொருளைத் திருடுவதற்கானது' என்று பொதுவாக உருசிய மேன்மையினையும் இந்திய இழிவையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

அங்குள்ள பொதுவுடைமையாளர்கள் முடிந்த மட்டும் அறம் செய்தலே தங்கள் கருமமாகக் கொண்டுள்ளனர். இங்குள்ளவர்களோ சீனாவுக்குக் காட்டிக் கொடுத்தலே தங்கள் தருமமாகக் கொண் டுள்ளனர் என்பதை,

> 'ஆன மட்டும் அங் கெல்லாம்
> அறம் செயலே கருமம்!
> சீனாவுக்குக் காட்டிக் கொடுத்தல்
> இந்த நாட்டின் தருமம்!'

என்று பாடுகிறார். இந்திய சீன எல்லைத் தகராறு தொடங்கிய காலத்தில் எழுதப்பட்ட பாடல் இது. அப்போது இந்தியாவிலுள்ள பொதுவுடைமைக் கட்சியினரின் ஒரு பிரிவினர் சீனாவை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினர். இந்திய நலத்திற்கு எதிரான நடவடிக்கை யாக இதனைக் கருதிய பாரதிதாசன் இந்தப் பாடலிலும் வேறு படைப்புகளிலும் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

2.7. உருசியாவின் தவறான நடவடிக்கைகள்

2.7.1. விண்ணிற் பயணமும் மண்ணில் வறுமையும்

உருசிய நாடும் அமெரிக்காவும் விண்வெளி ஆய்வில் மிக முனைப்பாகவும் தொடர்ந்தும் ஈடுபட்டன. ஏவுகணைகள் மூலமாகச் செலுத்தப்பட செயற்கைத்துணைக் கோள்கள் இவ்வாய்விற்குத் தொடக்கக் காலத்தில் துணைசெய்தன. பிறகோள்களினும் நிலவுல கிற்கு நெருக்கமாக இருக்கும் நிலவு பற்றிய ஆய்வுகள் முதலில் மேற்கொள்ளப்பட்டன.

உருசிய நாடு 1957 அக்டோபர் 4ஆம் நாள் 'ஸ்புட்னிக்1' என்னும் முதல் செயற்கைத் துணைக்கோளை ஏவியது. 1957 நவம்பர் 3இல் 'லைகா' என்னும் நாயை உள்ளே வைத்து இரண்டாம் செயற்கைத் துணைக்கோள் ஏவப்பட்டது. 1958 மே 15இல் 'ஸ்புட்னிக் 3' இன் மூலம் முதல் பன்னோக்கு விண்வெளி ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டது.

1959 சனவரி 2 'லூனா 1' ம், 1959 செப்டம்பர் 12 'லூனா 2'ம் 1959 அக்டோபர் 4 'லூனா 3'ம் நிலவை நோக்கி உருசியாவினால் ஏவப்பட்டன. 'லூனா 2' நிலவில் இறங்கிய முதல் விண்கலம் என்னும் சிறப்பைப் பெற்றது. 'லூனா 3' நிலவைச் சுற்றிப் பயணம் செய்து நிலவின் தொலைவுமிகு பக்கங்களையும் முதன்முதல் படம்பிடித்து அனுப்பியது. 1956 சூன் 31இல் செலுத்தப்பட்ட 'லூனா 9'இன் வாயிலாகத்தான் முதல் மாந்தன் நிலவில் இறங்கினான். உருசிய நாடு மேற்கொண்ட இந்த விண்வெளிப் பயணங்களெல்லாம் வெளிப்படையாக முன்னரே வெளியுலகிற்கு அறிவிக்கப்படாமல், ஏவப்பட்ட ஊர்திகள் தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்படாமல் நடத்தப்பெற்றன.

தொடக்கத்தில் ஆளில்லாச் செயற்கைத் துணைக் கோள்கள் ஏவப்பட்டன. பின்னர் நாய்கள், எலிகள், மனிதர்கள் இடம்பெறத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உருசியாவும் அமெரிக்காவும் போட்டிபோட்டுக் கொண்டு விண்வெளி ஆய்வுக் காகப் பெரும் பொருளைச் செலவு செய்தன. மண்ணில் வாழும் மக்கள் வறுமையில் உழலுகையில் விண்வெளி ஆய்வுக்குப் பெரும் பொருள் செலவிடுவதை அவ்வந்நாட்டிலிருந்த நன்மக்கள் எதிர்த்தனர்.

உருசிய நாட்டை 'உலகின் உயிர்' என்றும் அந்நாடு 'மக்கள் அனைவரும் ஒக்க வாழும் உறுதியை உலகிற்குக் கற்றுத்தந்தது' என்றும் போற்றியவர் பாரதிதாசன். அந்நாடு 'லூனா' கலங்களை விண்ணை நோக்கிச் செலுத்துவது, அதற்குப் பெரும் பொருளைச் செலவிடுவது பாரதிதாசனுக்கு உடன்பாடில்லை. அவரின் எதிர்ப் புணர்வை வெளிப்படுத்தும் வகையில் 1.9.59இல் குயில் கிழமை இதழில் ஒரு பாடல் எழுதினார். அப்பாடலின் தலைப்பு 'செயற்கைக் குட்டி நிலாவும் இயற்கை வட்ட நிலாவும்' என்பதாகும். நிலவு என்னும் பொருள் தரும் 'லூனா'வாகிய துணைக்கோளே செயற்கைக் குட்டி நிலாவாகப் பாடலில் சித்திரிக்கப்படுகிறது.

மாந்தரால் ஏவப்பட்ட 'செயற்கைக் குட்டிநிலா' 'இயற்கை வட்ட நிலா'வை அடைகின்றது. இரண்டு நிலவுகளும் உரையாடு கின்றன. முதலில் வட்டநிலா குட்டி நிலாவை நோக்கி 'எங்கே வந்தாய்?' என்று கேட்கிறது. குட்டிநிலா 'உன்னிடம் தான் வந்தேன்' எனக் கூறி வருகையின் நோக்கத்தைக்

'கெட்ட உலகம் வாழும் வழியைக்
கேட்க வந்தேன் வட்ட நிலாவே'

என்று விளக்குகிறது. 'எட்ட இருக்கும் எனக்கா இது பற்றித் தெரியும்?' என வட்ட நிலா விடை பகர்கிறது. உரையாடல் தொடர்கின்றது. 'நிலவுலகம் சண்டையிட்டுக் கொண்டு தளர்ந்து போகின்றது' எனும் வட்ட நிலாவின் கருத்தையேற்றுக் குட்டிநிலா, 'அந்நிலைமாற ஒருவன் கைக்குள் உலகம் வருமோ?' என்று கேட்கிறது. அதற்கு வட்டநிலா நேர்விடை தராமல் 'உலகில் மக்கள் உணவுக்குப் போதிய அரிசி இருக்கிறதா?' என்று வினவுகிறது. குட்டி நிலாவோ,

'ஆயிரங் கோடிச் செலவில் வந்தேன்
அறிவைக் கொடுப்பாய் வட்ட நிலாவே'

என்று வேண்டுகிறது. இதைக்கேட்டுச் சினமுற்ற வட்டநிலா,

'ஆயிரங் கோடியை அரிசிக் காக
அளித்த துண்டோ குட்டி நிலாவே?
போய்விடு போய்விடு குட்டி நிலாவே!

என்றது. இறுதியில் குட்டிநிலா என்ன ஆனது?

'தீயில் எரிந்தது குட்டி நிலாவே
தீய்ந்து விழுந்தது குட்டி நிலாவே'

எனப் பாடலும் முடிகின்றது.

2.7.2. வரிசை கெட்ட உருசிய நாடு

நிலவுப் பயணத்தைக் காட்டிலும் உலவும் வறுமையை ஒழிக்கும் பணியே உடன் செய்ய வேண்டியது என்னும்பாரதிதாசனின் கருத்தை வலியுறுத்துவது போல் உருசியாவில் ஒரு நிகழ்ச்சி! அதுவும் குயிலில் (21.6.60) பாடலாகிறது.

உருசியத் தொழிலாளி ஒருவர் தெரிவித்த கருத்துகள் பொதுவுடைமைத் தாளிகை ஒன்றில் வெளிவருகின்றன. அக்கருத்து களை அடுக்கி இடையிடையே இங்குள்ள பொதுவுடைமைக்காரர் களின் பொய்க் கூற்றுகளை எடுத்துக்காட்டும் வகையில் இயற்றப் பட்டதே இப்பாடல்.

உருசியத் தொழிலாளியின் கேள்விகளாகவே பாடல் தொடங்கித் தொடர்கிறது.

''உருசிய நுண்ணுணர் வுடையவர் இந்நாள்
எழில்நிலவு நோக்கி ஏவு கணைகள்
ஏவுகின் றதால் என்னைப் போன்ற
ஏழைகட்கு என்ன கிடைக்கக் கூடும்?...

வீட்டு வசதியை ஏவுகணை கூட்டுமோ?...

பணிமனைப் பெண்களின் பாது காப்பிற்குப்
பறக்கும் நிலவு பண்ணிய தென்ன?...

இந்த நாட்டில் இன்றி அமையாப்
பொருள்கள் எல்லாம் போதிய அளவில்
இல்லா நாளில் குருஷேவ் விளம்பர
நாடகம் ஆடுவது நல்லது தானா?

உருசியத் தொழிலாளியின் இந்தக் கேள்விகளே 'ஏழ்மையும் வீட்டுவசதிக் குறைவும் பாதுகாப்பின்மையும் உருசியாவில் இருப்பதைக் காட்டவில்லையா? உருசியாவில் ஏழைகள் இல்லை யென்று கூறும் இங்குள்ள 'ரஷ்யத்தலைவர் சிஷ்யர் உணர்க' என்று பாரதிதாசன் கேட்கிறார். பாடலின் இறுதியில் அத்தொழிலாளியின் அறிவுறுத்தலாக,

'ஏவுகணை ஒன்றை இயற்று தற்குச்
செலவிடும் பெருந்தொகை இருந்தால்
உலவும் ஏழை மக்களுக் குதவுமே

எனும் பகுதி இடம் பெறுகிறது. உலவும் வறுமையை ஓட்டுதற்கு முன்னர் நிலவுப்பயணம் தேவையில்லை என்னும் பாரதிதாசன் கருத்து இப்பாடலிலும் வலியுறுத்தப்படுகின்றது.

முதலில் செய்யத்தக்கது, பின்னர் செய்யத்தக்கது என்னும் வரிசையை - தகுதியை உணராமல் உருசிய அரசு செயல்படுகிறது என்பதை உணர்த்தும் வகையில் 'வரிசை கெட்ட உருசிய நாடு' என்று பாடல் தலைப்பு அமைந்துள்ளது.

2.7.3. பெண்கள் காமம் கழிக்கும் கலயமா?

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' எனும் கருத்தைத் தொடக்கக் காலத்திலிருந்து படைப்புகள் பலவற்றின் மூலம் வலியுறுத்தி வந்துள்ளார் பாரதிதாசன். 1931இல் அவர் இயற்றிய 'சிந்தாமணி' நாடகத்திலும் 1935இல் அவர் எழுதிய 'தகுந்த குடும்பம் சர்வகலாசாலை' எனும் பாடலிலும் வலியுறுத்தப்பட்ட இக்கருத்து 1942இல் அவர் எழுதத் தொடங்கிய 'குடும்ப விளக்கு' எனும் எழுத்தோவியத்தின் அடிப்படைக் குரலாக அமைந்தது.

குடும்பம் எனும் அமைப்பு தழைத்தோங்குவதற்கு அடிப்படை யாக அமைவது திருமணம். திருமணம் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் வகையில் 'திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம்' (1949) அவரால் தீட்டப்பட்டது. குடும்ப விளக்கின் நடுப்பகுதியாகத் 'திருமணம்' பகுதி (1948) அமைக்கப்பட்டுள்ளது.

ஒருவனும் ஒருத்தியுமாக, ஒருத்தியும் ஒருவனுமாக உவந்து வாழும் வாழ்வே உயர்ந்த வாழ்வு எனும்கருத்தில் ஊன்றி நிற்கும் பாரதிதாசன்,

> உடையார் தமக்குள் உளம் வேறுபட்டால்
> மடவார் பிறனை மணக்க விடவேண்டும் (கு.வி.)

என்றும்,

> வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
> மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? (மு.தொ.)

என்றும் பேசுவார். கணவனோடு கருத்து வேறுபட்டால் அவனைப் பிரிந்து இன்னொருவனை மணப்பதும் கணவன் இறந்துவிட்டால் பிறிதொருவனை மணந்து கொள்வதும் வரவேற்கவேண்டியவை என்று பேசுவதன் வாயிலாகவும் திருமண வாழ்க்கை பெண்ணுக்குத் தேவையானது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இப்படிப் பலபடப் பேசும் பாரதிதாசன் பார்வையில் 1960இன் தொடக்கத்தில் உருசியா விலிருந்து வரும் ஒரு செய்தி விழுகிறது. அடங்காச்சினம் எழுகிறது.

> 'எண்ணங் கெட்ட உருசியனே!
> ஏதுங் கெட்ட உருசியனே!''

என்று தாக்கத் தொடங்குகிறார். பெண்கள் பற்றி உருசியர்கள் பேசும் பேச்சு முடைநாற்றம் வீசுவதாக இருப்பதே அதற்கான காரணம் எனப் பாடல் தொடங்குகிறது.

தாய்மை என்னும் பண்பைக் கொல்லும் வகையில் பெண் களைக் காமத்தின் கழிப்பிடம் என உருசியர்கள் பேசுவதைக் கண்டித்து,

> காமம் கழிக்கும் கலையம் என்றாய்
> காதற் பெண்கள்! நிலை மறந்தாய்!
> தாய்மை என்னும் பண்பு கொன்றாய்!
> தலை கொழுத்தே கெடு கின்றாய்!

என்று பாடுகிறார். 'திருமண வாழ்க்கையின்றி ஆடவரும் மகளிரும் தனித்தனியே வாழலாம். யாரும் யாரொடும் கூடி வாழும் வாழ்க்கை ஏற்றது' என்று உருசியாவில் கூறப்படும் கருத்து பாரதிதாசன் சினத்தை அதிகப்படுத்துகிறது.

> மணவாழ்க்கை வேண்டாம் என்றாய்
> மாட்டுவாழ்க்கை வேண்டும் என்றாய்
> கணந்தோறும் இருட்ட றைக்குக்
> கட்டுச்சோறு கட்டுகின்றாய்

என்று கடுமையாகச் சாடுகின்றார். திருமண நிகழ்வோ கணவன் மனைவி என்னும் கட்டுப்பாடோ தேவையில்லை எனும் உருசியர் கருத்தை இந்தப் பாடலில் சாடுவதைப் போலவே வேறு சில இடங்களிலும் கண்டிக்கிறார். 'பெண்கள் காமம் கழிக்கும் கலையமா' எனும் தலைப்பில் அமைந்த இப்பாடல் 15.3.60 குயில் கிழமை இதழில் வெளிவந்தது. இக்காலத்தையொட்டிய 'கேட்டலும் கிளத்தலும்' பகுதிகளில் 'ஒருத்திக்கு ஒருவன்' என்னும் கருத்தை வலியுறுத்தி (குயில் 23.2.60, 15.3.60) நிறைய எழுதியுள்ளார் பாரதிதாசன். ''பெண்கள் காமம் கழிக்கும் எச்சில் தொட்டிகள் என்பது உருசியப் பொதுவுடைமை, மணம் தேவையில்லை என்பது உருசியப் பொதுவுடைமை'' (குயில் 12.4.60) என்று எழுதியுள்ளது ஈண்டு நோக்கத்தக்கது. 'உருசியாவிலும் இந்தியாவிலும்' எனும் தலைப்பில் முன்னர் (குயில் 15.12.59) எழுதிய பாடலில்,

ஒருவன் மனைவி மற்றவனை
உவப்பதங்கே தப்பே - பெருத்
திருக்கும்தலைவன் மனையை இங்கே
இருவர் உவத்தல் கற்பே

என்று சற்று முந்தைய உருசியர் வாழ்க்கையைப் போற்றிப் பாடியுள்ளமை ஈண்டு இணைத்து எண்ணத்தக்கது.

1960இன் தொடக்கத்தில் மணம் வேண்டாம் என்னும் வாழ்க்கையை 'மாட்டு வாழ்க்கை, அது இருட்டறைக்கு இட்டுச் செல்வது' எனச்சாடும் பாரதிதாசன், மாதவெளியீடாக அவர் நடத்திய குயில் 15.5.48 இதழில் 'அமைதியுலகம்' என்னும் தலைப்பில் எழுதிய பாடலில்,

ஒருத்திக்கும் ஒருவனுக்கும்
வாழ்க்கையின் உடன்பா டென்னும்
திருமணம் ஒழிய வேண்டும்
தெரிந்தவர் கூடி அன்பு
புரிவதால் தோன்றும் மக்கள்
பொதுமக்கள் ஆதல் வேண்டும்.
அருந்துதல் உறைதல் எல்லாம்
பொதுவென அமைதல் வேண்டும்

என்று குறிப்பிடுவது அப்போதைய அவர் கருத்து நிலையைப் புலப்படுத்துவதாகும்.

2.8. சீனா – குமாய்த்தீவுமேற் குண்டு

சீனாவின் பெருந்தலைவராக இருந்த சியாங்-கய்-சேக்கு அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் 1945-48இல் அனைத்து மாநிலங்களையும் இழந்தார். 1949 சனவரியில் பீகிங் நகரமும் பொதுவுடைமையர்களால் கைப்பற்றப்பட்டது. சியாங்-கய்-சேக்கு அமெரிக்கக் கடற்படையின் பாதுகாவலோடு தைவான் (பார்மோசா) தீவினுக்குச் சென்று அங்குத் 'தேசியச்சீனா' என்ற ஒரு புதிய அரசினைத் தொடங்கினார். சீனப் பொதுவுடைமை அரசின் படைகள் தைவானைத் தாக்காமல் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் பாதுகாத்து வந்தன.

மக்கள் சீனம் ஒதுக்கப்பட்டு, சியாங்கின் தேசியச் சீனாவே உண்மையான சீன அரசு என அமெரிக்காவின் துணையினால் அங்கீகரிக்கப்பட்டு ஐ.நா. மன்றத்தில் இடம்பெற்றிருந்தது.

1958 செப்டம்பரின் தொடக்கத்தில் மக்கள் சீனம், சியாங்கின் சீனாவிலுள்ள தீவுப் பகுதிகளைத் தாக்குவதற்குத் திட்டமிடுவதாகத் தெரியவந்தது. உடனே அமெரிக்க அரசு 'பார்மோசாவின் பாதுகாப்பு எங்களைச் சார்ந்தது. தாக்குதல் நடத்தினால் தலையிடத் தயங்க மாட்டோம்' என்று எச்சரித்தது. 'சியாங்கின் போர்க்கப்பல்களும் அமெரிக்கப் போர்க்கப்பல்களும் இணைந்து தெற்கு பார்மோசாவில் ஒத்திகை நடத்துவது மக்கள் சீனத்தைத்தாக்குவதற்காகவே' என பீகிங் வானொலி அறிவித்தது.

சீனத் தலைமையமைச்சர் சூ-என்-லாய் 'பார்மோசாவை மக்கள் சீனம்விடுவித்தே தீரும். அதில் அன்னியர் தலையிடுவதை ஒருபோதும் பொறுத்துக் கொண்டிருக்காது. பார்மோசாவில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்து வருவது சீனாவின் கரையோரத் தீவுகளை ஆக்கிரமிப்பதற்கொப்பாகும்' என்று அறிவித்தார்.

மக்கள் சீனம்பார்மோசாவின் மீது படைதொடுப்பதன் முன் நடவடிக்கையாகக் குமாய்த்தீவு மேல் குறிவைத்தது. அதிகாலையில் தொடங்கிய தாக்குதல் நண்பகல் வரை தொடர்ந்தது. குண்டுவீச்சு மிகக் கடுமையாக இருந்தது. சியாங்கின் படைகள் குமாய்த்தீவில் தங்கள் பொருள்களை இறக்குவதற்கு முயன்றபோது கடுமையான தாக்குதல் நடந்தது. (விடுதலை 22.9.58)

'இதன்பின்னரும் அமெரிக்கா போரைத் தூண்டும் முயற்சியில் விடாப்பிடியாக இருக்குமேயானால் சீனமக்கள் சோசலிச முகாம் முழுவதினுடையவும் சமாதான ஆர்வமுடைய எல்லா நாடுகளுடையவும் அனுதாபத்துடனும் ஆதரவுடனும் அமெரிக்க ஏகாதிபத்திய

ஆக்கிரமிப்பை உறுதியாக முறியடிப்பார்கள்' என்று சூ-என்-லாய் அறிவித்தார். (விடுதலை 29.9.58) உருசியா முதலிய சோசலிச நாடுகளின் ஆதரவு மக்கள் சீனத்திற்கிருந்தது.

மக்கள் சீனம் குமாய்த்தீவுமேல் குண்டு வீசித் தாக்கிய இந்த நிகழ்ச்சி பாரதிதாசனின் நெஞ்சத்தைப் பற்றியிருக்கிறது. அதை மையப்பொருளாக்கிப் பாடல்கள் புனைகிறார். அப்பாடல்கள் 30.9.58 குயில் கிழமை இதழில் வெளியிடப்படுகின்றன.

'உருசிய உதைப்பும் அமெரிக்கா அதைப்பும்' என்ற தலைப்பில் அமைந்த முதற்பாடல் இது:

குமாய்த்தீவு மேற்சீனர் குண்டுமேல் குண்டு
டமார்டமார் என்று போட் டார்கள் - சமாய் சமாய்
என்றே உருசி இயம்ப அமெரிக்கா
இன்றே கிளம்பிற் றெதிர்த்து!

உருசியா குண்டுவீச்சை ஊக்குவித்தது. அமெரிக்கா எதிர்த்தது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. அமெரிக்காவும் உருசியாவும் மக்களின் உணவுப் பொருள்களையெல்லாம் போர்க்கருவியாக மாற்றுகின்றன. மக்கள்மேல் சிறிதாவது அன்பிருந்தால் அந்நாடுகள் இப்படிச் செய்யா என்பதை,

அரிசிஎலாம் ஆயுதமாய் மாற்றி யமைத்த
உருசி அமெரிக்காவில் உள்ள - அரசினரே
கண்ணடியில் மக்கள்மேல் காட்ட அருளுண்டா
மண்ணடியில் வீழ்கஉம் வாழ்வு

என்னும் வெண்பா புலப்படுத்துகிறது.

மக்கட்குத் தொல்லையில்லாத வழியாவது மற்றவர்களைப் பின்னிருந்து ஏவிவிட்டுப் போர் செய்யச்சொல்வதைவிட அமெரிக்கா வும் உருசியாவும் நேரடியாகப் போரில் ஈடுபடுவதுதான் என்கிறார் பாரதிதாசன்.

ஐசன் அவரும் குருசேவும் போர்க்களத்தில்
கைசலிக்கச் சண்டையிட்டுக் காட்டட்டும் - மெய்யாய்
அவர்வென்றால் வென்ற தவர்நாடாம் அன்றி
இவர்வென்றால் வென்றதிவர் நாடு.

உலகில் போர்மூட்டிவிடுவதைக் காட்டிலும் இந்த வல்லரசுகள் அழிந்து போவது நல்லது என அறச்சினத்தை வெளிப்படுத்தும் வகையில்,

எத்தனை ஆயிரம் கோடி இழக்கின்றார்
ஒத்துலக மக்களெலாம் உங்களால் - பித்தர்களே
வீம்புண்டு சண்டை விளைக்கின்றீர் வீட்டில்முழத்
தாம்புண்டு சாதலே நன்று

என்று சாடுகிறார்.

மக்கள் சீனம் தேசியச் சீனத்திடையே நடக்கும்போரின் பின்புலத்தில் வல்லரசுகள் உள்ளமையைப் புலப்படுத்துவதோடு வல்லரசுகள் தங்கள் வலிமையை வெளிப்படுத்தக் களந்தேடுவதன் மூலம் உலகம் எவ்வாறு பாழ்படுகின்றது என்பதையும் அவர் நோக்கில் விளக்கிச் செல்கிறார்.

3.0. இயல் மூன்று

பிரெஞ்சுக் குடியரசு

3.1. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்

பாரதிதாசன் பிரெஞ்சுக் குடியரசின் ஒரு பகுதியாகிய புதுச்சேரியில் பிறந்து வளர்ந்தவர். அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். பிரெஞ்சுக் குடியரசின் மீது அவருக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. ''முடியரசு ஆட்சி குடியரசு கொள்ளமுடியும் என்பதை முடித்த பிரான்சு'' (இ.தொ.) என்று பிரெஞ்சு நாட்டைப் பாராட்டுவார்.

பிரெஞ்சு நாட்டு அரசர்கள், நாட்டை ஆளுகிற உரிமை தங்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்டது எனக் கருதினர். அடித்தட்டு மக்கள் நலனைக் கருதாது தங்கள் விருப்பம்போல் ஆட்சி நடத்தினர். வாணிகர்களும் பொருள் உற்பத்தியாளர்களும் வளம் மிக்கவர்களாயினர். ஆனால் அடித்தட்டு மக்களும் உழவர்களும் அரசின் மோசமான வரிவிதிப்பு முறைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உண்ணும் உணவு கிடைக்காமல் உழவர்கள் உள்ளிட்ட பெரும்பான்மையான மக்கள் அல்லற்பட்டனர். ஆனால் உயர்குடியினரும் மதக்குருமார்களும்மிகுந்த ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். நடுத்தட்டு, அடித்தட்டு மக்கள் வரிச்சுமைகளுக்கு ஆளாக்கப்பட்டபோது செல்வர்களும் மதக்குருமார்களும் நிலவரி செலுத்த வேண்டியதில்லை என்று விலக்களிக்கப்பட்டனர். நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியது. இதிலிருந்து மீள, அரசன் 16ஆம் உலூயி மேற்கொள்ள விரும்பிய சில சீர்திருத்தங்கள் எதிர்ப்புக்குள்ளாயின. கி.பி. 1614இல் இருந்து கூட்டப்படாத பிரெஞ்சுப்பாராளுமன்றம், வெர்செல்சு நகரில் 1789 மே 5இல் கூட்டப்பெற்றது. மதக்குருமார்கள் முதற்பிரிவாகவும் (Estate) உயர்குடியினர் இரண்டாம் பிரிவாகவும் ஏனையோர் மூன்றாம் பிரிவாகவும் அமைந்த நாடாளுமன்றத்தில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட மூன்றாம் பிரிவினர் தாங்களே சட்டப்படியான நாடாளுமன்றத்தினர் என அறிவித்துப் பல

நடவடிக்கைகள் மேற்கொண்டனர். நடுத்தரப் பிரிவினர் அடித்தட்டு மக்களையும் இணைத்துப் புரட்சிக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கிளர்ந்தெழுந்த மக்கள் திரளால் சூலை 14, 1789 அன்று பாதுகாப்பு மிக்க பாசுடிலி சிறை உடைக்கப்பட்டது. சிறையாளுநர் கொல்லப்பட்டார். அரசன் சில நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப் பட்டான். போராட்டம் தீவிரமடைந்தது. 1789 அக்டோபர் மாதத்தில் பெருமளவில் பெண்களைக் கொண்ட மக்கள்திரள் வெர்செல்சு அரண்மனையை முற்றுகையிட்டு அரசக் குடும்பத்தைப் பாதுகாப்புத் தேடும் நிலைக்கு ஆளாக்கியது. உழவர்கள் நாட்டின் பல பகுதி களிலும் நிலவுடைமையாளர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். செல்வர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடினர். தப்பியோட முனைந்த அரசன் 16ஆம் உலூயி தடுத்து நிறுத்தப்பட்டான். அவன் 1793 சனவரியிலும், அரசி மேரி அண்டோனெட் அக்டோபரிலும் கில்லட்டினில் வைத்துக் கொல்லப்பட்டனர். பல உயர்குடிச் செல்வர்களும் திரிபுவாதிகளும் இவ்வாறே கொலை செய்யப் பட்டனர். பெரும்பாலோரின் ஆதரவு பெற்ற குழுவினர் கைக்கு ஆட்சி மாறியது. இவ்வாறு பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து, மாற்றங்கள் விளைந்த 1789 முதல் 1799 வரையிலான பத்தாண்டுக் காலம் பொதுவாகப் 'பிரெஞ்சுப் புரட்சிக் காலம்' எனப்படுகிறது.

பிரெஞ்சுப்புரட்சி உலகத்திற்கு ஒரு புதிய முழக்கத்தைத் தந்தது. உலகம் முழுவதும் உள்ள அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கு, விடுதலையை விரும்பும் மக்களுக்குப் புதிய எழுச்சியை அளிக்கும் வகையில் அமைந்த அந்த முழக்கமே 'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பதாகும்.

சுதந்தரம் (Liberty) தொடர்பான கருத்துகளை மக்களிடையே கொண்டு சென்றதில் வால்டேருக்குச் சிறப்பான இடமுண்டு. 'உள்ளுணர்வின் விடுதலை' 'சிந்தனையின் விடுதலை' என்று அவர் எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. இவரைப் போலவே சமன்மை (Equality) என்னும் சமத்துவம் பற்றி உரூசோ சிறப்பாக எழுதினார். அறிஞர்கள் தங்கள் நூல்களின் வாயிலாகச் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் கொடுமைகளையும் சாடினர். உள்ளவருக்கு ஒரு நீதி இல்லாதவருக்கு ஒரு நீதி என்ற நிலைமை எடுத்துக்காட்டப்பட்டு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

பிரெஞ்சுப் பாராளுமன்றம் (தேசியப் பேரவை), மூன்றாம் பிரிவினரோடு வேறுபாடுகட்கு அப்பால் முதலிரு பிரிவினரும்

(உயர்குடியினர், மதக்குருமார்கள்) இணைந்ததைக் குறிக்கும் வகையில் 1789 சூன் 27ஆம் நாள் சகோதரத்துவக் கருத்தை (Fraternity) ஏற்றுக் கொண்டது.

நிலவுடைமை அழிக்கப்பட்டு அடிமை முறை ஒழிக்கப்பட்டு உழவர்களின் கடன்களும் வரிகளும் நீக்கப்பட்டுப் பொதுநிலையில் 'அனைவரும் சமம்' என்னும் உணர்வு ஏற்பட்டது. அதன் விளைவாக 1789 ஆகசுடு 4ஆம் நாள் சுதந்திரக் கருத்தை (Liberty) முன்வைத்துப் பிரெஞ்சுப் பாராளுமன்றம் தொடங்கியது.

பிரெஞ்சு நாட்டின் 1791ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டப்படி நிலவிய 'சொத்துகளோடு இணைந்த வாக்குரிமை' நீக்கப்பட்டு 'அனைவருக்கும் வாக்குரிமை' அளிக்கும் வகையில் உரிய திருத்தம் 1792 ஆகசுடு 10ஆம் நாள் கொண்டுவரப்பட்டு 'அனைவரும் சமம்' (Equality) என்னும் கருத்து நிலைநிறுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டுப் பிரெஞ்சுக் குடியரசின் குறிக்கோள் தொடராக (Motto) 1793 சூன் முதல் கடைப்பிடிக்கப்பட்டது. மேலும் நாட்டின் தேசிய முழக்கமாகவும் 1875 முதல் விளங்குகிறது. (Chambers Dictionary of World History, P. 539).

பிரெஞ்சுக் குடிமகனாகிய பாரதிதாசன் உள்ளத்தினையும் முத்தொடர்களால் ஆகிய அந்த முழக்கம் பெரிதும் பற்றி நின்றது.

இதுஅறிவெனத் தெரிந்த நாள்முதல் புதுவையில்
சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம்
மூன்றும் என்னுயிர் உணர்வில் ஊறியவை

என்று (நா.ம. ப.65) அறிவு தெரிந்த இளமைப்பருவம் தொட்டுத் தனது உயிரில் உணர்வில் ஊறியவை இவை மூன்றும் என்பதைப் பாரதி தாசனே தெளிவாகக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

இம்மூன்று குறிக்கோள் தொடர்கள் பற்றித் தனித்தனியாகவும் மூன்றையும் இணைத்தும் பாரதிதாசன் பாடல்களிலும் கட்டுரை களிலும் நிறைய எழுதியுள்ளார். அவற்றுள் சில இங்குக் குறிக்கத் தக்கன.

பாரதிதாசனுக்குச் சுயமரியாதை இயக்கத்தொடர்பு ஏற்பட்ட பின் 1930இல் வெளியான முதல் நூல் 'தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு'.

புவியிற் சமூகம் இன்பம்
பூணல் சமத்துவத்தால்

கவிழ்தல் பேதத்தாலடி - சகியே
கவிழ்தல் பேதத்தாலடி

என்று ஓங்கியொலிக்கும்சமத்துவக் குரலுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்த இலக்கியம் அது.

கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் கிளியொன்றை நோக்கிக் கவிஞர் பேசுவதாய் அமைந்த பாடல் 'சுதந்தரம்' என்பதாகும். (மு.தொ.) வசதியாக வாழும் கூண்டுக்கிளி வானவீதியில் பறந்து திரியும் கிளியைப் பார்த்து 'அக்கா அக்கா' என்று அழைக்கின்றது. அதனை நோக்கி,

அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே?

என்று கவிஞர் அழகாகக் கேட்கிறார்.

உறுதி உறுதி உறுதி
ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கே இறுதி

எனத் தொடங்கும் பிறிதொரு பாடலின் தலைப்பு 'சகோதரத்துவம்' *(1930)*.

'அனைவரும் உறவினர்' என்னும் கருத்தைப் பல இடங்களில் பதிவுசெய்யும் பாரதிதாசனின் இப்பாடலில்,

தேசத்தினர்கள் ஓர் தாய் தந்திடு சேய்கள் - இதனைத்
தெளியா மக்கள் பிறரை நத்தும் நாய்கள் - மிகவும்
நேசத்தாலே நா மெல்லாரும் ஒன்றாய் - நின்றால்
நிறை வாழ் வடைவோம் சலியா வயிரக்குன்றாய் (உறுதி)

எனவரும் பகுதி மனங்கொள்ளத்தக்கது. (தா.ச.)

பாரதிதாசன் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியபோது தானே கதை, உரையாடல், பாடல் எழுதி நடத்திய 'சிந்தாமணி' *(1931)* என்னும் நாடகத்தில் இடம்பெற்ற ஒரு பாடல் பின்வருவதுஃ

உலகமே உயர்வடைவாய்!
உள்ளவர்க் கெல்லாம் நீயேதாய்!
நலந்தரும் சமத்வம்
நாடுதல் மகத்வம்
நண்ணுவாய் சுதந்தரத்வம்!
கலகமேன்? சண்டைகளேன்?
கருத்தெலாம் பேதம் கொள்வதேன்?

கலன்செல்லும் பாதையின்
காரிருள் வெளிக்குக்
கல்வியே சுடர் விளக்கு! (கவி.ம.வெ.1)

இப்பாடலிலும் 'சமத்துவம்', 'சுதந்தரம்' வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

'குடிஅரசு' 9.10.1932 இதழில் வெளியான நெடும் பாடல் ஒன்றில்,

''சுயமரியாதை இயக்கம் அறைவதென்ன வெனில்...
எல்லோரும் ஓர் குலம் எனப்படல் வேண்டும்...
சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவமெனும்
இதந்தரு பதவி எவர்க்கும் வேண்டும்''

என்று முக்குறிக்கோள்களையும் இணைத்துப் பேசுவதோடு சுயமரியாதை இயக்கம் சொல்வதும் அதுதான் என்பதை உறுதி செய்கிறார். பிறிதொரு பாடலிலும் பிரெஞ்சுநாட்டின் பெருமையைப் பாடும்போது, (1.10.44)

''பிறப்புரி மைகாண் யார்க்கும்
விடுதலை'' எனப் பிழிந்த
நறுந்தேனை எங்கும் பெய்தாய்!
நால்வகைச் சாதி யில்லை;
தறுக்குறும் மேல், கீழ் இல்லை
சமம் யாரும் என்றாய்! வானில்
அறைந்தனை முரசம் ''மக்கள்
உடன்பிறப் பாளர்'' என்றே!

என்று முக்கொள்கைகளை உலகுக்கு வழங்கிய சிறப்பை உணர்த்துகிறார். (நா.தொ. ப.230) இவ்வாறு பாடல்களில் முக்கொள்கைகளைப் பரக்கப்பேசும் பாரதிதாசன், கட்டுரைகளில் அவற்றைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குவதைக் காணலாம்.

பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு 1930ஆம் ஆண்டின் இறுதியில் புதுவையிலிருந்து வெளிவந்த 'புதுவைமுரசு' என்னும் இதழே அவரின் எழுத்துப்பணிக்கு மிகவும் வலிவான அடித்தளம் அமைத்தது எனலாம். புதுவை முரசு முதல் இதழில் (10 நவம்பர் 1930) தான் எழுதிய ஆசிரியவுரையில் ''புதுவை முரசு என்பதற்குப் புதுவையிலுள்ள மக்களில் ஒரு தொகுதியினரின் முழக்கம் என்பது தேர்ந்த பொருள். அம்முழக்கத்தையுடையது புதுவை முரசுப் பத்திரிகை என்க. புதுவையிலுள்ள ஒரு தொகுதியினர் ஆவார் யாவர்?

அவர்தாம் சுயமரியாதைக் கொள்கையுடைய கூட்டத்தார் என்று பட்டவர்த்தனமாய் அறிக... சுயமரியாதைக் கொள்கைகளைப் பிராஞ்சிந்திய மக்கள்பால் பரவச் செய்து அவர்கட்குக் கிடைத்துள்ள சுதந்தரம் சமத்துவம் சகோதரத்வம் என்னும் மூன்றின் உண்மை நலன்களை அவர்கள் அநுபவிக்கும் வகையில் ''பிரஞ்சு குடியரசு வாழ்க' என முழங்குவது நம் புதுவை முரசின் கடனாம்'' என்று இதழின் நோக்கத்தை விளக்கியிருப்பது மூன்று தொடர்களின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது.

புதுவை முரசு விஷேச அனுபந்தத்தில் (மார்ச்சு 1932) 'வாழ்வு' என்னும் பெருந்தலைப்பின் கீழ் 'சமத்துவம் சகோதரத்துவம் சுதந்தரம்' என்னும் தலைப்புத் தந்து பாரதிதாசன் எழுதிய கட்டுரை தனித்துக் குறிப்பிடத்தக்கது. அக்கட்டுரையே பின்னர் 'இன்ப வாழ்வு' என்னும் தலைப்பில் அறிஞர் அண்ணாவின் பாராட்டுக் குறிப்புரையோடு திராவிட நாடு இதழில் (25.3.1945) மறுவெளியீடு செய்யப் பட்டது. அக்கட்டுரையின் தொடக்கத்தில்,

> ''வாழ்வு என்பது உயிர் வாழ்தல். அது பிறப்பு இறப்பு இந்த இரண்டின் இடையில் உள்ளது.
>
> வாழ்வின் பயன் இன்ப வாழ்வு வாழ்தல். இதன் மற்றொரு முனை துன்ப வாழ்வு. உயிர்கள் இயல்பாக விரும்புவது இன்ப வாழ்க்கையே. துன்ப வாழ்க்கை உயிர்களுக்கு எட்டிக்காய்.
>
> இன்ப வாழ்வை அடைய வழி எது? இது உலக மக்களில் பெரும் பாலோரின் கேள்வி.
>
> சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ததும்பும் உள்ளம் வேண்டும். அதன்பிறகு வெற்றி, அதன்பிறகு இன்ப வாழ்வு.
>
> இன்னொரு முனை நமக்குத் தெரிந்ததுதான். பேதம் விரோதம் பந்தம். இவை உள்ளத்தில் இடம்பெற்ற நிமிடத்தில் எட்டிக்காய் வாழ்வு வந்து சேரும்.
>
> அரசு; அன்றி ஓர் ஏழைக்குடி; இருவரும் மனிதர்; மக்களின் சந்தர்ப்ப பேதத்தால் ஏற்படும் நிலையை நீக்கிப் போட்டு 'அனைவரும் மக்கள்' என்று கொள்ளும் தன்மை ஒப்பு எனப்படும். சமத்துவம் ஒப்பு இரண்டும் ஒரே அர்த்தம்.
>
> உலகம் ஒரு தாய். உலக இன்பம் தாயின் திருமுலைப்பால்; பாலுண்ணத் தாவும் மக்களின் மாறுபடாத மனோபாவம் உடற்பிறப்பு எனப்படும். சகோதரத்வம் உடற்பிறப்பு இரண்டும் ஒரே அர்த்தம்.

உலகம் பொது. உலக இன்பம் பொது. மக்கள் தமக்குரிய இன்பத்தை அடையத் தடங்கலின்றி விடுபட்ட தன்மை விடுதலை. விடுதலை சுதந்தரம்.

ஒப்பு - உடற்பிறப்பு - விடுதலை!! நினைத்துப் பாருங்கள் - இந்நிலையடைந்த மக்கள் இன்ப வாழ்க்கையின் எல்லை காண்பர்''

என்று இன்ப வாழ்விற்கான வழி சமத்துவம். சகோதரத்துவம், சுதந்தரம் எய்தலே என்பதைத் தெளிவாக விளக்குவதோடு அம் மூன்றையும் ஒப்பு - உடற்பிறப்பு - விடுதலை எனப் பாரதிதாசன் நற்றமிழ்ப் படுத்துதலைக் காண்கிறோம்.

துன்பநிலையில் உழன்ற பிரெஞ்சு நாடு இன்ப வாழ்வில் குதித்த வரலாற்றைக் கட்டுரையின் நடுப்பகுதி விளக்குகிறது.

''பண்டைப்பிரெஞ்சு தேசம்'' - அவள் தன் முக்காலே மூன்று வீசம் பங்கு மக்களைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள். பிரபுக்கள், அரசச் செல்வாக்குடையவர்கள், எதேச்சாதிகாரிகள் என்று மக்கள்மேல் ஆழ உட்கார்ந்து கொண்டனர். பேதம் - விரோதம் - பந்தம் தலைவிரித்தாடின. சமூகம் செத்துப் போகாவிட்டாலும் சாக்காட்டுக்கு ஒரு நூல் இடைவெளி தான் பாக்கி.

'செத்துத்தான் போவதா?' சாவதற்கு முன் அவர்கள் தமக்குள் இக்கேள்வியைக் கேட்டுக் கொண்டார்கள். பேதம், விரோதம் இவைகளை விலக்கி ஒன்றுபடுவதா? இதற்குப் பிரெஞ்சு மக்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டனர். கட்டை விலக்க எழுவதா? உடனே 'ஆம்' என்றனர். ஏழை மக்கள் அனைவரும் அதிகாரச் செருக்குடையவர்க்கு ஓர் இறுதிக் கடிதம் தயாரித்தனர். இதை அவர்களின் புழுங்கிய உள்ளம் கொண்டு போயிற்று. ஏழைகளின் இவ்வெண்ணங்களை அதிகாரங் கொண்டவர்கள் கவனிக்கவே யில்லை.

'எமக்குள் பேதம் தீர்ந்தது! ஒப்புடையவர்களாய் விட்டோம். விரோதம் தீர்ந்தது. நாங்கள் அனைவரும் சகோதரர்; விடுதலை அடைந்தோம். இதற்குக் குறுக்கே படுக்கும் கிறுக்கர்களே திருந்துங்கள்! உம்மைக் காத்துக் கொள்ளுங்கள்'.

எழுச்சியுற்ற உள்ளம் இந்த நிலைக்கு ஏறியது. இந்த ஸந்நத்த நிலையை ஆளுந்திமிர் பிடித்தவர்கள் புறக்கணிக்கலாமா? அவர்கள் மதம்பிடித்த நித்திரையிற் கிடந்தனர். வீராவேசம் ஆயினர். அவர்கள் தமது நிலையிலிருந்து மறுமுனைக்கே ஒரே

அடியாய்க் குறிவைத்தனர். இடையில் நின்ற முடி - பணம் - செருக்கு - அட்டகாசம் தூள் தூளாய்ப் பறந்தன.

பிரெஞ்சு மக்கள் இன்ப வாழ்வில் குதித்தனர்.

மக்களின் உள்ளம் சமத்வநிலை சகோதரத்வ நிலை சுதந்தர நிலை அடையவேண்டும். வெற்றி கிடைக்கும். இன்ப வாழ்வடையலாம்...

நீயும் உன் உள்ளத்தும் வெளியிலும் பேதத்தை ஒழி, சமத்துவத்தை ஆக்கு! விரோதத்தை அகற்று. சகோதரத்துவத்தைக் கொள். பந்தத்தை நீக்கு! விடுதலை கொள்!... இம்மூன்று வகையான நல்ல நிலையை அடைந்தால் இன்பம் அடைவார்கள் என்பதைப் பிராஞ்சியர் பழஞ்சரித்திரம் நன்றாக விளக்கிக் காட்டுகிறது''.

கொள்கை விளக்கமாகத் தொடங்கிப் பிரெஞ்சு நாட்டுப் புரட்சிவரலாறாகத் தொடர்ந்து தனிமனித இன்பநிலைக்கும் இவையே துணை எனக் குறிப்பிட்டுச் செல்கிறது 'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் இக்கட்டுரை.

1935இல் பாரதிதாசன் ஆசிரியராக இருந்து நடத்திய 'ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்' என்னும் இதழும் இம்மூன்று கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் வெளிவந்தது. முதல் இதழின் மூன்றாம் பக்கம் முழுமையாகப் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் முசியே லேப்ரான் அவர்களின் படத்தைத் தாங்கியும் மூன்றாம் இதழ் பிரெஞ்சிந்திய 'கவர்னர் ஜெனெரால்' முசியே சொலோமியாக் அவர்களின் படத்தைத் தாங்கியும் வெளிவந்தன. இரண்டு படங்களின் மேற்புறத்திலும் 'சுதந்தரம் சமத்வம் சகோதரத்வம்' என்பது தலைப்பு முழக்கமாக இடம்பெற்றிருந்தது.

இவ்வாறு பாரதிதாசன் கவிதை, உரைநடையிலாகிய பல படைப்புகளிலும் பிரெஞ்சுப் புரட்சி உலகத்திற்கு வழங்கிய முப்பெருங் கருத்துகளை உள்ளடக்கிய முழக்கம் ஓங்கி ஒலிப்பதைக் கேட்கலாம்.

3.2. முதல் வகுப்புப் பாடப் புத்தகம்

பணியாற்றிய காலம் முழுவதும் தொடக்கப்பள்ளி ஆசிரியராகவே விளங்கிய பாரதிதாசன் ஒரு நாள் முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தைத் திறக்கிறார். அதன் முதல் பக்கத்தில் 'இவர் நமது ராஜா, இவர் இங்கிலாந்து நாட்டின் சக்கரவர்த்தி. இவர் பெயர்...'' என்ற பாடமும், இங்கிலாந்து நாட்டுப் பேரரசரின் படமும் பொறித்திருக்

கிறார்கள். பாரதிதாசனுக்கு மிகுந்த சினமேற்படுகிறது. ''மடையனுங்க'' என்ற அரிமாக்குரல் எழுப்புகிறார்; எதிரில் உள்ள சிறுவர்கள் அஞ்சி நடுங்குகிறார்கள்; தாம் குற்றம் புரிந்துவிட்டோமா என்று அய்யத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பாரதிதாசன் பாடநூலை மூடிவைத்துவிட்டுக் கரும்பலகையில் ஒரு நாயின் படத்தை எழுதிவிட்டுத் தம் இருக்கையில் அமர்கிறார். 'வகுப்பு நேரத்தில் இந்த இடத்தில் மட்டும் ஓசை கேட்கவில்லையே' என்று தலைமை ஆசிரியர் வருகிறார்.

கரும்பலகையில் நாயின் ஓவியம்! ஆசிரியர் எதையோ எழுதியபடி இருக்கையில், சிறுவர்கள் மட்டும் தலைமை ஆசிரியரின் வருகை கண்டு எழுந்து நிற்கிறார்கள். சுப்புரத்தினம் சிறிதும் கவலைப் படாமல் எழுதுகிறார்.

எப்படி, என்னவென்று கேட்பது என்றறியாது தலைமை ஆசிரியர் தடுமாறி நிற்கிறார். ''சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்கிற கொள்கையை உலகத்துக்கே வழங்கின பிரெஞ்சுக் குடியரசில், நம்ம பிள்ளைங்க, எடுத்த எடுப்பிலே படிக்கிற பாடம் என்ன தெரியுமா? ''இவர் நமது ராஜா'' ''இங்கிலாந்தின் சக்கரவர்த்தி'' ரொம்ப நல்லா இருக்குங்க. இப்படிப்பட்ட பாடத்தைச் சின்ன பசங்களுக்குக் கத்துக் கொடுத்தா குடியரசு நாட்டிலேயும் சக்கரவர்த்தி இருப்பார்னு நினைச்சுடுவாங்களே! நமது தேசம் இங்கிலாந்தென்று பாடம் பண்ணிடுவாங்களே! என்கிறார் தமிழாசிரியர் சுப்புரத்தினம்'' (க.கு.நெ.கு ப. 65-66)

ஆங்கிலேயராட்சி நிலவிய சென்னை மாநிலப் பகுதி மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட பாடநூல் அது. அதிலுள்ள பிரெஞ்சுப் பகுதிக்கு ஒவ்வாத கருத்துகள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படுவது பாரதிதாசனுக்கு உடன்பாடு அன்று. அவரின் எதிர்ப்பு சில நாட்களில் கல்வித்துறை அதிகாரிகளிடம் தெரிவிக்கப் பட்டு 'அரசு வணக்கப் பாடலைக் கற்பிக்க வேண்டியதில்லை' என்னும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. குடியரசு நாட்டில் முடியரசு வணக்கம் களையப்படுகிறது.

3.3. வறியவர்க்கும் கல்வி

பிரெஞ்சு நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மதக்குருமார்கள் பிடியிலிருந்தன. எல்லோர்க்கும் கல்வி புகட்டப்படவில்லை. செல்வக்குடியினர் மட்டுமே கல்வி பெறும் நிலை நிலவியது. ஏழைகளுக்கு அது

எட்டாக்கனியாக இருந்தது. இதனை எதிர்த்து அரசே கல்வி நிறுவனப் பொறுப்பை ஏற்கவேண்டுமென்று போராடியவர் ழுய்ல்பெரி (Jules Ferry). மதக்குருமார்களின் செல்வாக்கால் அப்போது நாடு கடத்தப் பட்ட ழுய்ல்பெரியே பின்னர் பிரெஞ்சு நாட்டின் குடியரசுத் தலைவரா னார். வறியவரும் கல்வி பெறும் வகையில் புதிய சட்டம் இயற்றிக் கல்வியைப் பொதுவுடைமையாக்கினார். மக்களின் போற்றுதலுக்கு உரியவரான ழுய்ல்பெரியின் நூற்றாண்டு விழா பிரெஞ்சு ஆட்சிப் பகுதி அனைத்திலும் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரியிலும் பாரதிதாசன் பணியாற்றிய பள்ளியில் 19.12.1932 அன்று நூற்றாண்டு விழா நடைபெற்றது. விழாவில் தமிழில் வாழ்த்துப்பா வழங்கும் பொறுப்பு பாரதிதாசனுக்கு அளிக்கப்பட்டது. பிரெஞ்சு மொழி, ஆங்கில மொழிகளில் வாழ்த்துப்பாக்கள் படித்தபின்னர் பாரதிதாசன் தமிழ்வாழ்த்துப்பாவை வழங்கினார்.

'வறியவர்க்கெல்லாம் கல்வியின் வாடை'

என்னும் முதலடியை எடுப்பாகவும் இனிமையாகவும் பாடினார். அதன் பொருள் தலைமை தாங்கிய ஆளுநருக்குப் பிரெஞ்சில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

'வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை'

என்னும் இரண்டாம் அடியை இசைத்தவுடன் கூட்டத்திலிருந்த மதக்குருக்களும் பழமை விரும்பிகளும் முகஞ்சுளித்தனர். பாடலின் மொழிபெயர்ப்பைக் கேட்ட ஆளுநர் ''கோந்தினியு! கோந்தினியு!'' என்றார். அதன் பொருள் 'மேலே தொடர்ந்து பாடட்டும்' என்பதாகும்.

'நறுக்கத் தொலைந்தது அந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை'

என்று பாரதிதாசன் தொடர்ந்து பாடினார். பாடலின் பொருளைக் கேட்டறிந்த தலைவர் உடனே துள்ளி எழுந்து ''ஆம்! ஆம்! அதுதான்! அதுதான்! ழுய்ல்பெரியின் உள்ளம் எதுவோ, அதை அப்படியே வெளிப்படுத்தும் பாடல் இதுதான்! இதுதான்! இவர்தான் கவிஞர்! இவர்தான் உண்மையான கவிஞர்! உயிரோட்டமுள்ள பாடலைப் பாடும் கவிஞர்!'' என்று பலபடப் பாராட்டிப் புகழ்ந்து கூறினார்.

பாரதிதாசன் பாடிய பாடலின், மேற்குறித்த நான்கு வரிகளி லமைந்த ஒரு கண்ணி மட்டுமே இப்போது கிடைத்துள்ளது. அப்பாடல் இதைப்போன்று ஆறு கண்ணிகளில் அமைந்ததாக அறிய முடிகிறது (புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், ப. 25-27).

பிரெஞ்சு நாட்டின் கல்வி வரலாற்றைப் பாரதிதாசன் நன்கு அறிந்திருந்ததையும் 'அனைவருக்கும் கல்வி' என்னும் கொள்கைக்கு மாறானவர்களைக் கடுமையாகச் சாடுவதையும் இப்பகுதி புலப்படுத்துகிறது.

பிரெஞ்சு நாட்டில் 'அனைவர்க்கும் கல்வி' என்னும் நிலை ஏற்பட்டதை வேறொரு இடத்திலும் (நா.தொ.ப. 230)

''கல்வியைப் பொதுமை யாக்கிக்
காட்டினாய் நல்வே டிக்கை!
செல்வரின் இல்லத் துள்ளும்
வறியரின் சிறுவீட் டுள்ளும்
நல்லறி வென்னும் பெண்ணாள்
மாறின்றி நண்ண லுற்றாள்
வல்லிருள் புறங்காட் டிற்று
வையகம் அறிந்த தன்றோ!''

என்று போற்றிப் பாடியுள்ளார்.

3.4. இருவேறு பட்டியல்கள்

'சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் முப்பெருங் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தது பிரெஞ்சுக் குடியரசு. பிரெஞ்சு ஆட்சி அக்கொள்கைகளுக்கு மாறான ஒரு போக்கைப் பிரெஞ்சிந்தியாவில் கடைப்பிடித்தது.

இங்கு இரண்டு வகையான வாக்காளர் பட்டியலும் வாக்குச் சீட்டுகளும் நடைமுறையில் இருந்தன. முதல் பட்டியலில் முதல் தரக் குடிமக்களாகக் கருதப்பட்ட மேலோர் இடம்பெற்றனர். பிரெஞ்சுக் காரர்களும் தங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் என்று பதிவு செய்து கொண்ட இந்தியர்களும் முதற்பட்டியலில் இடம்பெற்றனர்.

இரண்டாம் பட்டியலில் இரண்டாந்தரக் குடிமக்களாகிய கீழோர் - பிரெஞ்சு ஆட்சியின் கீழ் உள்ள பகுதிகளில் பிறந்த 21 அகவைக்கு மேற்பட்ட இந்தியர்கள் அனைவரும் இடம்பெற்றனர்.

முதல்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ எண்ணூறு (800) பேர் மட்டுமே. இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்களோ ஏறத்தாழ மூன்று இலட்சம் (3,00,000) பேர். இரண்டு பிரிவினருக்கும் சட்டமன்றப் பிரதிநிதித்துவம் சரிசமமாக இருந்ததால் சிறுபான்மையராகிய முதற்பிரிவினர் அரசின் அதிகச் சலுகைகளையும் பயன்களையும் அடைந்தனர். பெரும்பான்மையராகிய இரண்டாம் பிரிவினரை அவர்களால் அடக்கி ஆளமுடிந்தது.

பிரெஞ்சு ஆட்சிக்கும், பிரெஞ்சிந்திய மக்களுக்கும் இழிவை உண்டாக்கும், மக்களாட்சிக்கு எதிரான இப்போக்கைப் படிப்படியே எதிர்க்கத் தொடங்கினர். புகழ்பெற்ற வழக்கறிஞரான ஏ.செல்லான் அவர்களின் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர். பாவேந்தர் பாரதி தாசனும் எதிர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டார்.

இன்று வ.உ.சி. மேல்நிலைப்பள்ளியாக இருப்பது முன்பு எக்கோல் பிரிமியேர் பாடசாலை என்றழைக்கப்பட்டது. அதில் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் ழுய்ல்பெரியின் நினைவைப் போற்றும் ஆண்டுவிழா 1931 திசம்பர் 19ஆம் நாள் நடைபெற்றது. அவ்வாண்டு விழாவில் பிரெஞ்சு அரசின் ஆளுநர், அதிகாரிகள், ஆசிரியப் பெருமக்கள் முதலிய பலர் கலந்து கொண்டனர். பாரதிதாசன் எழுதிய 'சிந்தாமணி' என்னும் நாடகமும் அவ்விழாவில் நடத்தப்பெற்றது. நாடகக் கதைக்குத் தொடர்பில்லாத ஓர் தனிப்பாட்டுப் பாட ஏற்பாடு செய்திருந்தார் கவிஞர். அந்தப்பாட்டே பின்வருவது :

கூவாயோ கருங்குயிலே
யாவரும் ஒன்றென்றே - கூவாயோ
ஏவலர் இந்தியர்கள் இரண்டாம் தொகுதியென்றார்
இக்குறை நீங்கிற்றென்றே இனிதாய் நன்றே (கூவாயோ)
குவலயத்தில் சமத்வநிலை நாட்டவந்த
பிரெஞ்சுக் குடியரசின் நிழலில்
இவனுயர்ந்தோன் இவன் தாழ்ந்தோன் என்றுரைத்தால்
யார் சகிப்பார் அந்த அழலை?
கவிந்திருக்கும் ஒருகுடைக்கீழ் உள்ளவரில்
சிலர்க்கு நிழல் சிலர்க்கு வெயிலோ?
குவிந்த பொருளோ விஷமோ சமமாக
அடையாத தெவ்வகையிலோ?
மேலவர் என்றோர் தொகுதி மீதிப் பெயர்க்கோர் தொகுதி
மேன்மைக் குடியரசில் இதுவோ கதி?

இப்பாடல், 'இவனுயர்ந்தோன் இவன் தாழ்ந்தோன்'; 'சிலர்க்கு நிழல் சிலர்க்கு வெயில்' என்னும் வேறுபாடு, 'மேலவர் என்றோர் தொகுதி மீதிப் பெயர்க்கோர் தொகுதி' என்னும் பாகுபாடு உலகத்துக்கே சமத்துவநிலையை உணர்த்திய உயர்ந்த பிரெஞ்சுக் குடியரசில் நிலவலாமா என்ற கேள்வியை அழுத்தமாகக் கேட்கிறது. விழாவில் கலந்துகொண்ட மக்கள், உணர்ச்சியைத் தூண்டும் இப்பாடலைக் கேட்டுக் கையொலி செய்கின்றனர். பாடலின் கருத்து மொழி பெயர்த்துச் சொல்லப்படுகின்றது. விழாவிற்குத் தலைமை

தாங்கிய ஆளுநர் அட்ரியான் மூய்வானோன் அவர்களும் தன் முடிவுரையில் 'பிரெஞ்சு ஆட்சிக்கே களங்கம் விளைவிக்கும் இந்த வாக்காளர் வேறுபாட்டை ஒழித்துக்கட்ட என்னால் கூடியவரை முயல்வேன்' என்று உறுதி கூறுகிறார். கால ஓட்டத்தில் 1945 ஆகசுடு 23ஆம் நாள் அந்த வேறுபாடு களையப்படுகிறது. (ச.சிவப்பிரகாசம், பா.தா.கு 10.6.1967; முனைவர் அ.இராமசாமி ப. 75 - 77)

3.5. பேதம் கொண்டோர்க்குப் பிரான்சில் இடமில்லை

புரட்சிக் கவிஞர் கதைப்பாடலாக இயற்றி 1930இல் தனி நூலாக வெளிவந்தது 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'. கதைத் தலைவியாகிய வஞ்சியும், தலைவனாகிய குப்பனும் சஞ்சீவி மலையின் உச்சிக்குச் சென்று மூலிகையொன்றைப் பறித்துத் தின்கின்றனர். ஞாலத்து மக்கள் பேசும் பேச்சுகளை நற்றமிழில் கேட்கின்றனர். பிரெஞ்சுக்காரன், அமெரிக்கன், இங்கிலாந்து தேசத்தான் ஆகியோர் பேசும் பேச்சுகள் இவர்களின் செவிகளில் விழுகின்றன.

முதலில் பிரெஞ்சுக்காரன் பேசுவது கேட்கிறது. 'பேதம் கொண்டோர்க்குப் பிராஞ்சில் இடமில்லை' எனப் பிரெஞ்சுக்காரன் பேசுவதைக் கேட்போம். பிரான்சில் உண்டுறை விடுதி ஒன்று. அதில் இத்தாலியைச் சார்ந்த வெள்ளையன் ஒருவன் பத்து நாட்களாகத் தங்கி உணவருந்தி வருகிறான். அவனுக்கெதிரே இன்று ஒரு கறுப்பன் உணவருந்த உட்கார்ந்திருக்கிறான். இத்தாலிக்காரனால் அதைச் சகிக்கமுடியவில்லை. 'வேறு உணவு விடுதிக்குக் கறுப்பன் செல்வது நல்லது' என்கிறான். அவனை நோக்கிப் பிரெஞ்சுக்காரன்,

''இத்தாலிச் சோதரனே! என்ன மதியுனக்கே?
செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபே தங்கண்டாய்?
செவ்வை பெறும் அன்பில்லார் தீயபே தம் கொள்வார்
எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங் கீர்த்தி தாழ்வடைய ஒப்பார்கள்;
பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! போ!
பேதம் கொண்டோர்க்குப் பிராஞ்சில் இடமில்லை''

என்று அறிவுறுத்திப் பிரான்சை விட்டு அவனை வெளியேற்றுகிறான். இதனைக் கேட்ட வஞ்சியும் குப்பனும் நல்ல பிராஞ்சியர்க்கு நாக்குளிர வாழ்த்துரைத்தனர். உலக மக்களிடையே உயர்வு தாழ்வு கூடாது என்னும் உயர்ந்த கொள்கை - சமத்துவக் கொள்கை பிரெஞ்சுக் காரனால் வலியுறுத்தப்படுவது நோக்கத்தக்கது.

3.6. விக்டர்யூகோ [1802 – 1885]

பிரெஞ்சு இலக்கிய வரலாற்றில் மாபெரும் சாதனையாளராகப் பன்முக ஆற்றல் வாய்ந்தவராகக் கவிதை, நாடகம், புதினம் முதலிய இலக்கிய வகைகளில் தனது முத்திரையைப் பதித்தவர் விக்டர்யூகோ. மக்கள் கவிஞர் என்றும் மாபெரும் கவிஞர் என்றும் அவர் போற்றப் பெற்றவர். அவரைக் கவிஞர் என்னும் அடிப்படையில் பல இடங் களில் பாரதிதாசன் எடுத்துக்காட்டுவார்.

'பாரதியார் நாமம் வாழ்க' (கவி.ம.வெ.6) என்னும் பாடலில் தங்கள் சொந்த நாட்டில் மக்களுக்கான நல்ல செயல்களைச் செய்தவர்களில் ஒருவராக விக்டர்யூகோ குறிப்பிடப்படுகிறார். திருச்சி வானொலியில் பாரதி பாட்டரங்கத் தலைமைக் கவிதையில் (1946),

செல்வர் சில்லோர் நல்வாழ்வுக்கே
எல்லா மக்களும் என்ற பிரான்சில்
குடிகள் குடிகட்கெனக் கவி குவிக்க
விக்டர்யூகோ மேவினான் அன்றோ?

என்று பிரெஞ்சு நாட்டு வரலாற்றுப் பின்புலத்தோடு விக்டர் யூகோவின் தோற்றமும் சாதனையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'தமிழச்சியின் கத்தி' என்னும் கதைப்பாடலில், சுபேதார் சுதரிசன் சிங்குவின் சூழ்ச்சியை அறியாமல் திம்மன் தன்மனைவி சுப்பம்மாவைக் காளைமாட்டு வண்டியில் செஞ்சிக்கோட்டைக்கு அழைத்துச் செல்வதைக் கவிஞர் பாடும்போது,

'நாளைநடப் பதைமனிதன் அறியான்', என்று
நல்லகவி விக்தர்யுகோ சொன்னான்'

என்று தொடங்குகிறார். அடுத்துவரும்கேடுகளை அறியாமல் அலுவல் கிடைக்குமென்னும் ஆசையில் மனைவியை அழைத்துச் செல்லுகின்ற திம்மனின் நிலைமையைப் பொருத்தமுறக் காட்டு வதாக இப்பகுதி அமைந்துள்ளது. விக்டர்யூகோவின் கருத்துகளில் பாரதிதாசனுக்கிருந்த ஈடுபாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் பாரதிதாசன் 'பிறமொழியிலுள்ள பாட்டுகளைத் தமிழ்ப் பாட்டுகளாக்கித் தருக' என்று கவிஞர்களுக்கு விடுத்த வேண்டு கோளை ஏற்று அவர் ஆசிரியராக இருந்த ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம் இதழில் விக்டர் யூகோவின் ''ஏழைகளுக்கு', 'காதல்' ஆகிய இரு பாடல்களும் முறையே மு.த.வேலாயுதன், எஸ்.நடனசபா பதி ஆகியோர்களால் தமிழாக்கம் செய்யப்பெற்று வெளியீடு 3, 4 & 5 ஆகியவற்றில் வெளியாகியிருப்பது ஈண்டு சுட்டத்தக்கது.

3.7. உரிமை உணர்வு

இன்னொரு உணவு விடுதிக் காட்சி! ஓர் அறையில் ஒரு தமிழனும் ஒரு பிரான்சு நாட்டுக்காரனும் தங்கியிருக்கின்றனர்.

தமிழன் கமழ் புனல் ஆடி, அமிழ்துணவு உண்டு, தூய உடை உடுத்திச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு பார்த்துக் கொண்டிருக் கிறான். அவன் எதிரில் கிழிந்த உடையணிந்துள்ள பிரெஞ்சுக்காரன் அரைவெள்ளி கொடுத்துக் காற்கோப்பை உணவை வாங்கி உண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். பிரெஞ்சுக்காரனை நோக்கித் தமிழன் சுவையில்லா உணவைத் துய்க்கும் பழக்கம் பிரெஞ்சுக் காரரிடம் உண்டோ' என்று கேட்கிறான். அதற்குப் பிரெஞ்சுக்காரனின் மறுமொழியைப் பாவேந்தர் காட்டும் வகையில் (குயில் 27.1.59) காண்போம்:

''தமிழனை நோக்கிப் பிரான்சினன் சாற்றினான்;
உயர்சுவை உணவை உண்ப தென்பது
தமிழகத் தமிழ ரிடத்திலும் உண்டோ?
பின்னும் பிரான்சினன் பேசுகின்றனன்;
எரிச்சல் உறுவதேன் இன்தமிழ் நண்பரே
பிறந்தஉம் நாட்டைப் பிறன்ஆள் கின்றான்;
வாழ்க்கையில் சுவையும் வாய்ப்ப துண்டோ!
வாழ்க்கைச் சுவையிலான் வாய்ச்சுவை யுடையனோ!
இன்றுநீர் உண்டதில் என்சுவை கண்டீர்!
கமழ்புனல் ஆடிநீர் அமிழ்துண வுண்டீர்;
நீர்ஓர் அடிமை என்பதை நினைந்திரோ!
என்று தமிழனை எண்ணத்தில் ஆழ்த்தினான்''

வாய்ச்சுவையைப் பற்றிப் பேசும் தமிழனிடம், 'நீர் வாழ்க்கைச் சுவையிலாதவர்; உம் நாட்டைப் பிறன் ஆள்கின்றான், நீர் அடிமை என்பதை உணர்ந்திரா?' என்று வினவுகிறான் பிரெஞ்சுக்காரன். அதனால் அடிமைத் தமிழனுக்குக் கமழ்புனல் கழிபுனல் ஆனது. அமிழ்துணவு வாந்தியெடுக்கத்தக்க அருவருப்புணவாய் மாறியது. அறிவுலகம் தமிழனைக் கான்றுமிழ்ந்தது எனப் பாடலை முடிக்கிறார் பாவேந்தர். கிழிந்த உடைப் பிரெஞ்சுக்காரன் அடிமைநிலையை உணர்த்தி உரிமை உணர்வைத் தூண்டுபவனாகப் படைக்கப்பட்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

3.8. தொழிற்சங்க உரிமைப் போர்

பாரதிதாசன் உள்ளம் எளிய மக்களைத் தன்னுள் இணைத்துக் கொண்ட உள்ளம்; அவர்களின் களிப்பையும் கண்ணீரையும்

ஏற்றத்தையும் இறக்கத்தையும் பாடி எழுச்சியூட்டிய உள்ளம். அதிலும் உழைக்கும் மக்கள் அவர் பாடல்களில் இடம்பெற்றதைப்போல் அதற்குமுன் தமிழிலக்கியத்தில் இடம்பெற்றதில்லை. வண்டிக் காரன், மாடு மேய்ப்பவன், பாவோடும் பெண்கள், தறித் தொழிலாளி, உழவன், உழத்தி, ஆலைத்தொழிலாளி, கோடாலிக்காரன், கூடைமுறம் கட்டுவோர், பூக்காரி, சுண்ணாம்பு இடிக்கும் பெண்கள் என எளிய மக்களின் உள்ளத்துணர்வுகளை - ஏழை மக்களின் இன்ப துன்பங்களை இனிமையும் எழுச்சியும் மிக்க பாடல்களாக்கினார் பாரதிதாசன்.

''இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
உலகம் உழைப்பவர்க்கு உரியதென் பதையே''

என்று உழைக்கும் மக்களுக்கு உலகை உரிமையாக்கினார். (மு.தொ.) ''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான். அவன் காணத் தகுந்தது வறுமையாம் பூணத் தகுந்தது பொறுமையாம்'' எனக் கேள்வி கேட்கிறார்.

பாரதிதாசன் 1932இல் அகில பிரெஞ்சிந்திய ஆரம்ப ஆசிரியர் ஐக்ய தேசீய சங்கத்தின் தனரக்ஷகர் (பொருளாளர்) பொறுப்பு வகித்தார்.

''சங்கங்களால் நல்ல
சங்கங்களால் மக்கள்
சாதித்தல் கூடும் பெரும் பெரும் காரியம்''

எனத் தொடங்கும் 'சங்கங்கள்' என்னும் தலைப்பில் அமைந்த பாடலை 16.09.1934 மணிக்கொடி இதழில் எழுதினார்.

தொழிலாளர்தம் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் பாரதிதாசன் புதுவையின் தொழிலாளர் இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். இதுபற்றிப் பெரியவர் சு.ர.சுப்பிரமணியன், ''புதுச்சேரி தொழிலாளர் இயக்கத்தைத் தொடக்கத்தில் இருந்து பாரதிதாசன் ஆதரித்து வந்தார். ஆலைத் தொழிலாளர்கள் பலர் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். கைத்தறி நெசவாளர்கள் பலர் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆலைத் தொழிலாளர்களுள் ரேடியர் மில் தொழிலாளர்களின் தலைவர் திரு. சுந்தரராசு உறுதிமிக்க திராவிடக் கழகத்தவர். அரங்கேசன் என்பவரும் அப்படித்தான். திரு. அரங்கேசன் அடிக்கடி பாவேந்தரைச் சந்தித்து இயக்க நிலைமையை

எடுத்துக்கூறுவார். தொழிலாளர் இயக்கத்தை எதிர்த்து வந்தவர்களைப் பாவேந்தர் பல வருடங்களாக எதிர்த்து வருகிறார்'' என்று குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது (கவி.மண் 1983 ஆவணி புரட்டாசி).

'தறிநெய்வோர் தவிப்பு'ப் பற்றிப் பாரதிதாசன் பாடி, நூல் வடிவம்பெறாத பாடல்கள் உள்ளன. 1935இன் முற்பகுதி! நெசவாலைகள் மூடப்பட்டுத் தொழிலாளர்கள் உணவின்றி வாட வேண்டிய நிலைமை. 'உயர் இலாபம்' அடையும் நோக்கத்தில் ஆலைகளை மூடி வேறு வாணிகம் செய்ய முடிவெடுத்த முதலாளிகளைச் சாடித் தொழிலாளர்களின் இரங்கத்தக்க நிலையை எடுத்துக் கூறுகிறார் பாரதிதாசன். 'பால், பழம், காணாது பழங்கூழே உண்டு வந்தோம். அதற்கும் வழியில்லாமல் போனதே' என்று அவலமுறும் தொழிலாளி, தன் இல்ல நிலைமையை எடுத்துரைத்து, ஆலையை மூடும் முதலாளி கோவில் திருவிழாவைப் பெருஞ்செலவில் கொண்டாடுவதைக் கேள்விக் குள்ளாக்குகிறான்.

விழிதனில் நீர்பெருக எம்வீடு போனவுடன்
அழுகின்ற பெண்டுபிள்ளை அலறும்குழந்தைகளும்
பொழுதெல்லாம் பசிவாதை போக்க வகையுமின்றிப்
புழுவாய்த் துடிதுடித்துப் புரளுகின்ற கோலத்தில்
கழுதை மகனே கண்ணாடி விமானம் காட்ட நினைக்கின்றனை

என்று 'ஆர்க்க உழைத்தவரின் அவதியைப் பார்க்காமல் தேர்செய்து வாகனங்களுடன் திருவிழாக்கள் கொண்டாடும்' முதலாளிகளைக் கடுமையாகச் சாடுவது குறிப்பிடத்தக்கது. (க.கு.நெ.கு.ப. 215-216)

புதுவைத் தொழிலாளர் இயக்கத்தின் முதன்மைக் குறிக்கோள் தொழிற் சங்கங்கள் அமைத்துக் கொள்ள உரிமை கோருவதாக இருந்தது. காரணம் பிரெஞ்சுப் புதுவையில் தொழிற்சங்கம் அமைக்க முன்வருபவர்களுக்கு இரண்டு ஆண்டுச் சிறைத்தண்டனை அளிக்கும்படியான சட்டம் நடைமுறையிலிருந்தது. அதனை எதிர்த்துத் தொழிலாளர் போராட்டம் நடத்தினர். உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 1936ஆம் ஆண்டு சூலை 30ஆம் நாள் காவல்துறையினர் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் நடத்திக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 12 பேர் உயிரிழந்தனர்.

''சக்தி வாய்ந்த போராட்டமும் அதனை அடக்க அரசு எடுத்த கடுமையான அடக்குமுறையும் துப்பாக்கிச் சூடும் மக்களின் மகத்தான தியாகமும் சிறிய புதுச்சேரியில் புதிய புரட்சிச்

சூழ்நிலையை உண்டாக்கி விட்டது. ஆளுங்கட்சியினர் இராஜிநாமா செய்யவேண்டும் என்று மகாஜனங்கள் கோரிக்கை விட்டனர். ஆயிரம் சைக்கிள்களில் இளைஞர்கள் ஒவ்வொரு சட்டசபை அங்கத்தினர் வீட்டுக்கும் போய் இராஜிநாமா கேட்டனர். என்ன நடக்குமோ துப்பாக்கிச் சூடு நடக்குமோ என்றுகூட மக்கள் அச்சமும் பீதியும் கொண்டவர்களாய் அதே நேரத்தில் இராஜிநாமாவைப் பெற்றாக வேண்டும் என்ற உறுதியும் கொண்டிருந்தனர்.

ஊர்வலம் நடந்த மறுதினம் மகாஜனக் கட்சியின் நிர்வாகக்குழு திவான் கந்தப்ப முதலியார் வீதியில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தில் கூடியது. முப்பது சட்டசபை அங்கத்தினர்களின் இராஜிநாமாக் கடிதம் தோழர் சுப்பையா கைக்கு வந்தது. பாவேந்தருக்கு மகிழ்ச்சி என்றால் போதாது. கூட்டத்தில் அவரால் உட்கார முடியவில்லை. எழுந்து ''எத்தனை வருஷமா? எத்தனை வருஷமா? எத்தனை வருஷமா? என்னென்ன பாடுபட்டிருப்போம். அதில் எல்லாம் ஒன்றும் வரவில்லை. இதோ பாத்தியா'' என்று தோழர் சுப்பையா கையிலிருந்த இராஜிநாமாக் கடிதத்தை வாங்கிக் கூட்டத்துக்குக் காட்டினார். மகிழ்ச்சியால் பேசிக்கொண்டே கூட்டத்தைச் சுற்றி வந்து கொண்டே பேசினார். அதுபோல் தன்னை மறந்து மகிழ்ச்சியில் கூத்தாடியதை வேறு எங்கும் பார்த்திருக்க முடியாது. அதை அவரது அரசியல் வெற்றியாகவே பாவித்தார்'' (சு.ர.சு., கவி.மண் 1983 ஆவணி - புரட்டாசி)

இச்சித்திரம் பிரெஞ்சு ஆட்சியின் போக்கை எதிர்த்து நின்று தொழிலாளர் தோழனாகப் பாவேந்தர் துலங்கியதை நன்கு படம் பிடிக்கிறது.

3.9. தொழிலாளர் சட்டத் தமிழாக்கம்

புதுவைப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் வ.சுப்பையாவும் வழக்கறிஞர் சவரிநாதனும் தொழிலாளர்கள் சார்பில் பிரெஞ்சு அரசோடு பேசுவதற்குப் பாரிசு நகர் சென்றனர். பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

பாரிசில் பிரெஞ்சுக் குடியேற்றப்பகுதிகளின் அமைச்சர் மௌரீஸ் முத்தே அவர்களைச் சுப்பையா சந்தித்துப் பேசுகிறார். அமைச்சர், பிரெஞ்சு இந்தியத் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சட்டதிட்டங்களைப் பிரெஞ்சு அரசு உருவாக்கிவிட்டதாகவும் விரைவில் அரசு ஆணையாக அறிவிப்பதாகவும் கூறுகிறார். இனிச் சுப்பையாவின் வாய்மொழியிலேயே நடந்தவற்றை அறிவோம்:

''அவ்வண்ணமே, 1937 ஏப்ரல் 6ஆம் நாள் பிரெஞ்சு அரசு ஆணை (Decree) ஒன்றைப் பிறப்பித்தது. அமைச்சரக அலுவலகத்திலிருந்து இந்த ஆணையின் பிரதி ஒன்றைப்பெற்றேன். மதாம் லூயிஸ் மொர்ரேன் அவர்களின் உதவியால், ஓரிரு தினங்களில் அந்த ஆணையின் வாசகங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்தேன்... புதுச்சேரி தொழிலாளர் வர்க்கம் நடத்திய தீரம்மிகு போராட்டங்களும், அர்ப்பணித்த விலை மதிப்பில்லா தியாகங் களும், பிரெஞ்சு அரசை நெருக்கி பிழிந்து தொழிலாளர் கோரிக்கை களை ஏற்க வைத்தன. இறுதியில் நல்ல பலனும் கொடுக்க வைத்தன. இத்தகைய ஆணை பிறப்பிக்கப்பட்ட செய்தியைப் புதுச்சேரி நண்பர்களுக்கு உடன் நான் தந்தி மூலம் தெரிவித்தேன்... அமைச்சரது ஆணையின்கீழ் 1937 ஏப்ரல் 6ஆம் தேதியிட்டு, வெளியிடப்பட்ட தொழிலாளர் நலச்சட்ட ஆணையானது, புதுச்சேரி தொழிலாளர் வர்க்கம் எட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும். புதுச்சேரி வரலாற்றில் இது ஒரு மைல்கல். அத்துடன் தேசிய விடுதலைக்கான அரசியல் இயக்கம் ஒன்று உதயமாவதற்கும் இதுவே அடித்தளமாய் அமைந்தது என்பது வரலாற்றை ஆழ்ந்து பார்ப்பவர்களுக்குத் தெளிவாய் விளங்கும்''
(பிரெஞ்சு இந்திய விடுதலைஇயக்க வரலாறு ப. 163)

புதுவைக்குத் தொழிற்சங்க உரிமை வழங்கும் புதிய முன்னேற்றமான பிரெஞ்சிந்தியத் தொழிலாளர் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. தொழிற் சங்கங்கள் தோன்றின.

சுப்பையா அவர்களால் புதுச்சேரிக்கு அனுப்பப்பட்ட பிரெஞ்சு மொழியிலமைந்த அச்சட்டங்களின் நகல் ஒன்றைத் தமிழாக்கும் பணியில் பாரதிதாசன் முழுமையாக ஈடுபட்டார். இதனைப் பெரியவர் சு.ர.சுப்பிரமணியம்,

''மேற்படி சட்டங்களின் நகல் ஒன்றைத் திரு. சுப்பையா அனுப்பி வைத்தார். அதனை மக்கள் புரிந்துகொள்ள ஆவல் கொண்டனர். அப்போது இரவு பகலாகப் பாவேந்தர் அதனைத் தமிழாக்கிக் கொடுத்தார். உடன் அரங்கராமாநுஜம், வாத்தியார் கண்ணுசாமி ஆகியோர் உதவிபுரிந்தனர். சட்டத்தைத் தமிழில் செய்தால் வறட்டுப்பாறையாக விருக்கும். பாரதிதாசன் தமிழாக்கம் செய்ததால் அது தனிச்சுவையோடிருந்தது என்பேன். அரும்பாடு பட்டுக் கிடைத்த அந்த உரிமையை மக்களுக்கு வழங்குவதில் அவருக்கு அளவிலாத மகிழ்ச்சி''

(கவி.மண். 1983 ஆவணி - புரட்டாசி) என்று குறிப்பிடுவது நோக்கத் தக்கது. பிரெஞ்சுமொழி நன்கு தெரிந்தவர்களின் துணையைக் கொண்டு அழகிய தமிழில் பாவேந்தர் ஆக்கம் செய்தார்.

''ஏப்ரல் 6ஆம் நாள் தொழிற்சங்கச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது நான் பாரிசில் இருந்தேன். சட்டத்தின் பிரதியை புதுவைக்கு அனுப்பி வைத்தேன். அந்தச் சட்டத்தை மொழிபெயர்த்து நல்ல தமிழில் அமைத்து வெளியிடுவதற்கு பாவேந்தர் உதவினார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்''

என்று வ.சுப்பையா அவர்களே குறிப்பிட்டுள்ளார். (வ.சுப்பையா வின் தனிப்பேட்டி, 'பாலம்' இலக்கிய மாத இதழ், சூலை 1990, ப.19)

இம்மொழிபெயர்ப்புப் பற்றிப் புதுவையிலிருந்து வெளிவந்த 'சுதந்திரம்' இதழில் (22.12.1937) இடம்பெற்ற பின்வரும் விளம்பரம் இத்துடன் இணைத்து எண்ணத்தக்கது.

''பிரஞ்சிந்திய தொழிலாளர் சட்ட திட்டங்கள்

1937-ம் ஆ ஏப்ரல் மீ 6-ம் உ கொலோனி மந்திரியால் தெக்ரேயின் மூலம் செய்யப்பட்ட ''தொழிலாளர் சட்டதிட்டங்களின்'' தமிழ் மொழிபெயர்ப்பு 36 பக்கங்கள் கொண்டது. விலை அணா 1''

3.10. பாரிசு விடுதலை

இரண்டாம் உலகப்போரில் பிரான்சை அடிமைப்படுத்திய இட்லரை எதிர்த்துப் பிரெஞ்சுக்காரர்கள் இயக்கம் நடத்தினர். பின்னாளில் பிரான்சின் ஐந்தாம் குடியரசுத் தலைவராகத் திகழ்ந்த தி-கால் சார்லசு (De-gaulle Charles 1890-1970) முதல் உலகப்போரில் கலந்து கொண்டவர்; சிறைப்பிடிக்கப்பட்டவர். போர் நுணுக்கங் களையெல்லாம் அறிந்தவர். அத்தொடர்பில் பலநூல்கள் எழுதியவர். தி-காலின் தலைமையில் அமைந்த பிரெஞ்சுக்காரர் களின்படை இட்லரை எதிர்த்துப் போரிடுகிறது. 1944 ஆகஸ்டு 25ஆம் நாள் பாரிசு நகரத்துக்குள் வெற்றிகரமாக நுழைந்துவிடுகிறது. மறுநாள் அங்கு வெற்றி அணிவகுப்பு நடத்தப்படுகிறது. எதிரிகளிடமிருந்து மீட்கப் பட்ட பாரிசு நகரில் தற்காலிக அரசு அமைக்கப்படுகிறது. அந்த அரசை அக்டோபர் மாதத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, சோவியத்து ஒன்றியம் ஆகியவை அங்கீகரிக்கின்றன.

பாரிசு விடுதலை பெற்றதை வரவேற்றுப் புதுவையில் ''பாரிசு விடுதலை விழா'' கொண்டாடுகின்றனர். 1.10.1944இல் ஆளுநர் லூய் பொன்வேன் என்பவர் தலைமையில் நடைபெற்ற விழாவில் விடுதலையை வாழ்த்தித் திகாலைப் போற்றி நீண்டதொரு கவிதை பாடுகின்றார் பாவேந்தர் (நா.தொ.ப.229-232).

''வெண்ணிலா முகிலி னின்று
மீண்டது போலே மீண்டாய்

எண்ணிலா மகிழ்ச்சி யூட்டும்
எழில்பாரீஸ் நகரே நீதான்!
கண்ணிலா இட்லர் நின்பால்
கால் வைத்தான்! தோல்வி பெற்றான்!
மண்ணுளார் துயரி னின்று
மீண்டனர். மகிழ்ச்சி யுற்றார்.''

என்று தொடங்கும் அப்பாட்டில் குடியாட்சியின் மாண்பையும், எல்லோர்க்கும் கல்வி எனும் பொதுமையையும் உலகுக்கு உணர்த்திய பிரெஞ்சு நாட்டின் பெருமையைக் கூறி,

''வையத்து மக்கள் உன்சீர்
மறக்கிலார்! அவர்கள் நீண்ட
கையெலாம் உன்னைக் காக்கக்
கவிந்திடும் என்ற செய்தி,
பொய்யெலாம் உருக்கொண் டுள்ள
பகைவர்க்குப் புரிய வில்லை!
மெய்! பரீஸ் மீண்ட திந்நாள்!
நாளைமீள் வாய் பிரான்சே!''

என்று வருங்காலத்தில் பிரான்சு முழுமையும் விடுதலைபெறும் எனக் கட்டியங் கூறுகின்றார். இப்பாடலின் பிற்பகுதியில், உறுதியாகப் போராடி வெற்றிக்கு வழிவகுத்த தலைவர் திகாலை,

''நிலைகலங்காத்தெகால் சீர்
நிகழ்த்தவோ பிரான்சு நாடே?''

எனப் புகழ்கிறார். இறுதியில் பிரான்சை ஆதரித்த சோவியத் ஒன்றியம், இங்கிலாந்து, அமெரிக்கா, சீனம் ஆகிய நாடுகளுக்கு நெஞ்சு நிறைந்த நன்றி தெரிவிக்கிறார் பாரதிதாசன். பத்து அறுசீர் விருத்தங்களால் ஆகிய இப்பாடல் உலக வரலாற்றில் பிரெஞ்சு நாட்டுக்குள்ள தனிச்சிறப்புகளை வலியுறுத்துவதோடு, உரிமைப் போரைத் தலைமைதாங்கி நடத்திய திகாலைப் (தெகோலை) பாராட்டிப் புகழ்ந்து, போரில் துணைசெய்யும் உலக நாடுகளை நன்றியொடு நினைவு கூர்ந்து 'இன்று பாரிசு மீண்டது, நாளை பிரான்சு மீளும்' எனக் கட்டியங்கூறி ஒரு வரலாற்று ஆவணப் பதிவேடாக விளங்குகின்றது.

3.11. பிரெஞ்சியரின் மொழிப்பற்று

தமிழர்களின் ஏமாளித்தனத்தை, மொழிப்பற்றின்மையை உணர்த்தும் வகையில் 24.11.59 குயில் இதழில் (ப.2, 3) ஆசிரியவுரை

எழுதினார் பாரதிதாசன். ''நேரு, தருமபுரம், பத்தவச்சலம் - மூன்று முட்டுக்கட்டைகள்'' என்னும் தலைப்பில் அமைந்த ஆசிரியவுரையின் தொடக்கம் பொது உண்மைகளைப் பேசுவதோடு குறிப்பாகப் பிரெஞ்சு மக்களின் மொழிப்பற்றை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. பிற்பகுதி தமிழர்களின் மொழிப்பற்றின்மையைச் சாடுகிறது. முற்பகுதி இதோ:

> ''மன்னன், மதகுரு, பணக்காரர்! - நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு இம்மூன்று வகையாரும் முட்டுக்கட்டைகள். சில இடங்களில் சிலகாலங்களில் தவிர எங்கும் எப்போதும் இப்படி! மன்னன் மதகுரு பணக்காரர் என்பவர் பெயர்கள், நிலைமைகளால் சிறிது வேற்றுமை உடையவர்களாய் இருக்கலாம், கொள்கையால் இம்மூன்று வகையாரும் பிரிக்கமுடியாத இரும்புக்குண்டு. பிரான்சு மக்கள் ஒரு காலத்தில் புரட்சியை எதிர்பார்த்துப் புழுவாகத் துடித்தார்கள், இவர்களை வருத்திக் காலடியில் மிதித்துக் கொண்டிருந்தவர்கள் அக்கால அரசன் மட்டுமல்லன்; குருக்களும், செல்வர்களுமாவார். இம்மூன்று வகையாரும் கொண்ட ஒற்றுமையை அன்றுதான் உலகம் அறிந்தது.
>
> இம்மூன்று தீய ஆற்றல்களையும் ஒழித்த பிறகுதான் நாடு மக்கள் கைக்கு வந்தது. அப்பாடா என்று மக்களால் மூச்சுவிட முடிந்தது. உருசிய வரலாற்றாலும் இதை அறியலாம். இம்மூன்று முட்டுக் கட்டைகளையும் சிக்கற ஒழித்ததன்பேர்தான் பொதுவுடைமை! தம் தாய்மொழியாகிய பிரான்சுமொழியைச் சீர்திருத்தம் செய்வதில் அக்கரை செலுத்திய பிரான்சுமக்கள், கோயிலில் இலத்தீன் மொழி வழிபாட்டு முறை மேற்கொள்ளப்பட்டது கண்டு சீறினார்கள். பிரான்சு மொழியிலே வழிபாட்டு முறைகள் அமைய வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். பாதிரிமார்கள் எதிர்த்தார்கள். ஆளவந்தார்கள் பாதிரிகளுக்கே ஒத்து ஊதினார்கள். செல்வர்கள் தாய் மொழியையே எதிர்த்தார்கள். என்ன நடந்தது? பொதுமக்கள் நேரடி நடவடிக்கை தொடங்கினார்கள். ஆளவந்தார் அடக்குமுறை தொடங்கினார்கள். பொதுமக்கள் சும்மா விடவில்லை. கோரில்லாப் போர்முறையை மேற்கொண்டார்கள்.
>
> நொறுங்கின மூன்று வகை முட்டுக்கட்டைகளும், விரைந்து விரைந்து கோயில் வழிபாட்டு முறை, திருமண நிகழ்ச்சி முறை அனைத்தும் பிரான்சு மொழியில் மாற்றப்பட்டது. மக்கள் ஆவலைப் பின்னோக்கித் தள்ளுகின்ற - பின்காலால் உதைக்கின்ற மன்னன், மதகுரு, பணக்காரன் என்ற மூன்று கழுதைகளும் புனல் வைத்துப் பாடலாம். ஒலி பெருக்கியிற் பேசலாம். மெல்லக்கத்த

லாம். எப்படியானாலும் இவை ஒரே குரல் உடையவை என்பதைத் தமிழ்மக்கள் கருதுவதே இல்லை''

இவ்வாசிரியவுரைப் பகுதி உலக வரலாற்றில் முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டையாகவும் மக்களை ஒடுக்குவதில் ஒற்றுமையாக வும் இருக்கும் முக்கூட்டினரை அம்பலப்படுத்துகிறது. பிரெஞ்சு நாட்டில் பிரெஞ்சு மொழிக்கு உரிய இடம் அளிக்கப்படாமல் இருந்ததையும் அதற்குக் காரணமானவர்களையும் அந்நிலையை மக்கள் கிளர்ந்தெழுந்து மாற்றியமைத்ததையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. இந்த வரலாற்றிலிருந்து தமிழ் மக்கள் தெளிவு பெறவேண்டும் என்னும் பாரதிதாசன் கவலையை நன்கு புலப்படுத்து கிறது.

3.12. புதுவை இணைப்பு இயக்கம்

புதுச்சேரிப் பகுதி கி.பி. 1672 முதல் 1954 வரையில் ஏறத்தாழ 282 ஆண்டுகள் பிரெஞ்சுக்காரர்களின் பிடியிலிருந்தது. பிரெஞ்சுப் பிடியிலிருந்து விடுதலை பெற்று இந்தியாவோடு இணையவேண்டும் என்னும்இணைப்பு இயக்கம் 1946இல் மிகத் தீவிரமடைந்தது. பிரெஞ்சு ஆட்சிப் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்க வேண்டு மென்னும் நோக்கத்துடன் 1946இல் பிரெஞ்சு இந்தியக் காங்கிரசு உருவாக்கப்பட்டது. 1947இல் பிரெஞ்சு இந்திய மாணவர் காங்கிரசு இணைப்பு வேண்டித் தீர்மானம் நிறைவேற்றியது. 1948 சனவரியில் பிரெஞ்சு மக்கள் மாநாடு என்னும் அமைப்பு பிரெஞ்சுப் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்கவேண்டும் என்று வலியுறுத்தி யது. பொதுவுடைமை இயக்கத்தினரும் பிரெஞ்சு ஆட்சிப்பகுதிகள் இந்தியாவுடன் இணைவதை மக்கள் ஏற்க வேண்டும் என்றனர்.

இவ்வாறு இணைப்பு இயக்கம் வளர்ந்து வரும் நிலையில் எதிர்ப்பு இயக்கம் நடந்துகொண்டே இருந்தது. பிரெஞ்சு ஆதரவுக் கட்சியாக விளங்கிய பிரெஞ்சு இந்திய சோசியலிசுடு கட்சி 1948 அக்டோபரில் புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் ஆகிய பகுதிகளில் நடந்த நகராட்சித் தேர்தல்களில் மாபெரும் வெற்றி பெற்றது. புதிய நகராட்சி உறுப்பினர்கள் பிரான்சு அளிக்கவந்த சுயாட்சியை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தனர். அந்த முயற்சியை இந்திய அரசு தடுத்துவிட்டது. புதுச்சேரி இந்தியாவுடன் இணைந்தபின் அதற்கு ஒரு தனி நிலை மதிப்பும் பொருளாதார உதவியும் அளிப்பதாக இந்திய அரசு உறுதி கூறியது.

இணைப்பு இயக்கத்திற்குப் பாரதிதாசன் முழு ஆதரவைத் தந்தார். ''ஒதியஞ்சாலை மைதானத்தில் ஒரு பெருங்கூட்டத்தில்

பேசினார். பரந்த இந்தியாவில் காந்திஜியும் நேருவும் போல - புதுச்சேரிக்கு புருஷோத்தம ரெட்டியாரும் - சுப்பிரமணியமும் தலைவர்கள் என்று பாராட்டினார். ஒரு காலகட்டத்தில் அந்த விடுதலை இயக்கத்திற்கு மிகவும் சக்திவாய்ந்த எதிர்ப்பு வந்தபோது பாவேந்தர் எங்களை முன்வந்து ஆதரித்தார்'' என்று எஸ்.ஆர்.சுப்பிர மணியன் குறிப்பிடுவார். (கவி.மண் 1983-84 கார்த்திகை - மார்கழி)

தொடக்கத்தில் இணைப்பு இயக்கத்தை ஆதரித்த பாரதிதாசன் பின்னர் அதனை எதிர்த்து இயக்கம் நடத்தத் தொடங்கினார். 'இந்திய யூனியனில் சேர மறுப்போர் சங்கம்' அமைக்கப்பட்டது. 'குயில் தினசரி' எனும் நாளிதழ் ஒன்றை அதற்காகவே நடத்தினார். 13.09.1948இல் தொடங்கிய அவ்விதழ் 26 நாட்களே வெளியிடப் பட்டது. பெரும்பாலும் நான்கு பக்க அளவில் வெளிவந்த அவ்விதழ் பாரதிதாசன் படைப்புகளையே தாங்கி நின்றது.

'உடனடியாகப் பிரெஞ்சிந்தியா இந்திய யூனியனில் சேரக் கூடாது' என்பதும் 'இந்திய யூனியனில் சேர மறுத்தபின் அது தன் முழு விடுதலைக்குரிய இடையூறுகளைக் களைந்து கொள்ள வேண்டும்' என்பதும் அவ்விதழில் வலியுறுத்தப்பட்டன. இந்திய ஒன்றியத்தில் இணைவதால் நன்மையென்பாரைத் தாக்கி, இந்தியாவோடு இணைந்த காசுமீர், ஐதராபாத், புதுக்கோட்டை மாநிலங்களின் இரங்கத்தக்க நிலைமைகளை எடுத்துக்காட்டி, இந்தியாவில் இணைவதால் வரும் தீங்குகளையும் பிரெஞ்சிந்தியா வாக இருப்ப தால் வரும் நன்மைகளையும் இதழ்தோறும் அடுக்கிக் காட்டுகிறார் பாரதிதாசன்.

இந்திய ஒன்றியத்தில் ஆங்கிலேயரின் கடுஞ்சட்டங்களே இன்னும் தொடர்கின்றன : பார்ப்பன ஆதிக்கம், வடநாட்டார் சுரண்டல் நிலவுவதோடு சாதிக்கொரு நீதி, மதத்துக்கொரு நீதி, வேண்டியவனுக்கொரு நீதி என்னும் முறைமை பின்பற்றப் படுகின்றது. அங்கே இந்தி கட்டாயம்; கல்விக்குக் கட்டணமுண்டு; சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குக்கூட இலவசக் கல்வியில்லை; பணக்காரர்களுக்கு வாக்குரிமை; மார்வாடி வட்டிக் கடைகளுண்டு; வீட்டுவரி மிகுதி. இந்த நிலையில் பிரெஞ்சு இந்தியாவிலோ இந்தி கட்டாயமில்லை; இலவசக் கல்வி கிடைக்கிறது; எல்லோர்க்கும் வாக்குரிமை உண்டு; வட்டிக் கடைகள் இல்லை; வீட்டுவரி குறைவு; வடநாட்டான் தென்னாட்டான் வேறுபாடு இல்லை என்று பலவகையான காரணங்களைக் காட்டி இந்திய ஒன்றியத்தோடு புதுச்சேரி இப்போது இணையக்கூடாது என்கிறார் பாவேந்தர்.

'கைகாட்டி' என்னும் புனைபெயரில் 'இந்திய யூனியனில் ஏன் சேரவேண்டும்' என்னும் பெருந்தலைப்பின்கீழ் 'குப்புசாமி அப்பாசாமி திண்ணைப்பேச்சு' என்னும் சிறு தலைப்பிட்டு வினா விடை அமைப்பில் பாரதிதாசன் எழுதியுள்ள கட்டுரை யொன்றில், குப்புசாமியின் ஒரு வினாவையும் அப்பாசாமியின் அதற்கான விடையையும் காணலாம்.

> ''குப்பன் - பக்கத்தில் இருக்கும் இந்தியா யூனியன் மிகப் பெரிது. பிரெஞ்சிந்தியா சின்னது. சேர்ந்துதான் ஆகவேண்டும்.
>
> அப்பன் - எருமுட்டை பெரியது. இட்டலி சின்னது; அதற்காகக் காலையில் மிளகாய்ப்பொடி நல்லெண்ணெய் போட்டுக்கொண்டு எருமுட்டையையா தின்பார்கள். பெரிதாயிருந்தால்? பயன் இருக்கவேண்டும்!''

பாரதிதாசனின் கிண்டல் இப்பகுதியில் பளிச்சிடுகிறது. (கு.தி.13.9.48) பிரெஞ்சுக் காரர்களின் ஆட்சி மேலானது என்பதைப் பலவகைகளில் பாரதிதாசன் வற்புறுத்துவது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஒன்றியத்துடன் பிரெஞ்சு ஆட்சிப் பகுதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப் பட்டன. 1954 மார்ச்சில் இத்தொடர்பில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடைபெற்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை, நகராட்சிகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் 178 பேரில் 170 பேர் இணைப்பை ஆதரித்தனர். 1954 மார்ச்சு 18இல் புதுச்சேரியின், அதையொட்டிய 7 கோம்யூன்களின் மேயர்கள் இணைந்து இந்தியா வுடன் இணைவது என்ற முடிவை அறிவித்தார்கள். இணைப்பு இயக்கம் வெற்றிபெறும் இந்தச் சூழ்நிலையிலும் அதை எதிர்க்கும் உணர்வு சிலரிடம் இருந்துகொண்டே இருந்தது. குறிப்பாகப் பிரெஞ்சு அரசில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களில் பெரும்பாலோர் இணைப்பை விரும்பவில்லை. தங்களுக்குக் கிடைத்துவரும் ஓய்வூதியம் போய்விடலாம்; இங்கும் மதுவிலக்குச் சட்டம் வந்து விடலாம்; பள்ளிகளில் பிரெஞ்சு மொழி கற்பிக்கப்படாமல் போகலாம் என்று பலவாறு கவலைப்பட்டார்கள். புதுச்சேரியில் அவர்களுக்கென வலிவான சங்கம் இருந்தது. பாரதிதாசனுக்கு அவர்களோடு நெருங்கிய தொடர்பு இருந்தது.

இந்தக்காலக்கட்டத்தில் இணைப்பு இயக்கத்திற்கு எதிரானவர் களைக் கடுமையாகத் தாக்கும் போக்கும் புதுவையில் நிலவியது. பொதுவாகப் 'புதுவை முரசு' என்னும் பெயரில் அப்போது வெளிவந்த இதழ் கண்டிக்கும் பணியைக் காட்டமாகச் செய்தது.

பாரதிதாசனைக் கடுமையாகத் தாக்கிப் 'பாரதிதாசனின் விபரீத போக்கு' (15.4.1954), 'பாரதிதாசனுக்குப் பகிரங்கக் கடிதம் (1.5.1954), 'தெளிவில்லாத நெஞ்சம்' (1.11.1954) முதலிய பல கட்டுரைகள் வெளிவந்தன.

''சுதந்திரத்திற்கெதிரான பிராச்சாரத்திலும் செயலிலும் இறங்குவது ஒரு கவிஞரின் பண்புக்கு ஏற்றதல்ல, முறையல்ல, ஒழுங்கல்ல, நேர்மையல்ல. இன்னும் சற்று வெளிப்படையாகக் கூறவேண்டு மானால் கவிஞரின் இப்போதைய செயல் வருங்கால இந்திய வரலாறு படிக்கும் மாணவன் 'துரோகம்' என்ற கொடிய சொல்லால் குறிப்பிடுவான் என்பதை எண்ணி நாம் வருந்துகிறோம்... (15.4.1954)''

''நீங்கள் பாரதிதாசரா? அல்லது பிரெஞ்சுதாசரா? உடனே உங்கள் பெயரைப் 'பிரெஞ்சுதாசன்' என்று மாற்றிக் கொண்டால் பொருத்தமாயிருக்கும் என்று யோசனை கூறுகின்றேன்...'' (1.5.54)

இப்படிப் பல கண்டனங்கள் எழுந்தன. எனினும் பாரதிதாசன் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை.

பேராயக் கட்சியின் குறிப்பிடத்தக்க தலைவராக இருந்த கோவை ச.அய்யாமுத்து அவர்கள் 1954 அக்டோபர் 22ஆம் நாள் எதிர்பாராத நிலையில் புதுவைக்கு வந்தார். பாரதிதாசனைச் சந்தித்த அவரிடம் இணைப்பியக்கத்திற்கு எதிர்ப்பு நிலவுவதை எடுத்துரைத்து அந்தச் சங்கக் கூட்டத்திற்கு அவரை அழைத்துச் செல்கிறார் பாரதி தாசன். அவர்களிடம் அய்யாமுத்து ஆற்றிய உரையின் ஒரு பகுதிஃ

''எனது அண்ணன் பாரதிதாசன் உங்கள் மனதில் குடிகொண்டுள்ள அச்சத்தையும் ஐயத்தையும் என்னிடம் கூறினார்.

நீங்கள் ஐயுறவோ, அச்சமும் கவலையுங் கொள்ளவோ யாதொரு காரணமும் இல்லையென்று உறுதியாகக் கூறுகிறேன். இவ் விஷயத்தைப் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். உலகில் அவரை மிஞ்சிய ஜனநாயகவாதி யாரும் கிடையாது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பிரெஞ்சு ஆட்சி புதுவையைவிட்டு விலகியதும் நீங்கள் உங்கள் சொந்த நாடாகிய இந்தியாவின் அங்கத்தினராக வாழ்வீர்கள். இந்தியத் துணைக்கண்டத்தின் நேரான ஆட்சியின்கீழ் நீங்கள் இருப்பீர்கள்.

புதுவை பாரதக் கொடியின்கீழ் ஒரு சின்னஞ்சிறு ராஜ்யமாகவே நீடித்திருக்கும் நீங்கள் விரும்பும் வரை, புதுவை தனி ராஜ்யமாகவே இருக்கும். உங்கள் விருப்பத்தை கேளாமல் அது எந்த மாநிலத்துடனும் இணைக்கப்படமாட்டாது.

பிரஞ்சு மொழியும், பிரஞ்சு கலாசாரமும் பாதுகாக்கப்படும்.

நீங்கள் தற்போது பெற்றுவரும் உபகாரச் சம்பளத்திற்கு உத்திர வாதம் அளிக்கப்படும்.

உங்கள் உள்நாட்டு அரசாங்கம் உங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் இந்தியாவின் இதர மாகாணங்களைப் போன்றே நடைபெற்றுவரும்'' (எனது நினைவுகள் ப. 775-776)

அய்யாமுத்துவின் பேச்சை அனைவரும் வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியிலிருந்து இணைப்பு இயக்கத்திற்கு எதிரானவர்களோடு பாரதிதாசனுக்கு இடையறாத தொடர்பு இருந்ததை உணர முடிகிறது.

1954 நவம்பர் முதல் நாள் புதுவையை இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தம் கையொப்பம் ஆயிற்று. பிரான்சு நாட்டின் சார்பில் பியரி லேண்டியும் இந்தியாவின் சார்பில் கேவல்சிங்கும் கையெழுத்திட்டனர். இந்த இணைப்பில் பாரதிதாச னுக்கு மனநிறைவு இல்லை. 1948இல் இணையக் கூடாது என்று வலியுறுத்தி அதற்கு அவர் காட்டிய காரணங்கள் நடைமுறையாகி விட்டன என்று கருதுகிறார். இணைந்ததன் மூலம் முன்னரே பிரெஞ்சு இந்தியாவிலிருந்த கொடியவர்களோடு இந்திய ஒன்றியத்திலிருந்து வந்த பார்ப்பனர்களும் சேர்ந்து கொண்டார்கள். பிரெஞ்சு இந்தியா மேலும் கெட்டது என்று கருதுகிறார்.

'முதலையோடு பார்ப்புக்களும் வந்தனர்
கெட்டது பிரெஞ்சிந்தியா'

என்னும் தலைப்பில் 1.9.59 குயில் கிழமை இதழில் அவர் எழுதிய பாடல் வருமாறு :

பிரெஞ்சிந் தியாஎனும் பெயருள குளத்தில்
இருந்த கொடிய முதலையை எடுத்து
யூனியன் ஆற்றில் போட்டனர்! அவ்ஆறு
தீதுறு முதலை போதா தென்று
ஆயிரம் பார்ப்பொடு திரும்பிப்
பாய்ந்து கெடுத்தது பள்ளக் குளத்தையே.

இந்திய ஒன்றியத்தில் இணைந்ததால் பிரெஞ்சிந்தியா இன்னும் கெட்டது என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

1954 நவம்பரில் இணைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானாலும் அதிகார ஒப்படைப்புகள் படிப்படியாக நிகழ்ந்தன. 1956 மே மாதத்தில் இந்தியாவும் பிரான்சும் ஒப்படைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்திற்குப் பிரெஞ்சு நாடாளுமன்றம் 1962 மே மாதம் ஏற்பளித்தது. பிரெஞ்சுப் பகுதிகள் மீது இந்தியாவிற்கு முழு அதிகாரம் அளிக்கும் ஒப்பந்தப் பத்திரங்களை இருநாடுகளும் 1962 ஆகசுடு 16இல் பரிமாறிக் கொண்டன.

அதிகாரம் முழுமையாகக் கைமாறுவதற்கு முன்பு நடந்த சில நிகழ்ச்சிகள் பாரதிதாசனின் கவனத்தை ஈர்த்தன. 'உள்நாட்டுப்போரா' என்னும் தலைப்பில் 25.10.60 குயில் கிழமை இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அதிகார மாற்றம் படிப்படியாக நடந்துவருகிறது. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவராயிருந்த தி-கால் சார்லசு அதிகாரங்களை இந்திய ஒன்றியத்திடம் ஒப்படைப்பதில் காலந்தாழ்த்துவது சரியல்ல என்று தில்லி அரசும் புதுவைப் பொதுவுடைமை இயக்கத்தினரும் கருது கின்றனர். ஆட்சி மாற்றத்தின் ஒரு கட்டமாக இந்திய அரசு, நீதித் துறையில் நடவடிக்கை எடுக்கிறது. பாதிப்புக்குள்ளான வழக்கறிஞர் கள் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர். 'புதுச்சேரி அமளிகுமுளி படுகின்றது'. அதுபற்றிப் பாரதிதாசன்,

> ''ஒவ்வொரு துறையிலும் யூனியன் சட்டத்திற்கு ஒத்தவாறு மாற்றிக்கொண்டு வருகிறார்கள். கடைசியாக! பிரஞ்சுச் சட்டப்படி அமைந்த நீதி இலாகாவிலிருந்து, பழய நீதிபதிகளுக்கும், அமைப்பு முறைக்கும், இங்கு அட்டகாசம் செய்து கொண்டிருக்கும்பிரஞ்சு வக்கீல்களுக்கும் கல்தா கொடுக்கத் தொடங்கி வேலையையும் தொடங்கிவிட்டார்கள் என்றால் இதில் வியப்போ ஒக்காளிக்க வேண்டிய பகுதியோ என்ன இருக்கிறது. யூனியன் வரட்டும் என்று கையொப்பம் மக்களிடம் வாங்கியவர்கள் வக்கீல்கள் தாமே!''

என்று எழுதுகிறார். இதில் இந்திய ஒன்றியத்தில் இணைவதற்கு மக்களிடம் ஆதரவு திரட்டியவர்கள் தாமே இந்த வழக்கறிஞர்கள், துன்பப்படட்டும்' என்னும் உணர்வு தொக்கி நிற்கின்றது.

> ''இந்திய அரசின் 'ஆயுதங்களின் அடியில்தான் புதுவை மக்கள் அகப்பட்டு விழிக்கிறார்கள்.''

> ''படிக்காத மக்களை யூனியன் ஏமாற்றி வருவதில் ஞாயம் இருக்க லாம். படித்தவர்களிடம் வாலாட்டிய எந்த அரசும் வாழ்ந்ததாக வரலாறு காட்ட முடியுமா?''

என்று இந்திய அரசுக்கு எதிரான உணர்வைப் பதிவு செய்கிறார் பாரதிதாசன்.

இணைப்புக்கு எதிரான உணர்வு இறுதிக்காலத்திலும் பாரதி தாசனிடம் எந்த அளவு ஓங்கியிருந்தது என்பதைக் கட்டுரையின் நிறைவுப் பகுதி காட்டுகிறது. இந்திய அதிகாரி ஒருவர் போராடுபவர் களை எதிர்த்துப் பேசுவதைக் குறிப்பிட்டுப் பாரதிதாசன் எழுது வதாவது :

> ''சேஷன் தெருவில் நின்றுகொண்டு எங்களை இந்தப் பதர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது என்று மார்தட்டுவதில் ஏதாவது புத்திசாலித்தனம் இருக்கமுடியுமா?
>
> இந்திய யூனியனின் தலைமை அதிகாரம் என்னிடமோ ஒரு புத்திசாலியிடமோ, ஒரு மானியிடமோ இருக்குமானால் இந்த நிலையில் இந்தியா யூனியனிலிருந்து இங்குப் பொறுக்கித் தின்னச் சேர்ந்திருக்கும் பார்ப்பாரப் பசங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு யூனியன் கொடியைச் சுருட்டிப் பிரெஞ்சு ரெப்ரசாந்தா னிடம் கொடுத்துவிட்டுச் சொல்லாமல் ஓடிப்போகும்படி செய்தி ருப்பேன். செய்திருப்பார்கள், இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை.
>
> ''நீதி யிலாக்காவில் ஒருவித மாற்றத்தையும் நாங்கள் செய்வதாய் எண்ணமில்லை'' என்று தில்லி அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் புதுச்சேரியில் அமைதியை உண்டாக்கலாம்.''

தற்காலிகத் தீர்வொன்றையும் சொல்லிக் கட்டுரையை நிறைவு செய்கிறார் பாரதிதாசன்.

புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் பகுதிகள் இணைக்கப் பட்ட 'புதுச்சேரி யூனியன் பிரதேசம்' உருவாக்கப்பட்டு 1963 சூலை முதல் நாளிலிருந்து இந்திய அரசின் ஆட்சியின்கீழ் வந்தது.

3.13. பிரெஞ்சுக்காரர்களின் கொடுஞ்செயல்

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியிலிருந்து ஆண்ட காலம் முழுவதும் அவர்கள் குரங்குப் பிடியாகக் கையாண்டு வந்த கொடுஞ் செயல்கள் இரண்டு என்று பாவேந்தர் கருதினார். அவையாவன : 'ஒன்று : தமிழ் வளர்ச்சிக்குத் தடைபோட்டது. இரண்டு : கத்தோலிக்க மதவலைவீசிகட்குச் சலுகை தருவதன் மூலம் மக்களிடையே கலகம் விளைவித்தது. பிரெஞ்சுக் காரர்கள் 200 ஆண்டுகளுக்கு மேலாகப் புதுவையை ஆண்டபோதும் தமிழுக்கு என்று ஒரு தனி நிறுவனத்தைத்

தோற்றுவிக்கவில்லை. அவர்களின் கலைமட்டும் பரவவேண்டு மென்பதில் தனிக்கவனம் செலுத்தினர்'' என்று பாவேந்தர் குற்றஞ் சாட்டினார். (குயில் கிழமை இதழ் 17.1.1961)

பாரதிதாசன் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது புதுவையில் பாரதியின் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை மக்கள் முன்னணியின் சார்பில் முன்மொழிந்ததும் அத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றதும் தீர்மானப்படி பல்கலைக்கழகம் உருவாகாததும் இவண் எண்ணத்தக்கன. (வ.சுப்பையா, பாலம் இதழ், ப. 21).

3.14. தொகுப்பும் முடிப்பும்

முதல் இயலின் தொடக்கத்தில் குறிப்பிட்டதை மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்வது சிறந்தது. அயல்நாடுகள் எவற்றி னுக்கும் சென்றறியாத பாரதிதாசன், தொடக்கப்பள்ளி ஆசிரியராகவே பணியாற்றிய பாரதிதாசன், தமிழ் மொழியில் மட்டுமே புலமை சான்ற பாரதிதாசன் உலக உருண்டையின் பல பகுதிகளிலும் நடக்கும் நடப்புகளைக் கூர்ந்து நோக்கி உள்ளூர் அரசியல் முதல் உலக அரசியல் வரை தனது கருத்துகளைத் தயக்கமின்றிப் பதிவு செய்திருப்பது தனித்து நோக்கத்தக்கது.

இதழாளர் என்னும்நிலையில் உலக நடப்புகளைச் செய்திகள் என்ற அளவில் தெரிவிக்க வேண்டிய தேவை அவர்க்கு இருந்திருக்க லாம். எதிர்ப்படுவனவற்றை அப்படியே காட்டும் கண்ணாடியைப் போலச் செய்தி தெரிவிப்பாளராக அவர் இல்லாமல் அவற்றின் வன்மை மென்மைகளைத் தனது கண்ணோட்டத்தில் துணிவோடு மதிப்பீடு செய்பவராகவும் திகழ்வதைக் காணலாம். எங்கேயோ நடக்கிறது, எது எப்படிப் போனால் என்ன என்றில்லாமல் இது சரியானது இது தவறானது என உலக நாடுகளின் நடவடிக்கைகளை உரைத்துப் பார்க்கிறார். உரத்துச் சொல்கிறார்.

இது எனக்கு வேண்டிய நாடு, இந்த நாடு செய்வதெல்லாம் சரி;அது எனக்கு வேண்டாத நாடு, அந்த நாடு செய்வதெல்லாம் தவறு என்று காமம் செப்பாமல் - விருப்பு வெறுப்புகளைச் சார்ந்து நில்லாமல் - முற்சாய்வு இன்றி அவ்வந்நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் - அணுகுமுறைகளின் அடிப்படையில் பாரதிதாச னின் மதிப்பீடுகள் அமைகின்றன.

ஒரு நிகழ்ச்சியைக் குறித்து ஒரு நாட்டைப் பாராட்டும் அவர் இன்னொரு நிகழ்ச்சியின் அடிப்படையில் அந்நாட்டைக் கடுமை

யாகக் கண்டிப்பதைக் காணலாம். 'திபேத்து விடுதலை'ப் பாடலில் 'சீனாக்காரச் சிங்கம்' எனப் பாராட்டுப் பெறும் சீனம் இந்திய எல்லையில் ஊடுருவியபோது கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகிறது. 'சப்பான் வழி தப்பானது' கட்டுரையில் போற்றுதலுக்கு உள்ளாகும் அமெரிக்கா, சப்பானில் குண்டு, வியட்நாமில் போர் ஆகிய நடவடிக்கைகளுக்காகத் தூற்றுதலுக்கு ஆளாகிறது. உலகின் உயிராகப் புகழப்பட்ட உருசியா, வரிசை கெட்ட உருசிய நாடாக இகழப் படுகிறது. போற்றத்தக்க பிரான்சின் தவறான நடவடிக்கைகள் கண்டிக்கப்படுகின்றன. நல்ல செயல்களை மனந்திறந்து பாராட்டு வதும் அல்ல செயல்களைக் கண்ணோட்டமின்றிக் கடிவதும் பாரதி தாசன் இயல்பு. அழிவுகளைக் கண்டு இரங்குவதோடு அவற்றுக்குக் காரணமானவர்களைக் கண்டிப்பதும் ஆக்கங்களைக் கண்டு மகிழ்வதோடு அவற்றுக்குக் காரணமானவர்களைப் பாராட்டுவதும் பாரதிதாசன் இயல்பு. அவரின் படைப்புகள் அனைத்திலும் வெளிப் படும் இப்பண்பு, உலகநாடுகளின் நடவடிக்கைகளைச் சீர்தூக்கும் போதும் மேலோங்கி நிற்கிறது.

இருக்கும் நிலையை மாற்றுவதற்கான புரட்சிமனப்பான்மை ஏற்படுத்துவதற்காக எழுதுகோல் ஏந்தியவர் பாரதிதாசன். ஏற்றத் தாழ்வுகளை மாற்றியமைத்து 'எல்லோர்க்கும் எல்லாம்' என்னும் இடத்திற்கு அழைப்பு விடுத்தவர் அவர்.

> ''மேடு பள்ளங்களைக் கண்டே - நலம்
> விளைக்க எழுத்துழுவோன் எழுத்தாளி''

என்பது அவர் வரையறை. (இ.தொ.) சாதிமத வேற்றுமைகள். மூடப்பழக்கங்கள் தாங்கிப் பொருதுநிற்கும் சண்டையுலகை வேரொடு சாய்க்க விழைந்தவர். பசிப்பதெனில் அனைவரும் பசித்து, புசிப்பதெனில் அனைவரும் புசித்து, 'இது எனது' என்னும் கொடுமையைத் தவிர்த்து, இதயமெலாம் அன்பு நதியினில் நனைத்துப் பொதுவுடைமைக் கொள்கை திசைஎட்டும் சேர்த்துப் புதியதோர் உலகம் செய்யப் போர்க்குரல் கொடுத்தவர் புரட்சிக் கவிஞர்.

ஆமையைப்போல் அடங்கி ஒடுங்கிக் கூனிக்குறுகி அஞ்சி நடுங்கிய மனிதனைப் பார்த்து 'அடே! நீ மண்ணன்று; மனிதன்! இமையைத் திற; எண்ணுக நன்றாய்; தோளை உயர்த்து; சுடர் முகம் தூக்கு; மீசையை முறுக்கி மேலே ஏற்று; உன் ஒளி விழிகள் உலகுக்கு ஒளி தரட்டும்' என்று தளர்ச்சியையும் தாழ்வுணர்ச்சியையும் நீக்கித் தன்னம்பிக்கை யொளியைப் பாய்ச்சியவர் பாவேந்தர்.

மானிட ஆற்றலின் மாட்சி பாரதிதாசன் படைப்புகளில் துலங்குவதைப்போல் முந்தைய இலக்கிய நெடும்பரப்பில் இடம் பெறவில்லை. 'மானிட இயக்கத்தின் முழு மலர்ச்சியையும் பாரதி தாசனிடம் தான் பார்க்க முடிகிறது' என்னும் ஆய்வாளரின் கருத்து இவண் இணைக்கத்தக்கது.

> ''எப்படி வில்லியம் பட்லர் ஏட்சும் ராபர்ட் பர்ன்சும் தங்கள் நாகரிகச் சித்திரங்கள் மூலம் மானுடப் பொது வாழ்வைப் படைக்கிறார்களோ, அப்படியே பாரதிதாசனும், தமிழ் வாழ்வு மூலம் ஒரு புதிய மானுடத்திற்கு வழிகாட்டுகிறார். பாரதியின் பாஞ்சாலி, ஒரு இந்தியப் பெண் - அதே சமயத்தில் அவள் ஒரு மானுடசக்தி. பாரதிதாசனின் குப்பம்மா ஒரு தமிழச்சி - அதே சமயத்தில் அவளும் ஒரு மானுட சக்தியே. ஒரு வகையில் பார்த்தால் மானுட இயக்கத்தின் முழு முகிழ்ப்பையும் பாரதிதாசனிடம் தான் பார்க்க முடிகிறது. பாரதியிலே, தெய்வீகம் மானுட உருவெடுக்க முடிகிறது. பாரதிதாசனிலே மானுடமே தெய்வீகமாகிறது. ஒரு வகையிலே பார்த்தால் பாரதிதாசன் இதைக்கூட ஏற்கமாட்டார். ஏனென்றால், தெய்வீகம் என்ற சொல்லைக்கூட அவர் பயன்படுத்துவதில்லை. மானுடத்தின் எல்லை, முழுமையான மானுடமே; அவர் சாதாரண மானுடத்திலேயே எல்லா முழுமையையும் பார்க்கிறார்.''

என்னும் பேராசிரியர் கா.செல்லப்பன் கருத்து (ஒப்பியல் தமிழ் ப. 48-49) இயல்பு நவிற்சியே.

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பரை நோக்கி 'ஓடப்பர் உயரப்பர் என்னும் உயர்வுதாழ்வு ஒழிந்து அனைவரும் ஒப்பப்பர் ஆவதற்கான எளிய வழி, நீங்கள் உதையப்பர் ஆகவேண்டும் என்று அடிப்படைச் சமுதாய மாற்றத்திற்கான வழியை உணர்த்துகிறார் பாரதிதாசன்.

கட்டுகளற்ற உலகைக் கனவு காணும் பாரதிதாசன் விழித்தெழுந்த மனிதனை நோக்கி வீடுகளிடையில் சுவரை இடித்து, வீதிகளிடையில் திரையை விலக்கி, 'நாட்டொடு நாட்டை இணைத்து' 'வானை இடிக்கும் மலைமேல் ஏறிப்' 'பாரடா எங்கும் பரவிய மக்களை' என்று அறிவுறுத்துகிறார். இந்த மனிதர்களெல்லாம் உன்னுடன் பிறந்தவர்கள்; இந்த மக்கட்பெருங்கடலைப் பார்த்து மகிழ்ச்சிகொள்; அறிவை விரிவுசெய்து அவர்களோடு அணைந்து கொள்; இரண்டறக் கலந்துகொள்.

மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேத மில்லை

உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; உடைமை மக்களுக்குப் பொது,
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!

என்று புதுவைப் புரட்சிக்குயில் மானிட விடுதலைக்குக் குரல் கொடுக்கிறது. (மு.தொ.). பேராசிரியர் கா.செல்லப்பன்.

> ''தன்னுணர்வுப் பாடல்களிலே மிகுந்து இருக்கும் 'நான்', பாரதிதாசனிலே ஒரு எல்லையற்ற 'நானாக' மாறுகிறது. ''நான் பரந்து பட்டவன்; நான் பல்லாயிரக்கணக்கானவன்'' என்ற வால்ட்விட்மனைப் போல், ''காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம், நோக்க நோக்கக் களியாட்டம், நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை'' என்ற பாரதியைப் போல் பாரதிதாசனும் தன்னை மானுட மகா சமுத்திரமாக உருவகித்து, ''மானுட சமுத்திரம் நான் என்று கூவு'' என்று கூவும் எக்காளக் கூற்றிலே மானுடத்தின் முழு வெற்றியையும் காண முடிகிறது.'' (மேற்படி ப. 50).

என்று ஒப்பாய்வுக் களத்தில் உரைத்துக் காட்டுவது ஒளி மிக்கது. மனிதர்களைப் பாகுபடுத்தும் ஊர், நாடு, குலம், இனம், சாதி, சமயம் முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, பரந்து விரிந்து செல்லும் உலக வானில் பாரதிதாசக்குயில் பாடி மகிழ்கிறது.

''பாரதிதாசன் மொழிவரையறையால் தமிழ்க் கவிஞர். ஆனால் கருத்தளவையால், கவிதைச்சுவையளவையால், மொழி எல்லையையும், நாட்டு எல்லையையும், கால எல்லையையும் கடந்த உலகக் கவிஞர்களுள் ஒருவர்'' என்னும் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரின் மதிப்பீடு (புரட்சிக்கவிஞர் ப. 37) உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

இணைப்பு - 1

1.1. பாரதிதாசன் பாடல்கள் – கால வரிசை

வ. எண்	முதற் பதிப்பு	நூற்பெயர்
1.	1920	மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு
2.	1925	மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்
3.	1926	மயிலம் சுப்பிரமணியர் துதியமுது
4.	1930	கதர் இராட்டினப்பாட்டு
5.	1930	சிறுவர் சிறுமியர் தேசியகீதம்
6.	1930	தொண்டர்படைப்பாட்டு
7.	1930	தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு
8.	1930	சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
9.	1931	சுயமரியாதைச் சுடர்
10.	1937	புரட்சிக்கவி
11.	1938	பாரதிதாசன் கவிதைகள்
12.	1941	எதிர்பாராத முத்தம்
13.	1942	குடும்ப விளக்கு
14.	1942	இசையமுது
15.	1944	இருண்ட வீடு
16.	1944	அழகின் சிரிப்பு
17.	1944	காதல் நினைவுகள்
18.	1944	குடும்ப விளக்கு இரண்டாம் பகுதி - விருந்தோம்பல்
19.	1944	பாண்டியன் பரிசு
20.	1945	தமிழியக்கம்
21.	1948	முல்லைக்காடு
22.	1948	காதலா? கடமையா?
23.	1948	இந்தி எதிர்ப்புப் பாட்டு
24.	1948	கடல் மேற் குமிழிகள்

25.	1948	குடும்ப விளக்கு மூன்றாம் பிரிவு, திருமணம்
26.	1948	அகத்தியன் விட்டபுதுக்கரடி, } (ஒரே தொகுப்பில்)
27.	,,	நல்லமுத்துக்கதை
28.	1948	திராவிடர் திருப்பாடல்
29.	1949	ஏற்றப்பாட்டு
30.	1949	பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் பகுதி
31.	1949	தமிழச்சியின் கத்தி
32.	1949	பாரதிதாசன் ஆத்திசூடி
33.	1949	திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம்
34.	1950	குடும்பவிளக்கு நான்காம் பிரிவு - மக்கட்பேறு
35.	1950	குடும்ப விளக்கு ஐந்தாம் பிரிவு - முதியோர் காதல்
36.	1951	அமிழ்து எது?
37.	1952	பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி. (இரண்டாம் பதிப்பு)
38.	1952	இசையமுது - இரண்டாம் பகுதி
39.	1954	பொங்கல் வாழ்த்துக்குவியல்
40.	1955	பாரதிதாசன் கவிதைகள் - மூன்றாம் தொகுதி
41.	1956	தேனருவி
42.	1958	இளைஞர் இலக்கியம்
43.	1959	குறிஞ்சித்திட்டு
44.	1962	கண்ணகி புரட்சிக்காப்பியம்
45.	1962	மணிமேகலை வெண்பா
46.	1964	பாரதிதாசன் பன்மணித்திரள்
47.	1977	காதல் பாடல்கள்
48.	1977	குயில் பாடல்கள்
49.	1977	பாரதிதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி
50.	1978	தேனருவி (+ 38 பாடல்கள்)
51.	1978	ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது
52.	1978	தமிழுக்கு அமுதென்று பேர்
53.	1978	புகழ் மலர்கள்
54.	1978	நாள் மலர்கள்
55.	1978	வேங்கையே எழுக

56. 1980 பாரதிதாசன் ஆத்திசூடி (+ பொங்கல் வாழ்த்துக் குவியல், இளையார் ஆத்திசூடி)

57. 1982 பாரதிதாசன் கவிதைகள் (நான்கு தொகுதிகள் + புதிய பாடல்கள் 17)

பாடு பொருள் அடிப்படையில் பூம்புகார் பதிப்பகம் பகுத்தும், தொகுத்தும் வெளியிட்டவை :

1. 1992 பாரதிதாசன் கவிதைகள் - உயர்ந்தோர் (+ஒரு புதிய பாடல்)
2. 1992 ,, இயற்கை
3. 1992 ,, தமிழ் (+ ஒரு புதிய பாடல்)
4. 1992 ,, சிறுகாப்பியங்கள்
5. 1992 ,, இளைஞர் இலக்கியம் 1
6. 1992 ,, சமுதாயம் (+ இரண்டு புதிய பாடல்கள்)
7. 1994 ,, இளைஞர் இலக்கியம் 2
8. 1994 ,, பொங்கல் வாழ்த்து இலக்கியம் (+ ஆறு புதிய பாடல்கள்)
9. 1994 ,, காதல் (+ இரண்டு புதிய பாடல்கள்)

குறிப்பிடத்தக்க பிற தொகுப்புகள்

1. 1993 பாரதிதாசன் கவிதைகள் (பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு), ஆ.திருவாசகன், சுரதா கல்லாடன் (தொ.ஆ.)
2. 1994 உலகம் உன் உயிர் (தலையங்கக் கவிதைகள்) (+நான்கு புதிய கவிதைகள்), ச.சு.இளங்கோ (ப.ஆ.)
3. 1995 பாரதிதாசன் வண்ணப்பாடல்கள் (+ நான்கு புதிய பாடல்கள்) ய.மணிகண்டன், (தொ.ப.)
4. 2000 பாரதிதாசன் திரைப்பாடல்கள், வாமனன் (தொ.ஆ.)

பிறர் படைப்புகளுடன் பாரதிதாசன் கவிதைகளும் சேர்க்கப்பட்டு வெளிவந்த நூல்கள்

1. 1937 இந்தி எதிர்ப்பு பாடல்கள்
2. 1945 எது இசை?

3. 1946 தன்மானத் தாலாட்டு

4. 1948 மகாகவி பாரதியார்

இவற்றில் இடம்பெற்ற பாரதிதாசன் பாடல்கள் வேறு கவிதைத் தொகுப்புகளில் சேர்க்கப்பெற்றுள்ளன.

முன்னர் வேறு நூல்களில் இடம்பெற்ற பாடல்களே தெரிவுசெய்து தொகுக்கப்பட்டு வேறு பெயரில் வெளிவந்த நூல்கள்

1. 1942 காதற்பாட்டு

2. 1958 தாயின்மேல் ஆணை

3. 1993 தமிழ் உணர்ச்சி

இத்தகைய தொகுப்பு நூல்கள் பல வெளிவந்துள்ளன.

1.2. பாரதிதாசனின் நாடகங்கள் – காலவரிசை

I. நூல் வடிவில் வெளிவந்தவை

வ. எண்	முதற் பதிப்பு	நூற்பெயர்
1.	1939	இரணியன் அல்லது இணையற்ற வீரன்
2.	1944	நல்ல தீர்ப்பு
3.	1944	கற்கண்டு } (ஒரே தொகுப்பில்)
4.	,,	பொறுமை கடலினும் பெரிது } (ஒரே தொகுப்பில்)
5.	1946	அமைதி
6.	1947	சௌமியன்
7.	1948	படித்த பெண்கள்
8.	1949	சேரதாண்டவம்
9.	1950	இன்பக்கடல் } (ஒரே தொகுப்பில்)
10.	,,	சத்திமுத்தப்புலவர் } (ஒரே தொகுப்பில்)
11.	1951	கழைக்கூத்தியின் காதல்
12.	1959	பாரதிதாசனின் நாடகங்கள்
		அ. கற்கண்டு
		ஆ. பொறுமை கடலினும் பெரிது
		இ. இன்பக்கடல்
		ஈ. சத்திமுத்தப் புலவர்
13.	1967	பிசிராந்தையார்
14.	1978	தலைமலைகண்ட தேவர்
		அ. தலைமலைகண்ட தேவர்
		ஆ. கழைக்கூத்தியின் காதல் (1951)
		இ. குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும்
		ஈ. ஆரிய பத்தினி மாரிஷை
		உ. ரஸ்புடீன்

ஊ. அம்மைச்சி

எ. வஞ்சவிழா

ஏ. விகடக் கோர்ட்

15. 1980 கோயில் இருகோணங்கள்

அ. கோயில் இருகோணங்கள்

ஆ. சமணமும் சைவமும்

இ. மூளை வைத்தியம்

ஈ. குலத்தில் குரங்கு

உ. மருத்துவர் வீட்டில் அமைச்சர்

ஊ. ஆரிய பத்தினி மாரிஷை (தலைமலைகண்ட தேவர் நூலிலும்)

எ. முத்துப்பையன் (குழந்தை நாடகம்)

ஏ. மேனி கொப்பளித்ததோ?

16. 1992 குமரகுருபரர் நாடகம் (1944 - திரைப்படத்திற்காக எழுதியது)

17. 1994 பாரதிதாசனின் புதிய நாடகங்கள்

க. அச்சு வடிவம் பெறாமலிருந்த நாடகங்கள்

அ. இசைக்கலை (யசோதர காவியம்)

ஆ. பறவைக்கூடு I & II (சைகோன் பின்னணி)

இ. மக்கள் சொத்து (கதை வடிவினது)

உ. நூல் வடிவம் பெறாமலிருந்த நாடகங்கள்

அ. ஐயர் வாக்குப்பலித்தது

ஆ. கொய்யாக்கனிகள் (கவிதை நாடகம் - முற்றுப்பெறாதது)

இ. சங்கீத வித்வானோடு

ஈ. ஆக்கம்

உ. தீவினை

II. நாடகப் பாங்கின

(காவியம், சிறுகாப்பியம் எனும் தலைப்புகளில் கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றவை)

18.	1937	புரட்சிக்கவி (1944 - சிறு மாற்றங்களுடன் நாடகமாக நடத்தப்பெற்றது)
19.	1938	வீரத்தாய் (1935 - நெட்டப்பாக்கம் பள்ளி ஆண்டு விழாவில் மாணவர்கள் நடிப்பதற்கு முதலில் நாடகமாக எழுதப்பட்டது. பாவேந்தரின் மூத்த மகள் வீரத்தாயாகவும் மகன் சுதர்மனாகவும் நடிக்க நடத்தப்பெற்றது.)
20.	1949	ஒன்பது சுவை
21.	1949	போர் மறவன்
22.	1949	காதல் வாழ்வு

III. நாடகமாக நடிக்கப்பெற்றுக் கிடைக்காதவை

1.	1931	சிந்தாமணி
2.	1963	பாரதப்பாசறை ('கற்கண்டு' நாடகப் பகுதியையும் சீன எதிர்ப்பையும் இணைத்து எழுதப்பட்டது)

IV. நாடகம் எழுதப்பெற்று ஒத்திகை நடத்தப்பெற்றும் அரங்கேறாதவை – முழுமையாகக் கிடைக்காததும் நூலாகாததும்

1.	1932	லதாக்ருகம்
2.	1935	நடுநாட்டின் வர்த்தகன் அல்லது நட்பின் இலக்கணம் (சேக்சுப்பியரின் 'வெனிசு வாணிகன்' தமிழ்வடிவம்)

V. பெயரளவில் நாடகம் எனக்குறிக்கப்பெற்றவை – நாடக வடிவில் நூல்களாக வெளிவராதவை

1. தமிழச்சியின் கத்தி (1937)
2. பாண்டியன் பரிசு (1940)
3. கருஞ்சிறுத்தை (1949)

1.3. பாரதிதாசனின் பிற உரைநடை ஆக்கங்கள்

I. கட்டுரைகள்

1. 1980 வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? (சொல்லாய்வுகள்)
2. 1980 பாட்டுக்கு இலக்கணம்
3. 1983 மானுடம் போற்று
4. 1992 பாரதியாரோடு பத்தாண்டுகள் (+ பொழிவுகள், கவிதைகள்)
5. 1994 உலகுக்கோர் ஐந்தொழுக்கம் (தலையங்கக் கட்டுரை கள்)
6. 1996 இலக்கியக் கோலங்கள் (பாடல் விளக்கக்குறிப்புகள், செய்திகள்)

II. உரை

1. 1992 பாரதிதாசன் திருக்குறள் உரை : டாக்டர் ச.சு.இளங்கோ (ஆ.ப.)

1994 பாவேந்தர் பார்வையில் வள்ளுவம் - திருக்குறள் உரை : முனைவர் நா.செங்கமலத்தாயார் (தொ.ஆ.)

III. புனைகதைகள்

1. 1955 பாரதிதாசன் கதைகள் (+ கட்டுரைகள், கிண்டல் துணுக்குகள்)
2. 1980 ஏழைகள் சிரிக்கிறார்கள் (நீக்கம் + புதிய கதைகள்) ச.சு.இளங்கோ (தொ.ஆ.)
3. 1994 பாரதிதாசன் சிறுகதைகள் (நீக்கம் + புதிய கதைகள்) மு.சாயபுமரைக்காயர் (தொ.ஆ.)
4. 1994 பாரதிதாசன் புதினங்கள்

    அ. அன்னை

    ஆ. விஞ்ஞானி

    இ. அனைவரும் உறவினர்

ஈ. பக்த ஜெயதேவர்

உ. குமரகுருபரர்

ஊ. எதிர்பாராத முத்தம்

எ. ஆத்மசக்தி

ஏ. ஏழை உழவன் (அல்லது) முகுந்த சந்திரிகை

ஐ. ஆலஞ்சாலையும் வேலஞ்சேரியும்

IV. கிண்டல் துணுக்குகள்

1981	சிரிக்கும் சிந்தனைகள்

V. வினா விடைகள்

1981	கேட்டலும் கிளத்தலும்

VI. திரைக்கதை உரையாடல்கள்

1.	1940	காளமேகம்
2.	1946	சுபத்ரா
3.	1947	சுலோசனா
4.	1947	ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி
5.	1950	பொன்முடி
6.	1952	வளையாபதி
7.	1964	மகாகவி பாரதியார் வரலாறு

VII. சொற்பொழிவுகள்

1.	1947	கவிஞர் பேசுகிறார்
2.	1950	முத்தமிழ் (+ பிறர் பொழிவுகள்)
	1954	தமிழ் இன்பம்
3.	1980	பாரதிதாசன் பேசுகிறார் (+ புதிய பொழிவுகள்)

இணைப்பு - 2

பாரதிதாசன் உயராய்வு மையம்

தோற்றம்

பாரதிதாசன் உயராய்வு மையம், பல்கலைக்கழகப் பதிவாளர் 1993-94ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின்படி ரூ. 1.86 இலட்சம் செலவினக் குறிப்போடு அளித்த கருத்துருவை ஏற்றுத் தமிழ்நாடு அரசு பிறப்பித்த அரசாணை எண். 482. நாள் 18.5.1993இன் படி உருவாக்கப் பட்டது. அவ்வாணை ஒரு பேராசிரியர், ஒரு விரிவுரையாளர், இளநிலை ஆய்வர் பணியிடங்களை உருவாக்க இசைவளித்ததோடு பணியிடங் களுக்கான செலவுத் தொகையைத் தொடர் செலவினமாக வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளது. ஆணையில் நூலகம், பிற தளவாடச் செலவுகளுக்காக ரூ. 3 இலட்சம் தொடராச் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நோக்கங்கள்

மையத்தின் செயல் நோக்கங்களாக ஏனைய கல்விசார் திட்டங்களோடு,

1. பாரதிதாசன் பற்றிய ஆய்வினை வளர்த்தெடுப்பது; அவர் கருத்துகளைப் பரப்புவது.
2. அனைத்துவகை ஆய்வுகளுக்கும் பயன்படும் வகையில் அவர் படைப்புகளைத் தொகுத்து வைப்பது.
3. அவரின் கொள்கைகளையும், கவிதைப் படைப்பு நுட்பங்களை யும் கீழை, மேலை உலக அறிஞர்களின் படைப்புகளோடு ஒப்பாய்வு செய்வது.
4. இந்தியப் பெருமொழிகளிலும், அயல்நாட்டு மொழிகளிலும் அவர் படைப்புகளை மொழிபெயர்ப்பது.
5. ஆய்வுச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் நடத்துவது ஆகியவை அமைந்துள்ளன.

பொறுப்பேற்பு

மையத்தின் முதற் பேராசிரியராக முனைவர் தா.வே.வீராசாமி அவர்கள் 1995இன் இறுதியில் பொறுப்பேற்றார். அவர் பணிக்காலத்தில் 'பாரதிதாசன் கவிதைகள் அருஞ்சொல்லகராதி' என்னும் திட்டத்தின்

அடிப்படையில் சில நூல்களுக்குச் சொல்லடைவு உருவாக்கி, அவற்றுள் ஒரு பகுதியான 'மணிமேகலை வெண்பா அருஞ்சொல்லகராதி' வெளியிடப் பட்டது.

பின்னர் 1.7.1999இல் பல்கலைக்கழக அழைப்பின் பேரில் மையத்தின் பேராசிரியராக முனைவர் இரா.இளவரசு பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

செயற்பாடுகள்

நூலகச் செழுமையாக்கம்

மைய நோக்கங்களைச் செம்மையாக நிறைவேற்ற வளமான நூலகம் தேவை என்பது உணரப்பட்டுப் பாரதிதாசன் நூல்கள், பாரதிதாசன் பற்றிய நூல்கள் அனைத்தும் மைய நூலகத்தில் இடம்பெறும் வகையில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று விற்பனைக்குக் கிடைக்காத நூல்கள் இயன்றவரை தனியாரிடமிருந்து வாங்கியும், ஒளிப்படி எடுத்தும் சேர்க்கப்பட்டுள்ளன. 1999இல் 365 ஆக இருந்த நூல்களின் எண்ணிக்கை இப்போது 610 ஆகியுள்ளது. புதிய சேர்க்கைகள் பலவும் மையப் பேராசிரியரின் அன்பளிப்பாக அமைந்தவை.

சென்னை, புதுவை, திருச்சி, தஞ்சை முதலிய பல பகுதிகளில் அமைந்த நூலகங்கள் பலவும் பார்வையிடப்பட்டு அவற்றில் கிடைத்த அரிய நூல்கள், முதற்பதிப்பு நூல்கள் பல ஒளிப்படி எடுக்கப்பட்டன. தேசபக்தன், ஆத்மசக்தி, குமரன், ஊழியன், காந்தி, குடிஅரசு, நகரதூதன், பகுத்தறிவு, புரட்சி, மணிக்கொடி முதலிய இதழ்களில் வந்த பாரதிதாசன் படைப்புகள் படியெடுக்கப்பட்டன.

பாரதிதாசன் படைப்புகள் அவர் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்து நடத்திய இதழ்களில் வெளிவந்தவை. அந்த இதழ்களை உயராய்வு மையத்தில் சேர்க்கும்பணி மேற்கொள்ளப்பட்டது. புதுவை முரசு (1930-32) ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் (1935), குயில் தினசரி (1948), குயில் மாதவெளியீடு (1947-49), குயில் கிழமையிதழ் (1958-61), குயில் திங்களிருமுறை (1962), கவிஞரின் மகன் மன்னர் மன்னன் நடத்திய 'பாரதிதாசன் குயில்' (திங்கள் இதழ் 1967 - 68) ஆகிய அனைத்தும் அறிஞர் பலரிடமிருந்து அன்பளிப்பாகவும் ஒளிப்படி எடுத்தும் சேர்க்கப்பட்டுள்ளன.

பாரதிதாசனின் கையெழுத்துப்படியாக உள்ள சில தனிப்பாடல்கள், மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக்காப்பியத்தின் சில பகுதிகள், பள்ளியாசிரியராயிருந்து அவர் எழுதிய பாடக் குறிப்புகள், குத்தூசி குருசாமி, தனுஷ்கோடி ராஜு, ஈரோடு தமிழன்பன், பொன்னடியான் ஆகியோர்க்கு எழுதிய மடல்கள் ஆகியவை திரட்டப்பட்டுள்ளன. வேறு பலர்க்கு அவர் எழுதி நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. அவை பாரதிதாசன் கடிதங்கள் (50) பாரதி

தாசனுக்குக் கடிதங்கள் (52) பாரதிதாசன் தொடர்புடைய கடிதங்கள் (22) எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

எளிதில் கிடைக்காத பாரதிதாசன் படைப்புகளாகிய 'மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு' (1920), 'மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்' (1925), 'மயிலம் சுப்பிரமணியர் துதியமுது' (1926), 'கதர் இராட்டினப்பாட்டு' (1930), 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்' (1930), 'சுயமரியாதைச் சுடர்' (1931) முதலியன ஒளிப்படி எடுத்துச் சேர்க்கப் பட்டுள்ளன. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியின் முதல் நான்கு பதிப்புகளும் (1938-1944), குடும்ப விளக்கின் ஐந்து பகுதிகளின் முதற்பதிப்புகளும் (1942-1950), சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (1930), புரட்சிக்கவி (1937), இரணியன் அல்லது இணையற்ற வீரன் (1939), எதிர்பாராத முத்தம் (1941), இருண்டவீடு (1944), நல்லமுத்துக்கதை & அகத்தியன் விட்ட புதுக்கரடி (1948), ஏற்றப்பாட்டு (1949), பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி (1949), சேர்தாண்டவம் (1949), இன்பக்கடல் & சத்திமுத்தப் புலவர் (1950), அமிழ்து எது? (1951), இசையமுது இரண்டாம் பகுதி (1952), திராவிடர் திருப்பாடல் (1954), தமிழின்பம் (1954) முதலியவற்றின் முதற்பதிப்புகளும், தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு (1950) இரண்டாம் பதிப்பும் தனியாரிடமிருந்தும், நூலகங்களி லிருந்தும் ஒளிப்படி எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. பாரதிதாசன் படைப்பு களின் 'ஆய்வுச் செம்பதிப்பு'க்கு இவை மிகவும் இன்றியமை யாதவை.

மொழிபெயர்ப்புகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகளின் தெலுங்கு மொழி பெயர்ப்பு (சி.ஆர்.சர்மா 1995), கன்னட மொழிபெயர்ப்பு (பசுமலையரசு 1994), மலையாள மொழி பெயர்ப்பு (பி.பத்மநாபன் தம்பி & தேசமங்கலம் இராமகிருஷ்ணன் 1994), இந்தி மொழிபெயர்ப்பு (அகமது உசேன் 1993), பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் (கடெலிஸ் 1979, 1993), திருமதி டேவிட் (1991), ஏ.செபாஸ்டியன் (1993), ஆங்கில மொழிபெயர்ப்புகள் சலபதி (1987), பாரதிதாசன் பல்கலைக்கழகம் (1991), ம.இலெ.தங்கப்பா (1992), வி.முருகன் (1994), எம்.எஸ்.வெங்கடாசலம் (1992, 1999), புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனம் (1996), அ.தட்சிணாமூர்த்தி (1990), பா.பரமேஸ்வரன் (1997) என மொழியாக்க நூல்கள் பலவும் பெருமுயற்சியின் பின் திரட்டப்பட்டுள்ளன.

'புரட்சிக்கவி' எனும் குறுங்காப்பியத்தின் மூல வடிவமாகக் கூறப்படும் 'பில்கணீயம்' ஆசிரியர் இயற்றிய 'சௌரபஞ்சாசிகா' பாடல்களும், பில்கணன் கதையின் வடநாட்டு மரபு, தென்னாட்டு மரபு ஆகிய இரண்டும் திருவையாறு, தஞ்சை வடமொழிப் பண்டிதர்கள் துணையுடன் சமற்கிருதத்தி லிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

திரைத்தொடர்பின

திரைத்துறையில் நுழைந்த முதல் திராவிட இயக்கத் தலைவர் பாரதிதாசன். சுபத்ரா (1946), சுலோசனா (1947), ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி (1947), பொன்முடி (1950), வளையாபதி (1952) ஆகிய படங்களுக்குப் பாரதிதாசன் உரையாடல் எழுதியுள்ளார். காளமேகம் (1940) படத்திற்குத் திரைக்கதை, உரையாடல், பாடல்கள் எழுதியுள்ளார். இவற்றில் பொன்முடி, வளையாபதி ஆகிய படங்களுக்கு எழுதிய உரையாடல் பகுதிகள் கிடைத்துள்ளன. ஏனைய படங்களுக்கு எழுதியவற்றைத் தேடித் திரட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி'யின் படச்சுருள் பெருமுயற்சியின் பின் கிடைத்துள்ளது. சேலம் 'மாடர்ன் தியேட்டர்சு' உரிமையாளரிடம் பிறபடங்கள் பற்றி அறிவதற்கான தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரைப்படங்களுக்கென அவர் எழுதிய பாடல்கள் திரட்டப் பட்டுள்ளன. அவற்றின் ஒலிப்பதிவைப் பெறும் முயற்சி ஓரளவே வெற்றியளித்துள்ளது. பாலாமணி அல்லது பக்காத்திருடன் (1937), ஸ்ரீ ராமானுஜர் (1938) ஆகிய படங்களுக்கு எழுதிய பாடல்கள் இசைத்தட்டு களாகப் பதிவு செய்யப்படவில்லை என அறிவிக்கப்பட்டது. காளமேகத் திற்கு எழுதிய பாடல்களில் நான்கு பாடல்கள், வளையாபதிக்கு எழுதிய இரண்டு பாடல்கள், அவர் எழுதித் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்ட பல பாடல்கள் ஆகியவை ஒலிநாடாக்களில் திரட்டப்பட்டுள்ளன.

ஒலிநாடாக்கள்

நாவலர் சோமசுந்தர பாரதியாரைப் பாராட்டிப் பாரதிதாசன் பேசிய அண்ணாமலைநகர்ச் சொற்பொழிவின் (1955) ஒலிநாடா தனியாரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. புதுச்சேரி வானொலியிலும், திருச்சி வானொலியிலும் ஒலிப்பதிவான பாரதிதாசனின் பேச்சுகள் அடங்கிய ஒலிநாடாக்களும், 'பாவேந்தரின் நினைவுகள்' வரிசையில் அவரின் மகன் மன்னர்மன்னன், மருமகன் மா.தண்டபாணி, மருமகன் புலவர் கண்ணப்பன், மகள் சரசுவதி கண்ணப்பன் ஆகியோரின் நேர்காணல்கள் அடங்கிய ஒலிநாடாக்களும், பாரதிதாசன் பாடல்கள் இசையமைக்கப்பெற்ற ஒலிநாடாக்களும் அவரின் கவிதை பற்றிய பேச்சுகள் அடங்கிய ஒலி நாடாக்களும் மறுபதிவு செய்யப் பெற்று உயராய்வு மையத்தில் இணைக்கப்பட்டுள்ளன. தேசிங்குராசன் வரலாற்றைப் பாரதிதாசன் எழுதி வெளிவந்த (1936) இசைத்தட்டுகளைத் தேடும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக நோக்கு

பாரதிதாசனுக்கு 'ஊர்ப்பார்வைதான் உண்டு, உலகப் பார்வை இல்லை' என்பார் உளர். அவர்தம் கூற்று மெய்ம்மை சான்றதன்று என்பதை நிறுவும் வகையில் புரட்சிக்கவிஞர் காணவிரும்பும் புதிய உலகையும் அவரின் பார்வை உலகின் பலபகுதிகளிலும் பரந்து சென்று பதிந்திருக்கும் பாங்கையும்

ஏராளமான எடுத்துக்காட்டுகளுடன் உலகின்முன் வைக்கும் முயற்சியே 'பாவேந்தரின் உலகநோக்கு' என்னும் நூல். பல்லாண்டு உழைப்பின் பயனாய் உயராய்வு மையத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாய் இப்போது (2002) வெளியிடப்படுகிறது.

அடுத்து வெளிவர இருப்பவை

நூல்வடிவில் வெளிவராத படைப்புகளின் திரட்டு :

இதுவரை நூல்வடிவில் வெளிவராத, பலரின் பார்வைக்குக் கிடைக்காத பாரதிதாசன் படைப்புகள் கண்டறியப்பட்டு அவை பாடல்கள், நாடகங்கள், புனைகதைகள், கட்டுரைகள், திரைக்கதை உரையாடல்கள், கடிதங்கள், துண்டறிக்கைகள், சொற்பொழிவுகள் எனப் பாகுபடுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் முதற்பணியாக நூல்வடிவம் பெறாத பாடல்களைத் திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு ஏறத்தாழ முந்நூற்றெழுபது தனிப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை வெளிவந்த கால அடிப்படையில் கால வரிசைப் பட்டியலொன்றும் (17 பக்கம்), அப்பாடல் களின் முதற்குறிப்பு அடிப்படையில் அகரவரிசைப் பட்டியலொன்றும் (14 பக்கம்) உருவாக்கப் பட்டுள்ளன. கிடைத்துள்ள பாடல்களை எளிதாக அறியவும், புதியனவாகக் கிடைக்கும் பாடல்களை இடையிடையே இணைக்கவும் இப்பட்டியல்கள் பயன்படும். பாடல்கள் அனைத்தும் அச்சேற்றுவதற்கு உகந்தமுறையில் படியெடுக்கப்பட்டு அவற்றுக்கான ஆராய்ச்சிக் குறிப்புகளும் எழுதப்பட்டு நூலாக்கம் பெற அணியமாய் உள்ளன.

குயில் தினசரி, குயில் கிழமைஇதழ், ஆனந்தவிகடன், சில்வர் ஸ்கிரீன், தமிழ் சினிமா, நகரதூதன், குடிஅரசு முதலிய இதழ்களில் வெளிவந்து நூல்வடிவம் பெறாத சற்றொப்ப நாற்பது கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 'I.J.' என்னும் குறியீட்டுப் பெயரில் புதுவைமுரசு இதழில் எழுதப்பெற்று 'மானுடம் போற்று' தொகுப்பில் சேர்க்கப்பெற்றுள்ள கட்டுரைகள் பாரதிதாசன் எழுதியவை அல்ல, குத்தூசி குருசாமி (Injection) எழுதியவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. 'கிறுக்கன்' என்னும் புனைபெயரில் வெளிவந்த கட்டுரைகள் பாரதிதாசன் எழுதியவை, குத்தூசி குருசாமி எழுதியவை அல்ல என்பதும் நிலைநிறுத்தப்பெற்றுள்ளது.

பாடல்களின் பட்டியல்கள் :

இதுவரை நூல்வடிவில் வெளிவந்துள்ள பாடல்கள் அனைத்தின் தலைப்பு, முதற்குறிப்பு அகரவரிசைப் படுத்தப்பட்டு எந்தப்பாடல் எந்த நூலில் எந்தப் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது என்பதை ஆய்வாளர் அனைவரும் எளிதில் அறியும் வகையில் பட்டியல்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஒரே பாடல் பல தலைப்புகளில் பல நூல்களில் இடம்பெற் றிருப்பதை அறிந்து கொள்ளலாம். சற்றொப்பத் தனித்தனியே 70 பக்க அளவிலான பட்டியல்கள் இவை.

ஆய்வடங்கல் :

பாரதிதாசன் படைப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியே படைப்புப் பற்றிய விளக்கங்களோடு ஆய்வடங்கல் அமைப்பில் நூலாக்கம் பெறுகின்றது.

இதுவரை பாரதிதாசனைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், வெளியிடப்பட்ட நூல்கள், கட்டுரைகள், மலர்கள் பற்றிய ஒட்டுமொத்த முழுமையான குறிப்புகளை ஆய்வாளர்களுக்கு அளித்துதவும் நோக்கில் 'ஆய்வடங்கல்' ஒன்றை உருவாக்கும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முதற்படியாகச் சற்றொப்ப நானூறு (400) நூல்களைப் பற்றிய ஆசிரியர், காலம், பதிப்பு முதலிய விவரங்கள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தனித்தனியே கருத்தரங்குகளிலும் இதழ்களிலும், மலர்களிலும், நூல்களிலும் இடம்பெற்றுள்ள பாரதிதாசன் பற்றிய கட்டுரைகள் அடைவு செய்யப் படுகின்றன. ஆய்வாளர்கள் முந்தைய ஆய்வு முயற்சிகளை அறியவும், ஒரே தலைப்பில் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்வதைத் தவிர்க்கவும் இவ்வாய் வடங்கல் பெரிதும் பயன்படும். ஆய்வடங்கலின் முன்முயற்சியாகப் பாரதிதாசன் நூல்கள், அவரைப்பற்றிய நூல்கள் ஆகியவற்றின் பதிப்பு விவரங்களை உள்ளடக்கிய 'நூலடைவு' வெளிவரவுள்ளது.

ஆய்வுச் செம்பதிப்பு :

இதுவரை வெளிவந்துள்ள பாரதிதாசன் பாடல்களில் முன்னர் வெளிவந்த பதிப்புக்கும், பின்னர் வெளிவந்த பதிப்புகளுக்கும், இதழில் வெளிவந்த பாடலுக்கும், நூல்வடிவில் வெளிவந்த பாடலுக்கும் இடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் இணைப்புகள், நீக்கங்கள், மாற்றங்கள் எனும் வகைப்பாட்டில் அடங்கும். இவற்றுள் ஆசிரியர் செய்தவை உள. பிறரால் நேர்ந்தவை பல. இவற்றைக் கண்டறிந்து முதலில் வெளிவந்த பாடல் வடிவத்தைத் தந்து, பின்னர் நேர்ந்த வேறுபாடு களைக் குறித்துக் காலவரிசையில் பாடல்களைப் பதிவு செய்யும் **ஆய்வுச் செம்பதிப்பு** ஒன்று இன்றியமையாத் தேவையாகும். அதற்குப் பயன்படும் அடிப்படைத் தரவுகளாக இதழில் வெளிவந்த பாடல் வடிவங்கள், நூல்களின் முதற்பதிப்புகள், கவிஞரின் கையெழுத்துப் படிகள் முதலியன திரட்டப் படுகின்றன.

பாடல்களில் மட்டுமன்றி நாடகங்கள், கட்டுரைகள், கதைகள் முதலியவற்றிலும் முன் வெளிவந்த வடிவத்திற்கும் பின்னர் வந்த வடிவத்திற்கும் இடையே இத்தகு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவற்றைத் தெளிவாக அறிந்து வேறுபாடுகளைச் சுட்டி ஆய்வுச் செம்பதிப்பு வெளியிடப் பல ஆண்டுகள் தொடர்ந்து ஒரு குழுவினர் பாடுபட்டாக வேண்டும்.

பிறபணிகள் :

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாடகாசிரியர், புனைகதையாசிரியர், கட்டுரையாளர், இதழாசிரியர், உரையாசிரியர், சொல்லாராய்ச்சியாளர், திரைத்துறையாளர், அரசியல் வாணர் முதலிய பன்முக ஆற்றல் வாய்ந்தவர். இவ்வாற்றல்களைத் துலக்கிக் காட்டும் வகையில் 'பாவேந்தரின் பன்முக ஆளுமை' என்னும் நூல் எழுதப்பட்டு வருகிறது. தமிழ் இதழியல் வரலாற்றில் புத்திலக்கியச் சோதனை முயற்சிகளுக்குச் சிறந்த இடமளித்த 'மணிக்கொடி' இதழில் அதிகமான பாடல்களை எழுதிய பாவலர் பாரதிதாசன். அவ்விதழோடு பாரதிதாசனுக்கிருந்த தொடர்பை வெளிப்படுத்தி அதில் வெளிவந்த பாடல்களை மதிப்பீடு செய்யும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கவிஞரின் தனித்தன்மைகளை உணர்த்தும் வகையில் தேர்ந்தெடுத்த பாடல் தொகுப்பு வெளியிடுதல், செம்மையும் முழுமையுமான கவிஞர் வரலாறு எழுதுதல், பிற திராவிட, இந்திய மொழிகளில் கவிஞரின் படைப்புகளை மொழியாக்கம் செய்தல், கவிஞரின் கடிதங்கள், ஒளிப்படங்கள், ஒலிநாடாக்கள், பயன்படுத்திய பொருள்கள், நூல்களின் முதற்பதிப்புகள், நடத்திய இதழ்த்தொகுப்புகள் முதலிய பல பொருள்களை உள்ளடக்கிய **'காட்சியகம்'** அமைத்தல், கவிஞரின் படைப்புகளின் அடிப்படையில் கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் முதலிய பல பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இணைப்பு - 3

மனிதனை நாடி...

உலகத்தை ஒரு நகரமாகவும், தமிழகத்தை அந்நகரத்தின் ஒரு தெருவாகவும், தமிழக மாவட்டங்களை அத்தெருவில் அமைந்துள்ள வீடுகளாகவும் உருவகப்படுத்திப் பாடப்பெற்றது. தலைதூக்கியுள்ள சாதியுணர்வு மடிந்து மனிதம் தழைத்தோங்க வேண்டுமென்று சாற்றுவது.

உலக நகரின் ஒருசிறு தெருவாய்
நிலவும் தமிழக முகப்பினில் நின்றேன்.

இனியஇவ் வுலகில் இணைதனக் கில்லா
மனிதன் என்னும் மாபெரும் ஆற்றலைக்

கண்டு நெஞ்சங் கலந்து 'தோழனே!
உண்டிவ் வுலகம் உன்னால்' என்றிடும்

வேட்கை துரத்த விரிந்த நெஞ்சொடு
உலக நகரின் ஒருசிறு தெருவாய்

நிலவும்தமிழக முகப்பினில் நின்றேன்.
நின்றவன் தெருவில் சென்றிட முனைந்தேன்.

தெருவின் முனையில் சிறியதோர் வீடு,
வீட்டைச் சுற்றிலும் விரிகுலைத் தென்னைகள்,

மலையாள முறையில் வகுத்தஅவ் வீடு
'குமரி' எனும்பெயர் கொண்டி ருந்தது.

வீட்டை நோக்கி மெதுவாய் நடந்தேன்
வருகிற தேர்தலின் வாய்ப்புகள் பற்றி

உரத்த குரலில் உள்உரை யாடிய
ஏழெட்டுப் பேர்கள் எனைவர வேற்றனர்.

யானே என்னை அறிமுகஞ் செய்தேன்.
ஆன குழாயில் அவித்த பிட்டைப்

பப்படம் பயற்றொடு பரிவுடன் அளித்தனர்;
'எப்படித் தேர்தல் முடிவுகள் இருக்கும்?

செப்புவீர்' என்றேன். 'தெரியா தாஇது?
நாடார் நாங்கள், நாடார் பிறரைத்

தேடார், ஆதலின் வெற்றி தெரிந்ததே'
என்றனர். நன்றி இயம்பிக் கிளம்பினேன்;

அடுத்த வீடு, **'நெல்லை'** அதன்பெயர்,
உடுத்த வெள்ளுடை ஒருவர் வந்தார்.

நெற்றியில் பட்டையாய் நீறு கிடந்தது
பையஎன் அறிமுகம் பணிவொடு செய்தபின்

'ஐயா, தாங்கள் யார்' எனக் கேட்டேன்,
'மெய்யாம் சைவப் பிள்ளைமார்' என்றார்.

'பொய்யாம் பிள்ளைமார் உள்ளனர் போலும்'
என்று முனகினேன், 'என்னவே' என்றார்
ஒன்று மிலையென நின்றவன் நடந்தேன்

இடையில் ஓரிரு வீடுகள் ஏகின.
'கோவை' என்னும் கொட்டை எழுத்து
மேவிய பெரிய மெத்தை வீடு,

'என்னுங்க வாங்க' எனும்வர வேற்பை
முன்னே விடுத்துப் பின்னே வந்தார்

வாட்ட சாட்ட மான மனிதர்;
நீட்டிய வரவேற்பில் நெஞ்சு குளிர்ந்தது.

வணக்கம் செய்து வந்ததைச் சொன்னேன்

''ஏனுங்க மனுசன் எங்கிருக் கானுங்க
நானுங்க கவண்டங்க'' என்றவர் நவின்றார்.

'திருச்சி' என்றொரு வீடு சென்றது.

பச்சை வண்ணம் நெஞ்சைப் பறிக்க
மெச்சும் வகையில் கலையின் விளக்கமாய்த்

'தஞ்சை' என்ற தடித்த எழுத்தொடு
நின்ற வீட்டை நெடிது நோக்கினேன்.

'யாரை யாஅது' எனுமோர் அதட்டல்,
முறுக்கிய மீசை முகக்கொம் பாக
உருட்டிய விழியினர் ஒருவர் வந்தார்;
அச்சம் மேவ அறிமுகம் முடித்தேன்
வீட்டி னுள்ளே கூட்டிச் சென்றார்
கூடத்தில் பலபேர் குழுமி யிருந்தனர்.

'மூவேந் தர்வழி முக்குலத் தோர்நாம்
யாவரும் அஞ்சும் ஆற்றல்நம் ஆற்றல்'

என்றார் ஒருவர், இன்னும் சிலபேர்
'இனஒற்றுமை' என ஏதேதோ பேசினர்.
அவ்விடந் தன்னை அகன்றேன் கமுக்கமாய்;

அடுத்த வீட்டை அணுகினேன் விரைவாய்;
'வாயப் பயத்தை' வயிற்றில் தள்ளி
இருந்த ஒருவர் என்னைப் பார்த்தார்
வணக்கம் உரைத்து வகையாய்க் கேட்டேன்

'உங்களைப் பற்றி உரைக்கவேண் டும்' என;
'தென்னார்க் காட்டான் தெரிய வில்லையா?
வன்னியன்' என்றார். நன்றியை வழங்கிப்
பக்கத்து வீட்டைப் பார்க்க நடந்தேன்.

ஏழெட்டு மாடி இருக்குமவ் வீடு,
உள்ளே நடப்பதை உலகறி யாத
வெள்ளை மாளிகை, வெளியே காவலாள்
என்னை நோக்கி 'இன்னாப்பா' என்றான்
'சென்னை இது' எனத் தெரிந்து கொண்டேன்
அந்த நேரத்தில் அசையும் பூசணித்

தொந்தியை முன்னே தூது விட்டு
வெளியி லிருந்து வீட்டை நோக்கி
வந்தார் ஒருவர், வணங்கினான் காவலாள்,
என்னைப்பார்த்தார். இருகை கூப்பினேன்
கதவு திறந்தது, கையால் அழைத்தார்

அழகிய முன்னறை அமர்ந்தார் அமர்ந்தேன்
தொலைபே சிமணி தொடர்ந்து ஒலித்தது.

எடுத்தார் பெரியவர் இரைந்து பேசினார்
'என்னய் யாஇது? எவன்இதைச் சொன்னான்?
வெள்ளாளப் பயலை மேலே இருத்தி

முதலியா ரெல்லாம் முட்டி யடிப்பதா?
நாளைக்கு மாலை நமது சமூகக்
கூட்ட மொன்றைக் கூட்டுவோம்' என்று
பேசி முடித்தார் பெருஞ்சின முகத்துடன்;

'இருங்கள் வருகிறேன்' என்றெனக்(கு) உரைத்து
வீட்டினுள் சென்றார்; விளங்கா திருந்தயான்
'இதுதான் நேரம்' என்றேகினேன் வெளியே;
உலக நகரின் ஒருசிறு தெருவாய்
நிலவும் தமிழக நிலைமையைத் தெளிந்தேன்.

உலகநகரின் ஒருசிறு தெருவாய்
இலகும் தமிழகத் திருக்கும் தோழனே!

குறுகிய சாதிக் கூண்டினை உடைத்துப்
பெருகிய அன்புச் சிறகினை விரித்துப்
பாரெனும்வானில் பறக்க வேண்டாமா?
உலகமாம் நகரில் உலவ வேண்டாமா?

ஆர்க்கும் கடலின் அகட்டினைக் கிழித்து
வேர்க்கும் மழைமுகில் வீதியில் பறந்து

காற்றின் அலைகளில் செய்தியைப் பரப்பி
நாற்றிசை மாற்றி ஒருதிசை யாக்கிய
மானிடப் படையில் நீயுமோர் மறவன்!

கொள்ளை அரசரின் கூடா ரங்களை
வெள்ளப் புரட்சி நெருப்பால் எரித்துக்

குருதியைக் கொட்டிப் பசுமையை விளைத்துச்
செம்மலர்க் காட்டில் சிரிக்கும் மலர்கள்
உன்னுடன் பூத்தவை, உணர வேண்டாமா?

'இந்த மலர்களில் யானுமோர் மலர்' என
எண்ணும் போதே எழுச்சி பிறக்குமே!

தெய்வ நிலாவெனும் சேதியை மாற்றிக்
காலடி பதித்துக் கற்களைக் கொணர்ந்த
மனிதரில் நீயுமோர் மனிதன் அல்லவா?

'ஆண்டவன் தந்தான் ஐந்தாறு பிள்ளைகள்
வேண்டாம் என்றுநான் விளம்ப முடியுமா?'

என்று நாள்தொறும் மனைவியின் இதழைத்
தின்று கிடப்பான் செப்புவான், இன்றோ

சோதனைக் குழாயில் மகவினைத் தோற்றும்
சாதனைப் புதுமை தருகிறான் மனிதன்!
இந்த மனிதனோ(டு) உன்னையும் இணைத்தே
எண்ணும் போதே எழுச்சி பிறக்குமே!

'மனிதன், ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும் போதே நின்னுளந் தன்னில்
கடலின் முழக்கமாய்க் களிப்பு முழங்குமே!

'மனிதன், ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும் போதே நின்முகந் தன்னில்
ஆயிரங் கதிரவன் அலைஒளி பாயுமே!

'மனிதன், ஆகா! நானுமோர் மனிதன்!'
என்னும்போதே நின்உடல் தன்னில்
ஆயிரங் களிற்றின் வலிமை அடங்குமே!

உலக நகரத் தொருசிறு தெருவாய்
இலகும் தமிழகத் திருக்கும் தோழனே!

கள்ளன் முதலியார் கவுண்டன் என்னும்
குள்ள நினைவினைக் குழிதோண் டிப்புதை!

சாதிச் சருகினைச் சமயக் கந்தையைத்
தோழமைத்தீயில் தூக்கி எறியடா!

வன்னியன் அந்நியன் என்னும் போதுநீ
சின்னதோர் புழுவினும் சீச்சீ இழிகிறாய்.

கண்படு மனிதக் கடலிலோர் துளியாய்
எண்ணும் போதே இமயமாய் உயர்கிறாய்.
அன்புச் சிறகால் உலகினை அணைத்தே
ஒற்றுமைப் பாட்டால் உயர்வினைச் சேர்த்துப்

புதுமைக் குஞ்சுகள் பொரித்துத் தந்து
மானிடக் குயிலே! மானிடக் குயிலே!
வான்மேல் பறநீ! மேன்மேல் உயர்நீ!

1976

எழுத உதவிய ஏடுகள்

I. பாரதிதாசன் படைப்புகள்

1. பாரதிதாசன் — அழகின் சிரிப்பு, முல்லைப் பதிப்பகம், சென்னை; மு.ப. 1944.
2. '' — இசையமுது, பாரதசக்தி நிலையம், புதுவை; (ஆ.இ.) (1942).
3. '' — இந்தி எதிர்ப்புப்பாட்டு, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. 30.7.48.
4. '' & பிற நால்வர் — எது இசை? கமலா பிரசுராலயம், சென்னை; (ஆ.இ.) (1945).
5. பாரதிதாசன் — குடும்பவிளக்கு, பாரதசக்தி நிலையம், புதுவை; (ஆ.இ.) (1942).
6. '' — குடும்பவிளக்கு இரண்டாம் பகுதி விருந்தோம்பல், முல்லைப்பதிப்பகம், சென்னை; மு.ப. 1944.
7. '' — குடும்ப விளக்கு மூன்றாம் பிரிவு திருமணம், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. டிசம்பர் 1948.
8. '' — குடும்பவிளக்கு நான்காம் பிரிவு மக்கட்பேறு, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. மார்ச் 1950.
9. '' — குடும்பவிளக்கு ஐந்தாம் பிரிவு முதியோர் காதல், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. 29 ஏப்ரல் 1950.
10. '' — சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வெளியிட்டவர் ம.நோயேல், (மு.ப.) 1930, புதுவை.
11. '' — தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. 1949.

12. ,, தமிழியக்கம், முல்லைப்பதிப்பகம், சென்னை; மு.ப. 1945.

13. ,, தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு, வெளியிட்டவர் ம.நோயேல் (மு.ப.) 1930, புதுவை.

14. ,, நாள் மலர்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை; மு.ப. ஏப்ரல் 1978.

15. ,, பாண்டியன் பரிசு, முல்லைப்பதிப்பகம், சென்னை; மு.ப. 1943.

16. ,, பாரதிதாசன் ஆத்திசூடி (சொல்லுரை, கருத்துரை, ஆய்வுரையுடன்), பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; 18.6.49.

17. ,, பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி) வெளியிட்டவர் டி.எஸ்.குஞ்சிதம், வேணு கோபாலபுரம், கடலூர்; 1938.

18. ,, பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி; இ.ப. டிசம்பர் 1952.

19. ,, பாரதிதாசன் கவிதைகள் நான்காம் தொகுதி, பாரி நிலையம், சென்னை; மு.ப. செப்டம்பர் 1977.

20. ,, புகழ்மலர்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை; மு.ப. ஏப்பிரல் 1978.

21. கனக.சுப்புரத்தினம் மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு, புதுவை ஜெகநாதம் பிரஸ், மு.ப. 1920.

22. பாரதிதாசன் மானுடம் போற்று, பூம்புகார் பிரசுரம் பிரஸ், சென்னை; மு.ப. மார்ச் 1984.

23. ,, முல்லைக்காடு, ஞாயிறுநூற் பதிப்பகம், புதுச்சேரி; மு.ப. 1948.

II. மற்றவர் படைப்புகள்

24. அண்ணாதுரை டாக்டர் மா. பாரதிதாசன் இதழ்ப் பணிகள், பூங்கொடி வெளியீடு, ஈரோடு 2; 1990.

25. அய்யாமுத்து கோவை. அ. எனது நினைவுகள், வானதி பதிப்பகம், சென்னை – 17; மு.ப. 1973.

26. இராமசாமி. அ. புதுச்சேரி விடுதலைப் போராட்ட வரலாறு, பூங்குன்றம் பதிப்பகம், மதுரை; மு.ப.திசம்பர் 1991

27. இளவரசு இரா. — இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், மருதம், திருச்சி - 21, மு.ப. திசம்பர் 1990.

28. கடிகாசலம் ந. (ப.ஆ.) — பாரதிதாசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113; 1991.

29. கணேசர்.தி. — அணுசக்தியின் கதை, ஹிரோஷிமா முதல் கல்பாக்கம் வரை, தேன்மழைப் பதிப்பகம், சென்னை; மு.ப. மே. 1988.

30. குடந்தை புகழேந்தி — பாவேந்தருடன், சேகர் பதிப்பகம், சென்னை - 78. மு.ப. ஏப்ரல், 2001.

31. குருசாமி ம.ரா.போ (ப.ஆ.) — பாரதி பாடல்கள் ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்; மு.ப. 1987.

32. சுந்தரவடிவேல் நெ.து. — புரட்சியாளர் பெரியார், எஸ்.சந்த் & கோ, சென்னை - 2; மு.ப. 1979.

33. சுப்பிரமணியன்.வ. — வாழ்வியற் கவிஞர்கள், புது இலக்கியப் பதிப்பகம், சென்னை - 1; மு.ப. ஜுலை 1967.

34. சுப்பையா.வ. (ஆங்கில மூலம்) காசி வில்லவன் (தமிழில்) — பிரெஞ்சு இந்திய விடுதலை இயக்க வரலாறு, அலமு நிலையம், சென்னை - 17; மு.ப. திசம்பர் 1991.

35. செல்லப்பன் டாக்டர். கா. — ஒப்பியல் தமிழ், எமரல்ட் பதிப்பகம், சென்னை - 2; 1987. (ப.இ.)

36. நெடுஞ்செழியன் நாவலர். இரா. — புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை - 18; மு.ப. 1994.

37. பத்மநாபன். ரா.அ. — சித்திரபாரதி, பாரதியார் சங்கம், சென்னை. தி.இ.ப. 1992.

38. பரமசிவன் தொ. — பாரதிதாசன் அவரும்அவர்தம் படைப்பாற்றலும், பாரதிதாசன் அறக்கட்டளை, மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி; மு.ப. அக்டோபர் 1999.

39. பரமேஸ்வரன் டாக்டர். பா. — பாரதிதாசன், வால்ட்விட்மன் இருபெரும் புரட்சிக்கவிஞர்கள், ஓர் ஒப்பிலக்கிய ஆய்வு, அன்பு பதிப்பகம், சென்னை - 14; மு.ப. டிசம்பர் 1987.

40. போரிஸ் புர்த்தின் — அரசியல் சொற்களஞ்சியம், சோவியத் நாடு பிரசுரங்கள், சென்னை - 17, 1979.

41. மத்சுலேன்கோ. வி.அ. பாஸ்கரன் .இரா (தமிழில்) — இரண்டாவது உலகயுத்தம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ; 1986. (ப.இ.)

42. மருதநாயகம் முனைவர். ப. — மேலைநோக்கில் தமிழ்க்கவிதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113; மு.ப. 2001

43. மன்னர் மன்னன் — கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல், முத்துப் பதிப்பகம், விழுப்புரம் - 2; மு.ப. 1985.

44. முத்தையா.ப — புரட்சிக்கவிஞர், நாவலர் பதிப்பகம், திருச்சி; இ.ப. சனவரி 1947.

45. முருகுசுந்தரம் கவிஞர் — பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், அன்னம் (பி) லிட், சிவகங்கை; மு.ப. திசம்பர் 1990.

46. ரகமி — ஜய்ஹிந்த் செண்பகராமன், பூரம் பதிப்பகம், சென்னை - 33; மு.ப. 1990.

47. ரகுநாதன் தொ.மு.சி — அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட். சென்னை - 98; மு.ப. டிசம்பர் 1977.

48. ராம்.என். — தென்வியட்நாமில் புரட்சி அரசு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), தமிழ் மாநிலக்குழு, மதுரை - 1; மு.ப. நவம்பர் 1972.

49. கழகப் புலவர் குழு — பழந்தமிழ் இதழ்கள், சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை - 18; மு.ப. 2001.

50. தமிழக ஈழ நட்புறவுக்கழகம் — இலங்கையில் ஈழம், வெ. 1, சென்னை - 18; செப்டம்பர் 1975 (ஆ.பெ.இ.)

III. இதழ்களும் மலர்களும்

1. ஊழியன் (வாரஇதழ்) 7.6.1935, 5.7.1935.
2. குடிஅரசு (வாரஇதழ்) 9.10.1932.
3. குயில் (கிழமை இதழ்) 1958 - 61.
4. குயில் (தமிழ்த்தினசரி) 1948.
5. குயில் (மாதவெளியீடு) 1947 - 48.
6. சக்தி (மாதவெளியீடு) 1942, 1943.

7. சங்கொலி (வாரஏடு) 23.08.2002.
8. சுதந்திரம் (வாரஇதழ்) புதுவை 22.12.1937.
9. தமிழ்முரசு (மாதஇதழ்) ஆகஸ்டு 1946.
10. திராவிடநாடு (வாரஇதழ்) 25.3.1945, 1.4.45, 29.4.51.
11. தினகரன் (நாளிதழ்) இலங்கை 11.7.1959.
12. தினச்செய்தி (நாளிதழ்) 29.04.1979.
13. நகரதூதன் (வாரஇதழ்) 11.3.34.
14. பாரதிதாசன் குயில் (இலக்கியத் திங்களிதழ்) 1967 - 1968.
15. பாலம் (இலக்கிய மாத இதழ்) சூலை 1990
16. புதுவை முரசு (வாரஇதழ்) 1930-1932.
17. புதுவை முரசு (வாரஇதழ்) 1954.
18. புதுவை முரசு விசேஷ அநுபந்தம் மார்ச் 1932.
19. மணிக்கொடி (வார இதழ்) 18.2.1934.
20. முரசொலி (நாளிதழ்) புதையல் ஞாயிறுமலர் 9.8.1998.
21. விடுதலை (நாளிதழ்) 22.9.58, 29.9.58.
22. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்(ஓர் மாதாந்தக் கவிதைப் பத்திரிகை) 1935.
23. ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (திங்கள் கவிதை இதழ்) 1980-1986.
24. ஆண்டுமலர் 1979-80, சிந்தனையாளர் கழகம், இந்திய உணவுக்கழகம், சென்னை துறைமுகப்பிரிவு, சென்னை.
25. கவிஞர்மலர், டி.என்.ராமன், ப.கண்ணன் (செயலாளர்கள்) குயில் நிலையம், சென்னை, 28.7.1946.
26. பாரதிதாசன் மலர், தாமரை, ஏப்ரல் 1960.

IV. ஆங்கில நூல்கள்

1. Bruce P.Lenman (Consultant Editor) Katharine Boyd (Managing Editor) - **Chambers Dictionary of World History**, Chambers Harrap Publishers Ltd., Edinburgh; 1993.
2. Ghosal H.D., Sen S.Dr. Prasad Kumar Nayak, Mansukhani G.S. Dr. (General Editors) - **Unique Quintessence of International Relations**, Unique Publishers, New Delhi, 24; 1996.

3. Hiranmay Karlekar (Editor) - **Independent India The First fifty years**, Indian Council for Cultural Relations, Delhi; 1998.

4. Ram.N. - **Riding The Nuclear Tiger**, Leftword Books, New Delhi; 1999.

5. **A Hundred years of the Hindu**, The Epic Story of Indian Nationalism (published by The Hindu) September, 1978.

6. **The Encyclopedia Americana**, International Edition Vol. 14, Americana Corporation, New York; 1974.

7. **The Hutchinson Dictionary of Ideas**, Helicon Publishing Ltd., Oxford, Revised Paperback Edition 1995.

8. **The New Encyclopaedia Brittannica** in 30 Volumes, Volumes 9 & 18, Encylopaedia Brittannica Inc. Chicago; 1981.

9. **The World Book Atlas**, World Book Encyclopedia, Inc. Chicago; 1980.

10. **The World Book Encyclopedia**; Volumes 12 & 20, World Book Child craft International, Inc, U.S.A., 1981.

நாட்டுடைமையாக்கப்பட்ட நல்லறிஞர்களின் நூல் வரிசை

	ரூ.
வரும்புயல் நாங்கள்	160
நண்பகல் ஞாயிறு	120
இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்	70
பாவேந்தரின் உலக நோக்கு	80
பாவேந்தர் பாரதிதாசனின் பழம் புதுப் பாடல்கள்	320
அலைகள்	160
இராமலிங்க அடிகள்	210
இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை	130
லியோ டால்ஸ்டாய்	60
மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.	100
பல்லவர் வரலாறு	230
பாண்டியன் நெடுஞ்செழியன்	70
சேதுபதி மன்னர் கல்வெட்டுகள்	150
தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	170
தமிழக ஊரும் பேரும்	270
இசைத் தமிழ்	140
நந்தி வர்மன்	130
அமுதும் தேனும்	60
உலக விஞ்ஞானிகள்	60
நான்கண்ட நாடகக் கலைஞர்கள்	50
அறிவுக்கு உணவு	50

பாவேந்தரின் உலக நோக்கு ரூ. 80.00